


30 ஆவது ஆண்டில்
# விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com




நதி: 30 பாலம்: 10 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் MAY 15, 2020

# ஒன்ராறியோ கட்டுப்பாடுகளைத் தளர்த்துகிறது!

ஒன்ராறியோ மாகாண அரசு சுகாதார முதன்மை வைத்திய அதிகாரியின் ஆலோசனையின்படி ஒன்ராறியோ சட்ட மன்றத்தின் ஒப்புதலுடன் 2020 மே 12இல் அவசரகால நிலைப் பிரகடனத்தை 2020 ஜூன் 02 திகதி வரையும் நீடித்துள்ளது. ஒன்ராறியோ மாகாண அரசு அவசரகால நிலைப் பிரகடனத்தை 2020 மார்ச் 17இல் அமுலுக்குக் கொண்டு வந்தது. பின்னர் 2020 ஏப்ரல் 14இல் அதை மே 12வரை நீடித்தது. தற்போது இந்த அவசரகால நிலை ஜூன் 02வரை நீடிக்கப்பட்டுள்ளது. இந்த அவசரகால நிலைப் பிரகடனம் மாகாண அரசிற்கு கோவிட்-19 தொற்று நோய் பரவலின்போது மக்களின் ஆரோக்கியத்தையும் பாதுகாப்பையும் வலியுறுத்தத் தன்னாலான எதையும் செய்யும் தகுதியை வழங்குகிறது. இந்த அவசரகால நிலைப் பிரகடனத்தைப் பாவித்தே மாகாண அரசு கோவிட்-19 தொற்று நோய் பரவலின் வேகத்தை மட்டுப்படுத்த: பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள், தனியார் பள்ளிக்கூடங்கள், பொது நூலகங்கள், குழந்தை பராமரிப்பு மையங்கள், சினிமா அரங்குகள், நாடக அரங்குகள் மற்றும் எடுத்துச்செல்லும் (take-out) உணவு வழங்கலைத்தவிர்த்து உணவகங்கள், மதுபானம் பரிமாறும் இடங்கள் என்பனவற்றை மூட உத்தரவிட்டது. அத்துடன் ஒரு குடும்பத்தில் ஐவருக்கு மேல் ஒன்றாக ஒரு வீட்டில் வாழ்ந்தால் தவிர ஏனைய பொது இடங்களில் ஐவருக்கு மேல் கூடுதலும் தடை செய்யப்பட்டது. அத்துடன் அடிக்கடி கை கழுவுதல், இருவருக்கிடையே 2 மீற்றர் சமூக இடைவெளியைப் பேணுதல் போன்ற சுகாதார முறைகளும் அமல்படுத்தப்பட்டன.

இவ்வாறான நடவடிக்கைகளால் ஒன்ராறியோ மாகாணம் உட்பட கனடாவின் 10 மாகாணங்களும் 3 பிரதேசங்களும் கோவிட்-19 தொற்றுநோய் பரவலின் வேகத்தைக் கனடாவில் மட்டுப்படுத்தி இந்தத் தொற்று நோயின் தீவிர



தாக்கத்தால் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கையைக் கட்டுப்பாட்டுக்குள் வைக்கக் கூடியதாக இருந்தது.

அப்படியிருந்தும் நாடு முழுவதும் இதுவரை 70 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கோவிட்-19 தொற்று நோயால் பாதிக்கப்பட்டும் அதில் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துமுள்ளனர். பாதிக்கப்பட்டோரில் அரைவாசிக்கு மேற்பட்டோர் குணமடைந்து விட்டனர் என்பது நல்ல செய்தியே.

ஒன்ராறியோ மாகாண அரசு அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்திய பின்னர் எடுத்த நடவடிக்கைகள் கோவிட்-19 தொற்றுநோய்ப் பரவலின் வேகத்தை ஒன்ராறியோவில் மட்டுப்படுத்தியிருந்தாலும் அது சில பக்க விளைவுகளையும் உருவாக்கியிருந்தது. பொருளாதார முடக்கத்தால் பெரும்பாலானோர் வேலையை இழக்க வேண்டி ஏற்பட்டது. வேலை இழக்காமல் சுகதேகியாக இருந்த பலரும் பல்வகையான மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டனர். கனேடிய மன நல சங்கத்தின் (Canadian Mental Health Association) ஒன்ராறியோக் கிளை அண்மையில் நடத்திய கணக்கெடுப்பின் படி, 53%ஆனோர் தங்கள் மன நலத்தைப் பற்றி கவலைப்படுவதாகவும், 67% ஆனோர் தங்களுடைய அன்புக்குரியவர்களின் மனநலம் பாதிக்கப்படப்போவதாகக் கவலைப்படுவதாகவும் கூறியிருந்தனர்.

இந்தக் கணக்கெடுப்பை கனேடிய மன நல சங்கத்தின் ஒன்ராறியோக் கிளை 1,001வரிடம் இருந்து பெற்ற தகவலில் இருந்து வெளியிட்டிருந்தது. இந்தக் கணக்கெடுப்பில் பங்குபற்றியோரில் 23% ஆனோர் தமது போதைவஸ்துப் பாவனை (மதுபானம், கஞ்சா, புகையிலை) தற்போது அதிகரித்துள்ளதாகவும் குறிப்பிட்டிருந்தனர். இக்கணக்கெடுப்பில் பங்குபற்றியோர், சில நாட்கள் உணவுப் பற்றாக்குறை ஏற்படுமா எனக் கவலைப்படுவதாகவும், வேறு சில நாட்கள் வீட்டில் இருக்கும் பிள்ளைகளை நாள் முழுவதும் எவ்வாறு நல்ல விடயங்கள் மற்றும் நல்ல பொழுதுபோக்குகளில் கவனத்தைச் செலுத்துமாறு பார்த்துக்கொள்ள முடியும் எனக் கவலைப்படுவதாகவும் கூறியுள்ளனர்.

“மனிதர்கள் வீட்டுக்குள்ளேயே அடைபட்டு எந்நேரமும் இருப்பது இயல்பானது அல்ல. அதிஷ்டவசமாக அரசு எடுத்த

(தொடர்ச்சி 03ஆம் பக்கம்...)






























EXPERIENCE THE DIFFERENCE
RE/MAX ACE
REALTY INC., BROKERAGE
1286 Kennedy Rd Scarborough Ont M1P 2L5
Thas Thirunavukkarasu Dip-in-Eng(Hons)
Broker, ABR, SRS
416.388.4333
thasremax@gmail.com www.soldbythas.com
Buy A Condo With 1% Deposits Every 30 Days!*
Simcoe St N / Winchester Rd E
$469,000
Townhouse - 2BR + 3WR
9th Line / Hwy 7 - Markham
$524,999
Townhouse - 2BR + 2WR
Markham.
From $777,400
Occupancy 2021
Freehold Townhouses
Eglinton & Danforth - Toronto
$539,000
Condo Apt. - 2BR + 1WR
Major Mackenzie/Via Campanile
$1,299,000
Detached 4-BR/3WR
108 Corporate Dr.- Toronto
$230,000
Commercial
582 Danforth Rd -Toronto
$34,000
Retail/ Office/ Food




அம்மா
Amma Pawn Broker
தங்க நகை அடைவு மாடம்
கனேடிய அரசின் அங்கீகாரம் பெற்று முழுக் காப்புறுதி செய்யப்பட்ட முதன்மையான அடைவுச்சேவை
உங்கள் பழைய நகைகளை அதியுயர் பெறுமானத்திற்கு எம்மிடம் விற்றுக்கொள்ளலாம்
1.5% முதல் 2.0% வட்டி மட்டுமே
(per month)
உங்கள் நகைகளுக்கு அதிகூடிய பெறுமதியையும் மிகக்க குறைந்த வட்டி வீதத்தையும் பெற்றுக்கொள்ள நகரின் மத்தியில் ஒரே நிறுவனம்
416-757-0034
416-994-3861
105A - 2425 Eglinton Ave. E, Scarborough
ammapawnbroker@gmail.com
கடைக்குப் பின்புறத்தில் போதிய வாகனத் தரிப்பிடங்கள்
Shankar& Co. வுக்கு அருகாமையில் உண்டு
எவ்வளவு தொகையானாலும் மிகக் குறைந்த வட்டியுடன் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்
நம்பிக்கை நாணயம் உத்தரவாதம்

# ஒன்ராரியோ...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

நடவடிக்கைகளால் எமது வைத்தியசாலைகளில் உள்ள தீவிர சிகிச்சைப் பிரிவுகள் (Intensive care units) நிரப்பப்படாமல் தவிர்க்கப்பட்டுள்ளன. தற்போது அரசு ஏன் இன்னமும் கட்டுப்பாடுகளைத் தளர்த்தவில்லை என்ற மக்களின் கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டும்” என Toronto Sun ஊடகம் தனது ஆசிரியர் தலையங்கத்தில் மே 11இல் எழுதியிருந்தது.



கனடாவில் கோவிட்-19 தொற்றுநோய்ப் பரவலால் பாதிக்கப்பட்ட 70 ஆயிரத்துக்கும் மேற்பட்டோரில் அதிகம் பாதிக்கப்பட்ட குவிபெக் (55%) மற்றும் ஒன்ராரியோ (30%) மாகாணங்களைத் தவிர ஏனைய எட்டு மாகாணங்களும் மூன்று பிரதேசங்களும் மெதுவாகத் தங்கள் கட்டுப்பாடுகளை ஏற்கனவே நீக்கத் தொடங்கியுள்ளனர். கட்டுப்பாடுகள் படிப்படியாக நீக்கப்பட்டாலும் மக்கள் தொடர்ந்து விழிப்புடனேயே இருக்க வேண்டும். அவர்கள் தொடர்ந்து அடிக்கடி கை கழுவுதல், இருவருக்கிடையே 2 மீற்றர் சமூக இடைவெளியைப் பேணுதல் போன்ற அடிப்படை சுகாதார முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

குவிபெக் மாகாண அரசும் கோவிட்-19 தொற்றுநோய்ப் பரவலால் அதிகம் பாதிக்கப்பட்ட மொன்றியல் (30%) பிரதேசத்தை தவிர ஏனைய இடங்களில் ஆரம்பப் பாடசாலைகளை மே 11இல் இருந்து திறந்துள்ளது. இப்பாடசாலை ஆசிரியர்: மேசைகளை நகர்த்தி மாணவர்களுக்கு இடையே இரண்டு மீட்டர் தூரம் வரக்கூடியதாக வைத்தல், பொது இடங்களில் இரண்டு மீட்டர் இடைவெளியில் அடையாளம் இடுதல், குறைந்த மாணவர்களைக் கொண்ட வகுப்பிற்கு ஏற்றவாறு அட்டவணைகளை மீள அமைத்தல் போன்ற வேலைகளை பாடசாலை திறக்க முன்னர் இரண்டு கிழமையாகச் செய்தனர்.

மாணவர்கள் தங்களது மதிய உணவை தமது ஆசனத்தில் இருந்தே உண்ண வேண்டும். ஒரு வகுப்பு மாணவர்களுக்கு ஏனைய வகுப்பு மாணவர்களுடன் தொடர்பு ஏற்படுத்தக் கூடிய எந்த வாய்ப்புகளும் தவிர்க்கப் பட்டுள்ளன. மாணவர்கள் வெளியில் சென்று விளையாடுவதற்கு வசதியாக ஒவ்வொரு வகுப்பிற்கும் வெவ்வேறு நேரம் இடைவேளை விடப்படும். குவிபெக் இல் மொன்றியல் பிரதேசம் தவிர ஏனைய இடங்களில் சிறுவர் மற்றும் குழந்தை பராமரிப்பு நிலையங்களும் மே 11இல் இருந்து திறக்கப்பட்டுள்ளன. இதைவிடப் பல கடைகளும் இவ் இடங்களில் வியாபாரத்துக்காகத் திறக்கப்பட்டுள்ளன.

ஒன்ராரியோ மாகாணம் தனது ‘மூன்று கட்டமாகக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தும் திட்டம்’ஐ ஏப்ரல் 27இல் வெளியிட்டுள்ளது.

**முதலாவது கட்டம்:** தற்போது அமலில் இருக்கும் சுகாதாரக் கட்டுப்பாடுகளைக் கடைபிடிக்கக் கூடிய வேலைத்தளங்களைத் திறத்தல். குறிப்பிட்ட அளவு மக்களை அத்தியவசியமான தேவைகளுக்காகக் கூடுவதை அனுமதித்தல். சில வெளிப்புற இடங்களைப் பொதுமக்களுக்குத் திறந்து விடுதல். பாதிக்கப்படக்கூடிய (vulnerable) மக்களுக்குத் தொடர்ந்தும் பாதுகாப்பு வழங்குதல்.

**இரண்டாவது கட்டம்:** சுகாதாரக் கட்டுப்பாடுகளை ஏற்படுத்தக்கூடியவாறு அமைப்புகளை உருவாக்கும் வேலைத் தளங்களைத் திறத்தல். பெரிய பொதுக் கூட்டங்களை அனுமதித்தல். கூடுதலான வெளிப்புற இடங்களைப் பொதுமக்களுக்குத் திறந்து விடுதல். பாதிக்கப்படக்கூடிய மக்களுக்குத் தொடர்ந்தும் பாதுகாப்பு வழங்குதல்.

**மூன்றாவது கட்டம்:** அனைத்து வேலைத் தளங்களையும் திறப்பதுடன் அவர்களை அடிப்படை சுகாதார முறைகளைப் பேண வலியுறுத்துதல், பொதுக்கூட்டங்கள் மீதான கட்டுப்பாடுகளை தளர்த்துதல், பாதிக்கப்படக் கூடிய மக்களுக்குத் தொடர்ந்தும் பாதுகாப்பு வழங்குதல்.

இவ்வாறு மூன்று கட்டத் திட்டங்களை ஒன்ராரியோ அரசு வெளியிட்டாலும் அதை அமல்படுத்தத் தொடங்கும் திகதியை அறிவிக்காமல் அதற்குச் சில நிபந்தனைகளை விதித்தது.

அதாவது ஒவ்வொரு கட்டமும் ஆரம்பிக்க முன்னர் ஒன்ராரியோ மாகாணத்தில் கோவிட்-19 தொற்றுநோய்ப் பரவல் இரண்டிலிருந்து நான்கு வாரங்களிற்குத் தொடர்ந்து குறைந்து கொண்டு வர வேண்டும். அத்துடன் பாதிக்கப்படக்கூடிய மக்களுக்குக் கோவிட்-19 தொற்று ஏற்பட்டுள்ளதா எனச் செய்யப்படும் பரிசோதனையை உடனடியாகச் செய்யக் கூடிய நிலை ஏற்படவேண்டும் என அந்த நிபந்தனைகள் தெரிவித்துள்ளன.

ஒன்ராரியோ மாகாண அரசு மே 08இல் இருந்து பூக்கன்றுகள் மற்றும் தோட்டம் செய்யத் தேவையான பொருட்கள் விற்கும் (Garden centres and Nurseries) இடங்கள் தமது நிறுவனங்களைத் திறக்கலாம் எனவும் அவர்கள் தற்போது இயங்கும் மளிகைக் கடைகள் மற்றும் மருந்துக் கடைகள் கடைப்பிடிக்கும் சுகாதார முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளது.

மே 09இல் இருந்து இரும்புப் பொருட்கள் (Hardware) மற்றும் பாதுகாப்புத் தேவைக்குப் பாவிக்கும் உபகரணங்கள் (Safety supply) விற்கும் இடங்கள் தமது நிறுவனங்களைத் திறக்கலாம். ஆனால் தற்போது இயங்கும் மளிகைக் கடைகள் மற்றும் மருந்துக் கடைகள் கடைபிடிக்கும் சுகாதார முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என தெரிவித்தது.

(தொடர்ச்சி 09ஆம் பக்கம்...)




ALL LINK TRAVEL INC.
SPECIALIZE IN DESTINATION, EUROPE TOURS AND CRUISES ALL OVER THE WORLD.
WE MATCH AND BEAT ALL INTERNET PRICES
கட்டணங்கள் நிபந்தனைக்கு உட்பட்டவை
ALL INCLUSIVE CHEAPEST TOUR PACKAGE TO:
DOMICAN REPUBLIC: $850
MEXICO: $815
CUBA: $585
July, August & September
COLOMBO: $1150
CHENNAI: $1100
BENGALOORU: $1130
LONDON: $680
PARIS: $895
GERMANY: $695
வேறு எந்த விமான பிரயாணச்சீட்டு முகர்வர்களிடமும் கிடைக்காத மிகவும் குறைந்த கட்டணம்!!
• Scarborough • Ajax • Brampton • Mississauga • Etobicoke
3300 McNicoll Ave. Scarborough, ON, M1V 5J6
CONTACT SUTHA: 416 293 8700


FOR SALE
LIVE OR INVEST
WHERE ONLY MILLIONAIRES GOING TO LIVE
STARTING FROM
1.2 Mil
New Condo In Whitby
CHARLOTTE
From the Low $300's
To get Exclusive Special Contact me
Sothees Means The Best Service You Will Ever Get!
SOTHEES KATHIRGAMATHAMBY
Cell: (416) 704-1179 OR
Toll Free: 1 855 SOTHEES (768-4337)
sothees.com


அரிய சந்தர்ப்பத்தைத் தவற விடாதீர்கள்!
முற்றிலும் இலவசமான சேவை!
12வருடத்திற்கு மேற்பட்ட
உங்கள் Gas Furnace இற்கான CO அளவீடு
வீட்டிற்கு வந்து பரிசோதிக்கப்படும்.
AATEK HEATING & COOLING
$2100 Rebate Available Now
call us 416-414-2280
FREE Inspection in GTA
Over 10 yrs in Business Experience
Flat Rate Pricing
Parts and Labour guarantee
Guaranteed Repairs
Professional Service
Fully Insured
Gas Furnaces, Air Conditioners,
Thankless Water Heater, Gas line install
10 வருடங்களுக்கு மேலாக ரொரண்டோவின் முன்னணி நிறுவனங்களில் பணியாற்றிய அனுபவத்துடன்
Licensed Technician | ELENGO THIYAGARAJAH
ALL MAJOR APPLIANCES E : aatekcanada@gmail.com
We Are Specialists in customs homes Ductwork System
We Are Professional trouble shooters for all major gas appliances
416.414.2280

# MORTGAGE

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் ( OAC*)

⇒ லைன் ஒப் கிரெடிட் (HELOC)

⇒ Private 1st Mortgage
(No Income Verification)

⇒ ரீபைனான்ஸ்,Title Transfer, ரினிவல்

⇒ 2வது, 3வது மோட்கேஜ் (Funded within 48hrs)

⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கான மோர்ட்கேஜ்

⇒ எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க

⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட

MORTGAGE IN ANY SITUATION

**கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல்**
**வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?**

MORTGAGE CLINIC



www.mortgagecliniccanada.com
உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது



**Cell : 416-624- 4843**
416-613-2788 / 416-816-9011

ஜெ(Jey)இராசதுரை
MBA. BBA (Hon) AMP
Team Leader / Mortgage & Real Estate Broker

RIGHT AT HOME REALTY INC.

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

Brokerage: 112-895 Don Mills Rd, Toronto ON M3C 1W3 Corp office : 200-2005 Sheppard Ave E, Toronto ON M2J 5B4

# சுய கட்டுப்பாடே இயல்பு வாழ்க்கையை கொண்டுவரும்

**– விகிர்தன் –**

இலங்கை கொரோனா வைரஸ் பாதிப்பில் இருந்து முழுவதுமாக மீள்வதற்கு முன்பாகவே நாட்டில் இயல்பு நிலையை ஏற்படுத்துவதற்கான ஆரம்பக் கட்ட நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த ஊரடங்கு சட்டத்தில் தற்போது தளர்வு நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் அதிகமாக அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், அவ்விரு மாவட்டங்கள் தவிர்ந்த இலங்கையின் ஏனைய மாவட்டங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்டுள்ளது. இரவு ஊரடங்கு மட்டுமே நடைமுறையிலுள்ளது. அரச அலுவலகங்கள், தனியார் நிறுவனங்கள், வணிக நிலையங்கள் யாவும் திறக்கப்பட்டுள்ளன. வீதிகளில் மக்கள் நடமாட்டம் அதிகரித்துள்ளது. தொழிலாளர்கள் நீண்ட நாட்கள் வீடுகளில் முடங்கியிருந்த நிலையில், மீண்டும் தொழில்களுக்குச் செல்லத் தொடங்கியுள்ளனர்.

ஊரடங்கு தளர்த்தப்படாத கொழும்பு, கம்பஹா ஆகிய மாவட்டங்களிலும் ஊரடங்கு வேளையிலேயே கட்டுப்பாட்டுடனான இயல்பு நிலையொன்று தோற்றுவிக்கப்பட்டுள்ளது.
உலகில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள நாடுகள் கூட, அந்நாடுகளில் விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள், தடைகளை நீக்க ஆரம்பித்துள்ளன. தொடர்ந்து தொற்றாளர் எண்ணிக்கை அதிகரித்து வரும் வேளையிலும், உயிரிழப்புகள் தொடர்ந்து கொண்டிருக்கும் நிலையிலும் இயல்பு நிலையை ஏற்படுத்த அந்நாடுகள் முயன்று வருகின்றன. தொழிற்சாலைகளை திறந்து தொழில் நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிப்பது, கல்வி நடவடிக்கைகளை மீளத் தொடங்குவது மட்டுமன்றி, மக்களுக்காகப் பூங்காக்களைக் கூடத் திறந்து விடும் நடவடிக்கைகளையும் அந்த நாடுகள் மேற்கொண்டு வருகின்றன.

இதற்கு இரண்டு முக்கிய காரணங்கள் உள்ளன. ஒன்று பொருளாதாரம் வீழ்ச்சியுறும் நிலையிலிருந்து நாட்டையும், மக்களையும் காப்பாற்ற வேண்டும் என்பது. இரண்டாவது உளவியல்



பாதிப்பிலிருந்து மக்களை மீட்டெடுக்க வேண்டும் என்பது. பொருளாதாரத்தை மீட்டெடுப்பதென்பதே முதன்மையான காரணமாகும். இந்த நிலையில் மிகக் குறைவான பாதிப்பிற்கு உள்ளாகியுள்ள இலங்கை கொரோனாவிற்கான இறுக்கங்களை தளர்த்தி, இயல்பு வாழ்க்கையை மீளக் கொண்டுவரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தொடங்கியிருப்பது வரவேற்கத்தக்கதும், சரியானதுமான செயற்பாடே.

இலங்கையில் கொரோனாவால் பாதிக்கப்பட்டோரின் தொகை இன்னமும் ஆயிரத்தை எட்டவில்லை. உயிரிழப்புக்களின் எண்ணிக்கை இன்று வரை ஒன்பதாகவே உள்ளது. இதை விடவும் கொரோனா தொற்று அடையாளம் காணப்பட்டோர் நூற்றுக் கணக்கானோர் சிகிச்சை பெற்றுக் குணமடைந்துள்ளனர். இன்று சமூக மட்டத்தில் கொரோனா பரவல் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அன்றாடம் அடையாளம் காணப்படும் கொரோனா தொற்றாளர்கள் கடற்படையினராகவே உள்ளனர். கடற்படையைச் சேர்ந்த ஒரு சிலருக்கு ஏற்பட்ட தொற்று மளமளவென பரவத் தொடங்கியதாலேயே அவர்கள் மத்தியில் இத்தொற்று அதிகமாகத் தொடங்கியது. இவ்வாறு தொற்றுக்குள்ளான கடற்படையினரும் சிகிச்சை பெற்று குணமடைந்து வருகின்றனர். அவர்களின் உயிரிழப்பு எதுவும் இதுவரை பதிவாகவில்லை.

இந்த நிலையில்தான் இயல்பு நிலைக்கான வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. பொதுமக்கள் தாங்களாக கடைப்பிடிக்கும் சுய கட்டுப்பாடே இயல்பு நிலையின் அடுத்தடுத்த கட்டம் தோற்றம்பெற முடியும், இவ்வாறு நடைபெறுகின்ற போது, இடையில் ஏற்பட்ட பொருளாதார சரிவிலிருந்தும் மக்கள் மீண்டெழ முடியும். பொருளாதாரத்தை சரிவு நிலையிலிருந்து பாதுகாப்பதே அரசாங்கத்தின் பிரதான நோக்கமாகவும் உள்ளது. கொரோனாவிலிருந்து மக்களைக் காப்பாற்றும் நடவடிக்கைக்கு அப்பால் வறுமை மற்றும் பட்டினிச்சாவிலிருந்தும் அவர்களைக் காப்பாற்ற வேண்டியுள்ளது. தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ள தளர்வு நிலையில் மக்கள் தங்கள் தொழில்களை மீளத் தொடங்குவதையும், காலையில் எழுந்து தங்கள் தொழில்களுக்கு மீண்டும் செல்லத் தொடங்கியிருப்பதையும் பார்க்கும் போது, மனதில் ஒரு நம்பிக்கை துளிர்விடுகின்றது.

எனினும், மக்களின் நடமாட்டங்களில் கட்டுப்பாடற்ற நிலைமைகளையும் காண்கின்றபோது, மீண்டும் ஓர் அச்சநிலையும் மனதில் தோன்றுகின்றது. கடந்த 11ஆம் திகதிதான் ஊரடங்கு இறுக்கம் தளர்த்தப்பட்டது. அடுத்த நாளே பொதுமக்களின் நடவடிக்கைகள் தொடர்பில் கேள்விகள் எழத் தொடங்கியுள்ளன.

சுகாதார நடைமுறைகள் தொடர்பில் பொதுமக்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ள போதும் அதனை அவர்களில் சிலர் முறையாகக் கடைப்பிடிக்கத் தவறி வருகின்றனர். முகக்கவசம் அணிவது, சமூக இடைவெளியைப் பேணுவது இரண்டும் கொரோனா பரவலைக் கட்டுப்படுத்தும் மிக முக்கியமான நடைமுறைகளாக அறிவுறுத்தப்பட்டுள்ள நிலையில் பொதுமக்கள் அதனை சரியாக நடைமுறைப்படுத்துவதில் கவனம் செலுத்துவதில்லை.

மூடப்பட்டிருந்த மதுபான நிலையங்கள் மீண்டும் திறக்கப்பட்டுள்ள நிலையில், சுகாதார நடைமுறைகளை மீறி மதுப்பிரியர்கள் மதுக்கடைகளின் முன்பாக அலைமோதும் காட்சிகள் அருவருப்பை ஏற்படுத்துகின்றது. சில இளைஞர் குழுக்கள் தான்தோன்றித்தனமாக நடந்து கொள்வதைக் காண ஆத்திரம் வருகின்றது. கொரோனா ஒருவருக்குத் தொற்றினால் அவருடன் மட்டும் முடிந்துவிடும் கதை இல்லை. ஒன்று பத்தாகி, பத்து நூறாகி, நூறு ஆயிரமாகி மேலும் கடந்து சென்று அனைவரையும் அழித்தொழித்து விடும் என்பதை இவர்கள் ஏன் உணர்கின்றனர் இல்லை?

நாட்டில் தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ள இயல்பு நிலையை பாதுகாப்பதில் பொதுமக்களின் பங்களிப்பு சரியானதாக இல்லை என்று பாதுகாப்புத் தரப்பின் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனால், பொலிஸ் மற்றும் இராணுவத்தினரால் பொதுமக்கள் மீதான கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகத் தெரிகின்றது. இது ஓர் அழுத்த நிலைமையை ஏற்படுத்தலாம் எனினும், வேறு வழியில்லை என்றே தோன்றுகின்றது. போரின் பின்னர் தமிழ் பிரதேசங்களில் சிவில் நிர்வாகங்களில் படையினரின் தலையீடு அதிகரித்துக் காணப்பட்டது. அதனை நீக்க வேண்டும் என்று பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. இப்போது கொரோனா பரவலை முன்னிறுத்தி மீண்டும் ஒரு கண்காணிப்பு-அழுத்தம் என்பன ஏற்படுத்தப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. ஆனால் மக்களில் சிலரே அதற்கு வழிவகுத்துக் கொடுக்கின்றனர்.

ஊரடங்கு தளர்த்தப்பட்டு, கட்டுப்பாட்டுடனானதொரு இயல்பு நிலை ஏற்படுத்தப்பட்டமைக்கு மக்களின் பொருளாதாரத்தை இயல்பு நிலைக்குக் கொண்டுவருவதே நோக்கம் எனவும், இதனால் பொதுமக்கள் சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய நடந்து கொண்டு இந்த நிலையை நீடிக்க உதவ வேண்டும் என்றும் ஒவ்வொரு மாவட்டங்களிலும் உள்ள அரசாங்க அதிபர்கள், சுகாதாரப் பிரிவினர், மருத்துவர்கள் எனப் பொறுப்புமிக்க அனைவருமே பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்து வருகின்றனர். இந்த நிலையில், முழுப்பொறுப்பும் பொதுமக்களின் கைகளிலேயே உள்ளது. தாங்கள் நடைமுறைகளை முறையாகப் பேணி நடப்பதோடு மட்டுமல்லாமல், முறையின்றி நடந்துகொள்வோர் தொடர்பில் சம்பந்தப்பட்டவர்களிடம் முறையிடவும் வேண்டும். இதுவொரு சமூகக் கடமை.



இயல்பு நிலைக்கான நடைமுறைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தாலும், மாவட்டங்களுக்கிடையிலான போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் இன்னும் தளர்த்தப்படவில்லை. வெளியார் வருகையை கட்டுப்படுத்துவது என்பதும் கொரோனா பரவலை கட்டுப்படுத்துவதற்கான ஒரு முக்கியமான நடவடிக்கையே ஆகும். ஆனால் ஏதோ விதங்களில், விதிக்கப்பட்டுள்ள தடைகளையும் கடந்து சிலர் ஊடுருவி வருகின்றனர். குறிப்பாக வியாபாரிகள் இவ்வாறான ஊடுருவல்களை மேற்கொள்கின்றனர். இதனைக் கட்டுப்படுத்த கடுமையான நடைமுறைகள் கொண்டுவரப்பட வேண்டும்.

நாட்டில் கொரோனா தொற்று அபாயம் இன்னும் நீங்கவில்லை. அது மட்டுமன்றி கொரோனாவின் அடுத்தடுத்த அலை தொடர்பாகவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டு வருகின்றது. எனவே, பொதுமக்கள் மிகுந்த பொறுப்புணர்வுடன் நடந்து கொள்வதன் மூலமே முழுவதுமான இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

விளம்பரம்
VLAMBARAM
30 ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலக பொறுப்பாளர்: பிரசாந்தி அருள்தாசன்
பதிப்பு: Canyon Press Inc.

'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059/ FAX: 416-286-0344
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

# கொரோனா தாக்கத்திலிருந்து விடுபட

கொரோனா வைரசின் தாக்கத்தில் இருந்து தப்பித்துக்கொள்ள சில அறிவுரைகளை தமிழ் மக்களிடம் பகிர்ந்து கொள்கின்றார். விரும்பியோ விரும்பாமலோ கொரோனா வைரஸ் எங்களுக்குள் ஊடுருவிக் கொண்டிருக்கிறது. வைரசினால் தாக்கப் படும் நோயாளிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் கூடிக்கொண்டே போகிறது. இந்த வைரஸ் முக்கியமாக நுரையீரலைத் தாக்க முயல்கிறது.



நுரையீரலைத் தாக்கும் பொழுது எங்களுடைய மூச்சின் பிராணவாயுவின் அளவு குறைகிறது. இதற்கு காரணம் முக்கியமாக இந்த வைரஸ் நமது நுரை யீரலின் வெளிப்பாகங்களை அதாவது உள்ளே சென்று அதன் கரைப் பக்கங்களை முக்கியமாகத் தாக்குகின்றது.

எனவே இந்த வைரஸ் தாக்கத்தில் இருந்து தடுக்கும் முறையாக ஒரு சில முறைகளை கையாள்வது நல்ல பலனை கொடுக்கும்.

1. நீராவியில் நீண்ட மூச்செடுத்து மூச்செடுத்து ஆவி பிடிப்பதால் இந்த வைரஸ் தாக்கத்தை உங்களால் குறைக்க முடியும். இந்த நீராவிக்கான நீரின் கொதிநிலையானது 60 டிகிரிக்கும் மேல் இருக்கவேண்டும்.அந்தக் கொதிநிலையில் இந்த வைரஸ் உயிரோடு இருக்காது. அத்துடன் மூச்சு துவாரங்கள் வாயினால் நீராவியை எடுக்கும்போது அதில் ஒளிந் திருக்கும் வைரசையும் அழிக்க முடியும்.
2. யோகா பயிற்சி செய்வோர் உங்களது மூச்சுப் பயிற்சியை தொடர்ந்து செய்வதால் இப்படியான வைரஸின் தாக்கத்தைக் குறைக்க முடியும். இதையும் மீறி இந்த வைரஸ் உங்களை தாக்கினால் அதற்கு செய்ய வேண்டிய மருத்துவ முறைகள் பின்வருமாறு:


> டாக்டர் செல்வராணி பத்மபாஸ்கரன், லண்டன் எப்சம் பொது மருத்துவ மனை வைத்தியசாலையில் மயக்க மருந்து நிபுணராக (Anesthesiologist) பணி யாற்றுகின்றார். ஆனால் அவர் தற்போது மயக்க மருந்து கொடுப்பது மட்டுமல்லாது அதிதீவிர சிகிச்சைப் பிரிவிலும் கடமையாற்றி வருகின்றார்.

1.சூடாகத் தேனீரை அடிக்கடி குடிக்க வேண்டும்.
2. குப்புற படுக்க வைப்பதன் மூலம் நுரையீரலின் தாக்கத்தைக் குறைக்க முடியும். அப்படி குப்புறப் படுப்பது சிரமாக இருந்தால் இரண்டு தலையணைகளை வயிற்றில் வைத்து முகத்தை ஒரு பக்கம் திருப்பி நீண்ட மூச்சு எடுப்பதால் இந்த வைரசின் தாக்கத்தை குறைக்க முடியும்.
அதிதீவிர சிகிச்சையில் இருக்கும் நோயாளிகளின் பிராணவாயு குறையும் கட்டத்தில் நாங்கள் அவர்களை குப்புற படுக்கவைத்து சில முன்னேற்றங்களை காண்கிறோம்.

அத்துடன் கொரோனா வைரஸ் உள்ளா கியவர்களின் நோயின் தாக்கம் இருதயத்தையும் சிறுநீரகத்தையும் தாக்கி வருகிறது. இது மிகுந்த சவாலை ஏற் படுத்தி உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

பயனுள்ள தகவலுக்கு டாக்டர் செல்வராணி பத்மபாஸ்கரனுக்கு நன்றி,
புலம்பெயர்ந்த தமிழரின் செய்திகள்

# கொரோனாவே!



யார் மீது உனக்கு கோபம்?
பார் மீது ஏனிந்த சாபம்?

பள்ளிகளை மூட வைத்தாய்
தள்ளித் தள்ளி ஓட வைத்தாய்
என் வீட்டை வாட வைத்தாய்
உன் பாட்டைப் பாட வைத்தாய்

இயல்பான வாழ்க்கை முறை
இழந்துவிட்டோம் இன்று வரை
கொண்டு வந்தாய் புதிய சிறை
கண்டு கொண்டோம் எங்கள் குறை

முகத்துக்கு கவசம் அணி
ஒரு மீற்றர் தூரம் இனி
கை கழுவும் பாணி தனி
கை கொடுக்கும் காலம் இனி


உறவெல்லாம் ஏக்கத்தில்
வரவெல்லாம் தேக்கத்தில்
இரவெல்லாம் தாக்கத்தில்
இயங்கிடுவோம் ஊக்கத்தில்

கூடி வாழ்ந்தால் கோடி நன்மை
கூடி வாழ ஏங்குகிறோம்!
ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு
ஆண்டவனை வேண்டுகிறோம்!

முனைவர்
மு. அ. காதர்
சிங்கப்பூர்

# கொரோனாவின் கூத்து!

சான்றாண்மை கொண்டபல் தேயமும் - பலம்
சாற்றிய ஆதிக்க வேர்களும் - யாவும்
கூண்டோடு சாய்ந்து குலைந்திட – எங்கும்
கொல்லும் கொரொனா கலந்திடக் – கண்ணிற்
தோன்றாத நுண்ணுரு வாகவே - வந்து
தோன்றினாய் கோவிட்பத் தொன்பதேழு - இன்று
மூன்றாம் உலகப்போர் மூட்டினாய் - ஞாலம்
முற்றும் ஒடுங்கமெய் வாட்டினாய்!



புத்துரு வாய்வந்து சாடினாய் - துயர்
போக்கும் வழிகளை மூடினாய்! – பலர்
கொத்துக்கொத் தாகவே மாளவும் - இன்னும்
கோடியாய் நோயினில் வீழவும் - மண்ணில்
அத்தனை யும்இயல் பற்றதே – பொருள்
ஆதாரம் பட்டழிந் துற்றதே – மாந்தர்
மொத்தமும் வீட்டுள் முடங்கினார் - தனி
மோன வெளியி லடங்கினார்!

மூத்தோரில் நீகுறி வைத்ததும் - அவர்
மூச்சின் வழியை அடைத்ததும் - எல்லை
சாத்திக் கதவுகள் மூடவும் – மக்கள்
சாவுக்கு அஞ்சியே ஓடவும் - தமக்
கேற்ற இடைவெளி தள்ளியே – தூர
எட்டி ஒதுங்கிடச் செய்ததும் - என்றுன்
கூத்துக்கு எல்லையே இல்லையே– உனைக்
கொன்றொழித் தாலன்றித் தொல்லையே!

கட்டுக் கடங்காது செல்கிறாய் - கண்ணில்
காணாது நின்றெம்மைக் கொல்கிறாய்! – உந்தன்
கொட்ட மொடுக்கவோர் ஆயுதம் - கண்டு
கொன்றள்ளிப் போடுமோர் நாள்வரும்! - நிதம்
தொட்டுத் தொடர்கின்ற பேரிடர் - அதில்
தோற்றதில் லையிந்த மானிடர் – உனில்
விட்டு விடுதலை யெய்துவார் - உயர்
விஞ்ஞானத் தாலுனை வெல்லுவார்!

கேடு விளைகின்ற போதிலே - நன்மைக்
கோடும் விரிந்திடும் கூடவே! - எல்லா
நாடு நகரொடு ஊர்களும் - கொஞ்ச
நாளெனும் மாசற்றுப் போகட்டும்! – சூழ்ந்த
காடும் கடலும் கழனியும் - தூய
காற்றைப் பருகிக் களிக்கட்டும்! - மூளை
தேடும் விஞ்ஞானம் விரியட்டும் - தொற்றுத்
தீரும்நல் நாளும் விடியட்டும்!

மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா

TUTORING
KEEN TUTORING CENTRE
By Qualified & Experienced Tutors
➢ CHEMISTRY, PHYSICS, BIOLOGY
➢ FUNCTIONS, ADV. FUNCTIONS
➢ CALCULUS & VECTORS, DATA MGT
➢ SCIENCE, MATH, ENGLISH
உங்கள் கல்விக்கான சிறந்த தெரிவு
✓ High School ACADEMIC/UNIVERSITY
✓ IB &AP PROGRAMME
✓ MCAT Classes
✓ EQAO GR 3 & 6
GR 9-12, UNIV. 1st & 2nd Yr; "Affordable Fees"
Call: 647 341 3975 / 647 869 3974 / 416 335 5956
www.keentutoringcentre.com

CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!
• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE Tel: 416-289-7514
OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 6, Scarborough, ON M1H 1A7



# நாமும் நமது இல்லமும் 558

## கோவிட்-19 இன் பின் தொழில்கள் எத்தனை திரும்பி வரலாம்?



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

ஏறக்குறைய இரண்டு மாதங்களாகத் தனிமைப்படுத்தப்பட்டிருந்த மக்கள் மெல்ல மெல்ல வெளிவரக்கூடிய காலம் கிட்டுவதாகத் தெரியவருகிறது. கனேடிய அரசின் அவசரகால நிதி உதவிக்கு (Canada Emergency Response Benefit (CERB) 7.6 மில்லியன் மக்கள் விண்ணப்பித்துள்ளனர். வேலையற்றோரின் வீதம் (Unemployment Rate) 20%வரை அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கலாம். மார்ச் மாதத்தில் மட்டும் கனடாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (Gross Domestic Product: GDP) கடந்த வருடத்தின் இதே காலப் பகுதியுடன் ஒப்பிடும்போது 20%வரை குறைந்துள்ளது.


கனேடியர்களில் அதிகமானோர் வேலையற்று இருக்கின்றனர். இந்த நெருக்கடி நிலைமை மற்றைய பொருளாதார நெருக்கடிகளைப் போன்றதல்ல, முற்றிலும் வித்தியாசமானது. உண்மையை கூற வேண்டுமாயின், கோவிட்-19இற்கு முந்திய எதிர்வு கூறல்கள் ஏதாவது எதிர் காலத்தில் சாத்தியமாக இருக்குமா? இன்று எதிர்வு கூறுவோருக்கு இன்றைய நிலைமை முற்றிலும் புதிதானது. இன்றைய நிலைமையில் எத்தனை பேர் வேலைவாய்ப்பை இழந்தனர் என்பதை விட எத்தனை பேர் மீண்டும் வேலை வாய்பைப் பெறுவர் என்பதுதான் சிந்திக்க வேண்டிய விடயம்.

ஏப்ரல் 20 தொடக்கம் ஏப்ரல் 30, 2020 வரையிலான காலப் பகுதியில் 1000 தொழில் வழங்குனரிடம் (employers) எடுக்கப்பட்ட கருத்துக் கணிப்பின் புள்ளி விபரப்படி தற்போதைய நிலைமை இன்னும் 3 மாதங்கள் தொடருமாயின், அரசின் நிதியுதவிகள் இருந்தாலும் ஏற்கனவே மூடப்பட்ட 5% தொழிற் சாலைகளுடன் மேலும் 21%மானோர் தமது தொழிற்சாலைகளை முற்றாக மூட வேண்டிய நிலைமை ஏற்படும் எனவும், மேலும் இந்த நிலைமை ஆறு மாதங்கள் தொடருமாயின் ஏறக்குறைய 46%வீதம் தொழிலகங்கள் முற்றாக மூடப்படலாம் எனவும் தெரிய வருகிறது.

ஒரு நல்ல செய்தி! மே 15, 2020இற்குப் பின்னர் தொழில் வழங்கும் நிறுவனங்கள் பகுதி பகுதியாகத் திறக்க அனுமதிக்கப் பட்டுள்ளன. தொழிற்சாலைகள் சில இறுக்கமான சுகாதார நடைமுறைகளை தொடர வேண்டியிருக்கும். இவை எவ்வாறு வியாபாரத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் என்பது பின்னர்தான் தெரியவரும். மத்திய மற்றும் மாகாண அரசுகளின் தொடர்ச்சியான நிதியுதவிகளாலேயே பல தொழிலகங்கள் இயங்க முடியும் எனவும் இந்த கருத்துக்கணிப்பில் தெரியவருகிறது.

ஆதன வியாபாரத்தின் நிலைமையும் எதிர் காலத்தில் எவ்வாறு இருக்கும் என்பது வேலை இழந்தோரின் எண்ணிக்கையிலேயே தங்கியுள்ளது. ஏற்கனவே புதிதாக மே, ஜூன் மாதங்களில் விற்பனைக்கு வர இருந்த அடுக்குமாடி குடியிருப்புத் தொகுதிகள் செப்ரெம்பர் 2020க்கு பின் போடப்பட்டுள்ளது. அத்துடன் இவ்வருடம் கட்டி முடிக்க இருந்த வீடு மனைகளின் குடியிருப்புத் திகதிகளும் பிற்போடப்பட்டுள்ளது.

கனடாவுக்குப் புதிதாக வருவோரின் எண்ணிக்கையும் எவ்வாறு இவ்வருடம் இருக்கும் என்பது சரியாகக் கணிக்கப்படா முடியாமல் உள்ளது. இதிலும் சில ஆதரவான செய்தியாக, வெளிநாடுகளில் குறிப்பாக ஹொங் கொங் (Hong Kong) நாட்டில் கனடிய கடவுச்சீட்டு (passport) வைத்திருக்கும் பலர் கனடாவுக்கு நிரந்தரமாகக் குடியேற இருப்பதாகத் தெரிய வருகின்றது. ஏறக்குறைய மூன்று இலட்சத்துக்கு மேற்பட்ட கனேடியந கடவுச்சீட்டு வைத்திருப்போர் ஹொங் கொங்கில் வாழ்கின்றனர். இவர்கள் ஏற்கனவே கனடாவில் புதிய மனைகளை வாங்குவதாகத் தெரியவருகிறது. எதிர் காலத்தில் ரொறொன்ரோ மத்தியில் வாழ்வோரும் ரொறொன்ரோவுக்கு வெளியே வாழ நினைத்தாலும் ஆச்சரியப் படத்



தேவையில்லை. கடந்த இரு மாதங்களாக மக்களின் வாழ்க்கைமுறை, தொழில்முறை சிந்திக்கும் முறை மாறியுள்ளது. இந்நிலைமை இதே புதிய நிலையில் தொடருமா? இந்த மாற்றம் ஏற்பட்டால், புதியதொரு சமுதாய மாற்றம் ஏற்படலாம். எதிர்வரும் ஆறு மாதங்களில் இவற்றிற்கு ஒரு பகுதி விடையைத் தரக்கூடும்.




MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC
mhc
• கழுத்து, முதுகு நோவு
• வாகன விபத்து • மன அழுத்தம்
• விளையாட்டுக் காயங்கள்
• தலையிடி, தலைவருத்தும்
போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்
WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:
• STRESS
• TENNIS ELBOW PROBLEM
• SKIN PROBLEM
• TREAT WITH MASSAGE THERAP
• RESPIRATORY PROBLEMS
• ALLERGIES
• DIGESTIVE PROBLEMS
• SEXUAL PROBLEMS
• VARICOSE VEINS
• SEXUAL PROBLEMS
• BACK PROBLEM /NECK PROBLEM
• CHOLESTEROL • TUMOR
• FOOT PROBLEM



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.
HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING
Cough, Flu, Depression, Anxiety, Asthma, Tonsillitis
Gout, Arthritis, P.M.S, Leucorrhea, Migraines, Hair Loss
Diabetes, Cystitis, Cancer, Prostatitis, Obesity, Hemorrhoids
Stomatitis, Colitis
Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER
TEL: 416-298-7537/416-291-3022
5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

Alexander Immigration Services
Hemalatha K. Alexander, RCIC
Commissioner of Oaths
Canadian Government Licensed Immigration Consultant
• Express Entry
• Study Permit
• Visitor Visa
• Super Visa
• Citizenship
• LIMA & work Permit**
• Federal Skilled Workers
• Federal skilled Trades
• Canadian Exp. Class
• Business Immigration
• Provincial Nomination
• Family Sponsorship
• Visa extensions, renewal & more service
நிரந்தர குடியிருப்பு, விசா, குடியுரிமை
மற்றும் பல சேவைகள் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில்
ஆலோசனைக்கு இன்றே அழையுங்கள்
647-773-3673
email: info@alexanderimmigration.ca
web: www.alexanderimmigration.ca
வசதியான புதிய முகவரியில்
GTA Square
5215 Finch Ave. East Suite 261,
Toronto ON M1S 0C2
10 Milner Business Court
Suite 300,
Toronto, ON M1B 3C2
** Kindly note we do not provide Canadian jobs

# தாயக மாணவர் கல்வி வளர்ச்சியில் புலம்பெயர் உறவுகளின் வகிபங்கு




கல்வியால் எதையும் சாதிக்கலாம். அக் கல்விக்கோர் எல்லை இல்லை. கற்றோர்க்கு எங்கும் சிறப்பே. இன்றைய நவீனத்துவம் பெற்றுவரும் காலகட்டத்தில் கல்வி என்பது இன்றியமையாததும் தவிர்க்க முடியாததுமான ஒன்றாகும். இதனை சரியான முறையில் பெற்றுக் கொள்வதற்கு இன்றைய சமூகத்தில் மாணவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் எண்ணற்றவை.

கற்றலுக்கு ஏற்படும் முதல் தடங்கலாக பெரும்பாலான மாணவர்களுக்கு வீட்டின் பொருளாதார நிலைமையே காரணமாக அமைகிறது. இலங்கையில் இலவசக்கல்வி நடைமுறையிலுள்ள போதிலும் பாடசாலைக் கல்விக்கு மேலதிகமாகவும் கற்றலின் தேவை விரிவடைந்து செல்கின்றமை தவிர்க்க முடியாததாகின்றது. கல்விக்கான பொருளாதார பலம் இன்மையால் மட்டு மன்றி வீட்டின் நிலையையும் கருத்திற் கொண்டு பல சிறார்களும் புத்தகப் பையைத் தூக்கி எறிந்து விட்டு குடும்பச் சுமையை சுமக்கின்றனர். கொடும் யுத்தம் நிறைவடைந்து தசாப்தம் கடந்துள்ள போதிலும் அதன் வடுக்கள் இன்னும் ஆறாத தழும்புகளாகவே வட, கிழக்கு இலங்கை மக்கள் மத்தியில் காணப்படு கிறது. மனிதரின் மரணங்களை ஈடு செய்யவே முடியாது. இதன் விளைவாக வடக்கில் ஏறத்தாழ 40,000 குடும்பங்கள் பெண் தலைமைத்துவக் குடும்பங்களாக உள்ளன. ஆகவே அக் குடும்பத்தின் பொருளாதார நிலையை நோக்குகையில் அக்குடும்பப் பிள்ளைகள் வேறு தெரிவு கள் எதுவுமற்ற நிலையில் தொழில்த் துறையை தேர்ந்தெடுக்கின்றனர்.

மாணவப் பருவத்திலேயே குடும்பத்தை காக்கக் கல்வியைத் துறந்து தொழில்த் துறைக்குள் நுழைகின்ற சிறார்கள் பலர் கட்டடப் பகுதிகளில் கூலித் தொழிலாளரா கவோ, வியாபார நிலையங்களில் மற்றும் தொழிற்சாலைகளில் ஊழியராகவோ தம் பிஞ்சு உடலை வருத்தி உழைக்கின்றனர். தந்தை இருப்பினும் போரின் வடுவாக உடல் அவயவங்கள் ஊனமுற்றிருக்கத் தந்தையின் பொறுப்பினை தன் சிரமேற் சுமக்கும் தனயன்களும் இந்நாட்டில் ஏராளம்.

இங்கு நிலைமை இவ்வாறிருக்க யுத்தத்தின் வடுவிலிருந்து மீழ்வதற்குத் தொலைதூர தேசம் சென்று அடைக்கலமான உறவு களின் நிலையும் நோக்கத்தக்கது. போரில் அனைத்தையும் இழந்து நிர்க்கதிக்குள் ளாகாமல் அவர்களது வாழ்க்கையைக் காத்துக் கொள்வதற்குப் புலம்பெயர் தேசங்களின் செழிப்பு மிகுந்த பொருளாதார நிலையும் அரசாங்கங்களின் சட்டங்களும் காரணமாக அமைந்தன. போரினை அருகிலிருந்து அதன் அவலங் களை அனுபவித்தவர்களாகையால் தாம் சிறந்த நிலைக்கு வந்தமை போன்று தாயக உறவுகளினதும் நிர்க்கதி நிலையை உணர்ந்து அவர்களது துன்பச் சுமையை இறக்கி உயர்வடைய பல்வேறு உதவி களையும் செய்துவரும் புலம்பெயர் தேசங் களில் வாழும் உறவுகள் போற்றத் தக்கவர்கள்.



போரின் வடுக்களை சுமந்த உறவுகள் பெற்றோரை இழந்த பிள்ளைகளாகவும், பிள்ளைகளை இழந்த பெற்றோர் ஆகவும், கணவனை இழந்த மனைவி யாகவும் உடல் அவயவங்களை இழந்த மனிதராகவும் யுத்தத்தின் பல்வேறு சான்று களையும் சுமந்தோராக இருக்கின்றனர். ஆகவே இவ்வாறானோர் தமது பிள்ளைகளைக் கற்பித்து நல்ல நிலைக்கு அழைத்துச் செல்வதற்கு வேண்டிய பொருளாதார நிலைமையினை ஏற்படுத்திக் கொடுத்து அவர்களின் வாழ்க்கையின் வெற்றி என்னும் கலங்கரை விளக்கினை அடைய பல்வேறு புலம்பெயர் அமைப்பின ரும் கரங்கொடுத்து உறுதுணை புரிவது ஆறுதலான விடயமாகும்.

என் வீடு, என் குடும்பம் என்றில்லாது எமது மக்கள், எமது தேசம், அவர்களது நலன் என்ற பரந்துபட்ட மனதோடு இத்தகைய மாணவர்களுக்குத் தோள் கொடுத்து அவர்களின் எதிர்காலத்தின் வழிகாட்டிகளாக நின்று கல்வியைக் கற்பதற்கு உதவிகளை வழங்கி ஏணி யிலே ஒவ்வோர் படிகளாக உயர்த்தி வளமான நம்பிக்கைக்குரிய எதிர்காலத்தை அமைத்துக் கொடுப்பதில் இப்புலம்பெயர் உறவுகள் முன் நிற்பது பெருமைக்குரியது.

எவ்வாறிருப்பினும் புலம்பெயர்ந்த நாடு களில் செழிப்புடன் வாழும் எம் உறவுகள் தாயக மக்களின் வாழ்வாதாரத்தை அனைவரும் ஒன்றாக இணைந்து உயர்த்தப் பின்நிற்பது வேதனைக்குரியது.

இவர்களின் இச்செயலானது தாயக மக்களின் வளர்ச்சிக்கு உழைக்கும் உயர் சிந்தனையுள்ள உறவுகளையும் கொச்சைப் படுத்துவதாக அமைகிறது. வெகுசிலரே பரந்த மனப்பாங்குடன் செயல்படுகின்றனர்.

பரந்த நோக்கமற்று என் வீடு, என் குடும்பம் எனக் குறுகிய வட்டத்தில் வாழும் உறவினர்களால் அனுப்பப்படு கின்ற வசதி வாய்ப்புக்கள் சில இளைஞர் களை தவறான வழியில் திசை திருப்புவது டன் வேண்டப்படாத விபத்துக்கள், விபரீதங்கள் போன்றவை ஏற்படுவதற்கும் வழியமைக்கின்றன. ஒரு பகுதி சிறுவர்கள் குடும்ப வறுமையைப் போக்குவதற்கு கல்வியைத் தியாகம் செய்ய, இன்னொரு சாரார் வசதி வாய்ப்புகளின் மேல் கொண்ட மோகம் காரணமாக கல்வியை இடைநடுவில் கைவிடுகின்றனர். ஆகவே வறுமையில் இன்னல்படுகின்ற, வாழ்வின் அடுத்த படிநிலையை அடைவதற்கு முடியாது வறுமையின் பிடியில் இருகின்ற மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்குப் பாடுபடுகின்ற புலம்பெயர் உறவுகளுடன் ஏனைய உறவுகளும் இணைந்து "வீழ்ந்து கிடப்பவனை தூக்கி விட்டு வாழ வழி காட்டுவதற்கும் வறுமையை கல்வியால் வசந்தம் ஆக்குவதற்கும்" எம் மாணவர் களிடம் அறிவு ஒளியை ஏற்றிட முன்வர வேண்டும். எம் தொலைதூர உறவுகளின் இச்செயல்பாடுகள் மாணவர் கல்வியால் சிறந்து விளங்க மட்டுமல்லாது அவர்கள் உயர்வடைந்து மற்றவர்களுக்கும் உதவ வேண்டும் எனும் மனப்பக்குவத்தை வளர்த்தெடுக்கவும் எம் புலம்பெயர் உறவு களின் செயற்பாடுகள் முன்னுதாரண மாக அமையும் என்றால் மிகையாகாது.

இன்றைய மாணவர்கள் நாளைய நல் ஆசிரியராக, அறிஞராக, கட்டிடக் கலைஞராக, வைத்தியர், பொறியியலாளர், விஞ்ஞானி, அறிவுமேதையாக அதிலும் ஒரு தலைவனாகக்கூட மிளிரப்போகும் வருங்கால ஒளிவிளக்குகளாவர். இன்று எம்மால் இடப்படுகின்றது அஸ்திவாரமே நாளை அவர்களின் செயற்பாடுகளின் வினைத்திறனாக அமையும். எதையும் தாங்கி எந்தச் சவாலுக்கும் முகம் கொடுக்கக் கல்வியே எமது மூலதனம், கற்பதால் எமக்கு சிறப்பு என்ற அசைக்க முடியாத நம்பிக்கையுடன் எம் மாணவச் செல்வங்கள் வறுமையால் இலைமறை காயாக இருக்காமல் சாதனைச் சிகரம் தொடுவதற்கு புலம்பெயர் உறவுகளான எம் தமிழ்ச் சகோதரர்கள் ஒன்றிணைந்து உறுதுணை புரிந்து தாயகத்தை தலை நிமிரச் செய்ய வேண்டும்.

---

# ஒன்ராரியோ...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

மே 11இல் இருந்து தெரு வாசல்களை உடைய சில்லறை விற்பனை நிலையங் கள் தமது நிறுவனங்களைத் திறக்கலாம். ஆனால் அவர்கள் தெருவோரம் பொருட் களை விநியோகம் செய்யலாம் (curbside pickup) அல்லது வாடிக்கையாளரின் வீட்டிற்குச் சென்று விநியோகம் (home delivery) செய்யலாம் எனத் தெரிவித்தது. பொதுமக்கள் வியாபார நிலையத்தினுள் சென்று பொருட்களை வாங்க முடியாது. மே 11இல் ஒன்ராரியோ மாகாணப் பூங்காக்கள் (provincial park), பகல் பொழுதை போக்குவதற்காக (day use) திறந்து விடப்படும் என்றும் பெரும்பாலான மாகாண பூங்காக்கள் பொதுமக்கள் விக்ரோரியாதின நீண்ட வார விடுமுறையைக் கழிக்க வசதியாகத் திறக்கப்படும் எனவும் மாகாண அரசு தெரிவித்துள்ளது.

இவ் அறிவித்தல்களை ஊடகங்களுக்கு மே 09இல் வெளியிட்ட ஒன்ராரியோ முதல்வர் Doug Ford "நாங்கள் இவ்வாறு படிப்படியாகப் பொது இடங்களைத் திறந்து விடுவதை பொதுமக்கள் ஏற்றுப் பொறுப்பு டன் நடந்து கொள்வர் என நம்புகிறோம். அவர்கள் சுகாதார




நடவடிக்கைகளைத் தீவிரமாகக் (seriously) கடைப்பிடிப்பர். தங்களை ஆரோக்கியமாக வும் பாதுகாப் பாகவும் வைத்திருப்பர் என நம்புகிறோம். அவர்கள் ஆரோக்கியமாக இருந்தால் மட்டுமே இவற்றை அனுபவிக்க முடியும்" என்றார்.

World Class Realty Point Brokerage
Affordable Homes ♦ Pre-Construction Condos
Investment Properties
Search Here - Find Here
www.HOUSEPRICE.ca
Right Realtor Right Price
HousePrice.ca
Sam Surendran
Sales Representative
Dir: 647.350.0220
World Class Realty Point Brokerage
55 Lebovic Ave, #C115, Toronto, ON M1L 0H2. Tel: 416.444.7653

# ஆவிகளின் அழுகுரல்




முள்ளிவாய்க்காலில் முடங்கிக் கிடந்தோர்
முடிந்தது போரென எண்ணிக் கிடந்தார்
கள்ளங் கபடமிலாக் கன்னியர் கூட
களத்தில் போராடிக் களைத்த பின்னர்
வெள்ளமாய் மக்கள் கூட்டம் விரட்டப்பட்டது
வேறிடம் நோக்கி மந்தைகள் போலே
கள்ளர் கயவரின் நயவஞ்சகச் செயலைக்
கனிவால் எழுந்த செயலெனக் கருதினர்.

கொத்துக் குண்டும் கொடுந் திரவக் குண்டும்
கொட்டப்பட்டன மக்கள் மீது கொடியோராலே
செத்து மடியட்டும் மந்தைக் கூட்டமென
செய்தனர் துரோகம் ஆட்சியிலி ருந்தோர்
கத்தக் கூடச் சக்தியின்றிக் கருகிப் போயினர்
எம் மினத்தவர் காடு கரம்பையில்
பார்த்துக் கொண்டிருந்தன பக்கத்து நாடுகள்
பாதகர் செயலைப் பார்க்காதோர் போல்
பதினோர் ஆண்டுகள் பஞ்சாய்ப் பறந்தன
நாடாளுமன்றத்தில் பாவிகள் இன்னும்
சொத்துப் பத்தோடு சொகுசாய் வாழ்க்கை
சோர்வில்லாது வாழ்ந்து வருகிறார்
செத்து மடிந்த இலட்சம் மக்களைச்
சேற்றில் மறைந்த புழுக்களைப் போலே
எத்தர்கள் யாவரும் எண்ணி மகிழ்கிறார்
இறைவா நீயும் இதற்கு உடந்தையா?

- துறையூரான் -

# விடுதலைக் கதிர் உதிக்குமோ!

விடியுமென்றிரு விழிமலர்ந்துநாம்
விழைந்துநின்றவப் பொழுதிலே
அடிவருடிகள் அரசகூலிகள்
அணிதிரண்டனர் அழிக்கவே!



கொடியபாதையில் குடிகளாயிரம்
கொன்றுதீர்த்தனர் பாவிகள்
முடிந்ததோரினம் முழுமையாயென
முகமலர்ந்தனர் வெறியரே!

அழுகுரல்களும் அவலவோசையும்
அகிலமெங்கணும் அதிர்ந்திடத்
தொழுதகையொடு தெருவிறங்கிநாம்
தொடுத்தபோர்க்கணை ஒடிந்திடப்
பொழுதுபோக்கென அகிலதேசமும்
போலிவார்த்தைகள் பகர்ந்திட
பழுதுபட்டதோர் நிலைதொடர்ந்திடப்
ஆண்டுகள் பல பறந்ததே!

வருடமெத்தனை வந்துபோயினும்
வலிமறந்துதான் போகுமோ?
நெருடலாய்மன நினைவிருந்துபோர்
நிழலுமென்றுமே நீங்குமோ?
குருதிசிந்திய தமிழ்நிலத்தினில்
கொடிகளாடிட இனியொரு
தருணமொன்றினில் விடுதலைக்கதிர்
தாயகத்தினில் உதிக்குமோ!

கவிஞர் மாவிலி மைந்தன்
சி. சண்முகராஜா

# சோளகம் பெயர்ந்துவிட்டால்



காற்றடிக்கும் மரங்களோடும் இலைகள் வீழும்
கண்ணுக்குள் மண்தெறிக்கும் கரகரக்கும்
சோற்றடுப்பில் நெருப்பெரியத் தணல் பறக்கும்
சொல்லாமல் மரம் முறிந்து தரையில் வீழும்
மேற்றளத்தில் ஓடுகளும் கலகலக்கும்
மேலோடி உள்நுழைந்து கதவுடைக்கும்
காற்றழுத்தக் காற்றாடி விசையாய்ச் சுற்றும்
களனிகளில் தண்ணீரும் சீறிப்பாயும்

வாழைகளும் குலைகளோடு முறிந்து வீழும்
வளருகின்ற ஊதியத்தில் மண்ணைப் போடும்
ஆள்நடக்க வீசுங்காற்று உந்தித் தள்ளும்
அயலருகில் மண்ணையெல்லாம் அள்ளிச் சிந்தும்
நீள் வீதி மண்ணுக்குள் புதைந்து போகும்
நேரெதிராய் வழிமறித்து மல்லுக்கட்டும்
வாழ்விடங்கள் புழுதியினால் வனப்பிழக்கும்
வசந்தகாலம் பிறக்கும் போது இவை நடக்கும்

மரங்களிலே நீள்கிளைகள் முறிந்து வீழும்
மலருகின்ற பூக்களெல்லாம் நிலத்தில் சிந்தும்
சொரிகின்ற காய்பிஞ்சு கண்கலக்கும்
சொந்தமாய் வளர்ப்பார்க்கு மனமுடைக்கும்
தரையினிலே வளருகின்ற பயிர்களெல்லாம்
களையிழந்து இலைதுவண்டு வாடிச்சோரும்
இரைமீட்கும் கால்நடையின் மேய்ச்சல் காடும்
ஈரமின்றிப் புல்கருகி வரண்டு போகும்

சமுத்திரத்தில் நீரலைகள் மேலெழும்பும்
சலசலக்கும் அலைகளிடை நுரைசுரக்கும்
அமுக்குகின்ற நீரோட்டம் விரைவாய்ப் பாயும்
ஆழ்கடலில் மீனினங்கள் சிதறியோடும்
சுமையோடு ஓடிவரும் மரக்கலங்கள்
சுழியினிலே யகப்பட்டு நீரில் முழ்கும்
அமைதியையே சீர்குலைக்கும் சோளகத்தால்
அளவில்லா அனர்த்தங்கள் நேரக் காண்போம்

ஓதுகின்ற ஆலயத்து மணிகளாடும்
ஒருவேளை அசைந்தாடி யொலியுதிர்க்கும்
வேதமோதும் பூசகரும் விழித்துப்பார்ப்பார்
வெந்தணலில் மிதித்தது போல் திகைத்து நிற்பார்
பீதிதரும் பேரிரைச்சல் காதைப் பிய்க்கும்
பறந்து செல்லும் பறவைகளும் காற்றோடோடும்
நாதியற்றுப் பொதிசுமப்போர் சுழன்று வீழ்வார்
நாடுநகர் சோளகத்தால் நாசமாகும்.

மாரீசன்

# நற்றமிழ் வளர்த்த நவாலியூர் சோமசுந்தரப் புலவர்

ஈழமென்னும் வளமிகு இலங்கை நாட்டின்
இதயங்கவர் புலவர்கள் இன்று முள்ளார்
வளங்கொழிக்கும் தமிழ்மொழியின் வாய்ப்ப றிந்தே
வாழ்வியலில் வெற்றிகண்ட வல்லோர் பலரே
ஆழ்ந்தறிஞர் அருட்திரு விபுலா னந்தர்
ஆறுமுக நாவலரோ டனேக கவிஞர்
ஆழ்ந்தறிவைக் காட்டினார்கள் அகிலம் போற்ற



பிறப்பு - May 25, 1876
இறப்பு -July 10, 1953

ஆயிரமாயிரம் செந்தமிழ்ப் பாக்கள் பாட
ஐயமின்றி அறிஞர்கள் அரவ ணைக்க
பாயிரம் பல்லினப் பாடல்கள் தந்தே
பார்போற்றும் புலவராம் பட்டம் பெற்றார்
தாயினைப் போன்றநல் லாசி ரியராய்த்
திக்கற்ற மாணவரைச் சிறப்புச் செய்தார்
தூயநற் சோமசுந் தரனார் செயலைத்
தீதின்றிக் கூறநான் முற்பட்டே னின்று.

தெய்வத் திருவருளும் சேர்ந்து கொள்ளச்
செப்பினார் சீர்மிகு செய்யுள் தானே
உய்யும் வழிகாட்ட உத்த மனார்
உறுதியுடன் ஊரிலுள்ள ஆல யங்கள்
தொய்வின்றிச் சிறப்புறவே சேவை செய்தார்
செந்தமிழும் ஆங்கிலமும் சேர்ந்து கொள்ளத்
தெய்வத் திருமகளாம் சரஸ் வதிக்குத்
தேர்ந்துசெய்தார் நாமகள் புகழ்மாலை தானே.

சிறுவர்க் கேற்றநற் பாடல்கள்
சிறப்புறச் செய்து மகிழ்ந்தார்
அறுசுவை உணவுடன் ஆடிக்கூழ்
அருமைகள் பேசி மகிழ்ந்தார்
உறுதுணை மனையாளை ஊக்கியே
ஊறுகள் இன்றிக் காத்தார்
சிறுமைகள் செய்வோரைச் சிந்தையேற்றி
செப்புமொழி கொண்டகற் றினாரே.

பாடாத கவிதைகள் ஏது மில்லை
பண்பான புலவரின் பணிவு மங்கே
வாடாதே பணிசெய்த வள்ள லாமே
வாழ்விலே ஏற்பட்ட வறுமை யாலே
நாடா திருந்தாரே நண்பர் சுற்றம்
நாடினால் பெற்றிருப்பார் நன்மை தானே
தேடாது சென்றாரே செல்வத் தைத்தான்
தேடியே போனாரே தெய்வத் திருவடியே.

முருகேசு மயில்வாகனன்

# அவசியமில்லா நுகர்வு

**Minimalism: Live a Meaningful Life**

அவசியமில்லா நுகர்வு Minimalism என்றால் என்ன? மினிமலிசம் என்பது நிறைவைத் தரும் நிஜ வாழ்க்கை.

எங்களுடைய அப்பா என்னைவிட குறை வாகத்தான் சம்பாதித்தார். வீட்டில் மூன்று பிள்ளைகள், மூன்று பேரையும் நன்றாகப் படிக்கவைத்து அவர்களுக்கு வேண்டிய தெல்லாம் செய்து கொஞ்சம் பணமும் சேமித்து சொந்தமாக வீடும் வாங்கி கடன் இல்லாமல் நிம்மதியாக இருந்தார். ஆனால் நான் அவரைவிட அதிகமாக சம்பாதிக்கிறேன். வீட்டு அடமானக் கடன், கார் வாங்கியதற்கு மாதாந்த கட்டுப்பணம், கடன் அட்டைகளின் கட்டுப்பணம்,வேலைப் பழு பிரச்சினை... என்னால் அவரைப் போல நிறைவாக வாழவே முடியவில்லை. இப்படி புலம்பும் இந்தத் தலைமுறை இளைஞர்களை இப்போதெல்லாம் அடிக்கடி சந்திக்க முடிகிறது.

இன்றைய தலைமுறைக்கு எவ்வளவு சம்பாதித்தாலும் விலையுயர்ந்த செல் போன்கள், சொகுசு வாகனங்கள், ஆடம் பரமான ஆடைகள் என எவை இருந்தா லும் உண்மையான மகிழ்ச்சி இல்லை என்கிற குறை இருந்துகொண்டே இருக்கி றது. அதைப் போக்கிக்கொள்ளத்தான் இரவு கேளிக்கை இடங்களுக்குச் செல் கின்றனர், நிறைய செலவழித்து சுற்றுலாக் கள் போகின்றனர். ஆனாலும் மகிழ்ச்சி எங்கே இருக்கிறது என்பதை மட்டும் அவர்களுக்கு புரியவில்லை.

இப்படிப்பட்ட இளைஞர்களில் இருவர் தான் ஜோஷ்வா பீல்ட்ஸ்ம் (Joshua Fields ), ரயான் நிகோடிமஸ்ம் (Ryan Nicodemus). 2009இல் இருவருமே நிறைய சம்பாதிக்கும் உயர்தர I.T இளைஞர்கள். தங்களுடைய 30ஆவது வயதில் ஆறு இலக்க சம்பளம், விலையுயர்ந்த கார்கள், சகலவசதிகளோடு வீடுகள், கேளிக்கை, கொண்டாட்டம் என வாழ்வில் எல்லாமே சரியாகத்தான் இருந்தன. ஆனால், ஏதோ குறைவதை உணர்ந்தனர். மனதில் வெற்றிடம் இருந்துகொண்டே இருந்தது. வாரத்தில் 80 மணி நேரம் உழைப்பதும், உழைத்த பணத்தில் எதை எதையோ வாங்கி வாங்கிக் குவிப்பதும் மகிழ்ச்சி யில்லை என்பதை உணர்ந்தனர். மகிழ்ச்சி என்பது நுகர்வு கலாசாரத்தில் இல்லை என்பதை புரிந்துகொண்ட நொடியில் 'மினிமலிசம்' என்கிற கோட்பாடு பிறக்கிறது.


இன்று நம்மைச் சுற்றி நுகர்வுக் கலாசாரம் பெருகி விட்டது. பொருட்களை வாங்குவது தான் மகிழ்ச்சி, அதுவே சாதனை என்கிற கருத்து பரவி வருகிறது. உண்மையில், பொருட்களை வாங்குவதில் மகிழ்ச்சி இல்லை. அதை எந்த அளவுக்குப் பயன் படுத்துகிறோம் என்பதில்தான் இருக்கிறது என்பதையே மறந்து கொண்டிருக்கிறோம்.

இந்த மனநிலைகளுக்கு எதிராகக் கிளம்பியவர்கள்தான் ஜோஷ்வாவும், ரியானும். 2009 தொடங்கி மினிமலிஸ வாழ்வை வாழும் இவர்கள், இன்று உலகெங்கும் இருக்கும் பல்வேறு பல் கலைக்கழகங்களில் மினிமலிஸ வாழ்வு முறை பற்றி பாடமெடுக்கின்றனர்.இலட்சக் கணக்கானோர் இவர்களுடைய மினிமலிஸ வாழ்க்கை முறையை நோக்கி நகர ஆரம் பித்திருக்கின்றனர். நூல்கள், ஆவணப் படங்கள், வலைப்பதிவுகள் என மினிமலிஸத்தைப் பரப்பிக் கொண்டிருக்கிறது இந்த இருவர் கூட்டணி.

மினிமலிஸம் என்றாலே கஞ்சனாக வாழ்வது என்று எல்லோருமே நினைத்து விடுகின்றனர். எல்லாவற்றையும் விலக்கி விட்டு, துறவியைப்போல வாழ்வது என்றும் ஒரு கருத்து உண்டு. அப்படியெல்லாம் எதையும் துறக்கத் தேவையில்லை. மினிமலிஸம் என்பது அவசியமானவற்றுடன் அளவாக வாழ்வது. உடலில் தேவை யில்லாத கொழுப்பு சேர்ந்தால், நோய்கள் எப்படி வருமோ அதுபோலவேதான் வாழ்க்கையில் தேவையில்லாத பொருள் கள் சேர்வதும். இடநெருக்கடியில் தொடங்கி பணநெருக்கடி வரை அனைத்திற்கும் காரணமாக இருப்பது இந்த 'அவசியமில்லா நுகர்வு'தான்.

அதென்ன அவசியமில்லா நுகர்வு? நடந்து போகிற தூரத்திற்கு காரில் செல்வது, எல்லோரும் வைத்திருக்கின்றனர் என்பதற் காகவே அதிக விலை கொடுத்து செல்போன் வாங்குவது, இரண்டுபேர் வாழ கடனுக்காவது நான்காயிரம் சதுர அடியில் மிகப்பெரிய வீட்டை வாங்கிக்கொள்வது, அதில் அலங்காரத்திற்கென ஆயிரம் ஆயிரமாக செலவழித்துப் பொருள்களை அடுக்குவது என அவசியமில்லாமல் வாங்கிக் குவிக்கும் பயன்படுத்தும் எல்லாமே தேவையில்லா நுகர்வுதான்.

"மினிமலிஸ்டுகள் குறைவு, குறைவு, என வாழ்பவர்கள் இல்லை. அதிக நேரம், அதிக மகிழ்ச்சி, அதிக சேமிப்பு, அதிக படைப்பாற்றல் என தங்களுடைய வாழ் வில் அவசியமானதை அதிகப்படுத்திக் கொள்ளும் வாழ்வையே வாழ்கின்றனர்" என்பது ஜோஷ்வாவின் கருத்து. மினிமலிஸம் என்கிற பெயரெல்லாம் இல்லாத காலத்திலேயே நம்முடைய பெற்றோரும் முன்னோரும் அப்படித்தான் வாழ்ந்து கொண்டிருந்தனர். வீட்டில் தேவையில்லா மல் ஒரு மின்விளக்கு எரிந்தால்கூட ஓடிச் சென்று அணைக்கிற பெரியவர்களை இப்போதும் நம் வீடுகளில் காண முடியும். அதுதான் நம்ம வீட்டு மினிமலிஸம். இதுபோன்ற சின்னச் சின்ன சேமிப்புகளின் வழிதான் அவர்கள் தங்களுடைய நிம்மதி யான வாழ்வைக் கட்டமைத்தனர்.




உலகின் மிகப்பெரிய கோடீஸ்வரர்கள் என அறியப்படும் பலரும்கூட மினிமலிஸ்டுகள்தான். வோறன் பஃபெற் (Warren Buffett - CEO of Berkshire Hathaway) நல்ல உதாரணம். கோடிகளைக் குவிப்ப தற்கு முன்பு எப்படிப்பட்ட வாழ்க்கையை வாழ்ந்தாரோ, அப்படியேதான் இன்றுவரை இருக்கிறார். 1958இல் நெப்றாஸ்காவில் (Nebraska, United States) வாங்கிய அதே சிறிய வீட்டில்தான் இன்னமும் வாழ்கிறார். "தினமும் எதைச் செய்தால் மகிழ்ச்சியாக இருக்குமோ, அதையே செய்யுங்கள், அது தான் உலகில் மிகப்பெரிய ஆடம்பரம்" என்கிறார் பஃபெற். அவர் மட்டுமல்ல, ஸ்ரீவ் போப்ஸ்(Steve Forbes-Chief Executive of Forbes Media), மார்க் சக்கர்பெர்க் (Mark Zuckerberg -Facebook, CEO) என மினிமலிஸ வாழ்வை வாழ்ந்த, வாழ்ந்து கொண்டிருக்கும் எண்ணற்ற கோடீஸ்வரர் களை நாம் காணமுடியும்.

மினிமலிஸ்ட் வாழ்க்கை வாழ்வதற்கான வழிகள் என்ன? ஜோஷ்வாவே சில விஷயங்களை எழுதியிருக்கிறார்.

- **வரவு செலவுகளை கணக்குப்போட்டு வாழப் பழகுதல்:** மினிமலிஸ வாழ்க்கை யில் முக்கியமானது இதுதான். நம்முடைய வரவுக்கு மேல் ஒரு டொலர் கூட செலவழிக்கக் கூடாது. அதற்கு ஒரே வழி திட்டமிடல். செலவழிக்கிற ஒவ்வொரு டொலருக்கும் கணக்கு வைத்துக்கொள்ள வேண்டும்.

- **குறைவான பொருள்களில் வாழ்வது:** வீட்டு அலுமாரியில் 30 ஆடைகளை அடுக்கி வைத்திருப்போம். ஆனால் ஒன் லைனில் புதிய டிசைன் ஒன்றைப் பார்த்ததும் இன்னொன்றை வாங்க ஆசை வரும். அப்படி இல்லாமல் நம்மிடம் என்னென்ன பொருள்கள் இருக்கின்றன, அதை எவ்வளவு அதிகமாகப் பயன் படுத்துகிறோம் என்பதைப் பட்டியலிட்டு வைத்துக்கொள்வது, அவசியமில்லாமல் இருக்கிற பொருள்களையே மீண்டும் மீண்டும் வாங்குவதைத் தடுக்கும்.

- **வருங்காலத்திற்குத் திட்டமிடல்:** மருத் துவக்காப்புறுதி போன்ற விடயங்கள் மிக மிக முக்கியம். வங்கியிலிருந்து வரும் மாதாந்த அறிக்கையை மாதந்தோறும் கட்டாயம் பொறுமையாக வாசித்து எது தேவை, தேவையில்லை என்பதை முடிவு செய்து அடுத்தடுத்த மாதங்களில் கட்டுப் படுத்துதல். வருமானத்தில் குறிப்பிட்ட தொகையை வெவ்வேறு முதலீட்டுத் திட்டங்களில் போட்டுவைப்பது.

- **ஒவ்வொரு முறையும் செலவு செய்யமுன் கேள்வி கேட்பது:** எதை வாங்குவதாக இருந்தாலும் அதை வாங்குவதற்குமுன் இது எனக்கு அவசியம்தானா? இது இல்லாமல் வாழ முடியுமா? முடியும் என்றால் எத்தனை நாளைக்கு என்பதைக் கணக்கிட்டு அதற்குப் பிறகும் அந்தப் பொருளை வாங்கவேண்டிய தேவை இருந்தால் மட்டும் வாங்குவது.

- **அடுத்தவர்களுக்கு வழங்குவது:** உலகில் மிகப் பெரிய மகிழ்ச்சி அடுத்தவர் களுக்கு உதவுவதுதான் என்பது வோறன் பஃபெற் தொடங்கி பில்கேற்ஸ் வரைக்கும் அத்தனை பேருமே பின்பற்றும் வாழ்க்கை முறையாகும். மாதந்தோறும் முடிந்த அளவு தொகையைப் பிறருக்குக் கொடுங் கள். அதுவே உங்களைத் திருப்தியாக வாழவைக்கும்.

இந்த ஐந்து கட்டளைகள் நம்முடைய செலவுகளைக் குறைப்பதுடன், சேமிப்பை யும் அதிகப்படுத்தும். கூடவே குறைந்த செலவில் திருப்தியான வாழ்வை வாழவும் உதவும். இப்படித்தான் நம் பெற்றோர் வாழ்ந்தனர். அதனால்தான் அவர்களால் சிறிய வருமானத்திலும் சிறப்பாக வாழமுடிந்தது.


ARISTO PEST CONTROL

Set Your Mind At Rest, We Will Get Rid Of The Pest

24HRS / 7 DAYS EMERGENCY SERVICES & ANIMAL REMOVAL



• Cockroach • Bedbug • Animal Control • Mice

• Bird Control • WASPS • Hornets Removal • Rat

Government Licensed Exterminator

(We Speak English, Gujarati & Hindi)

Same Day Service - Residential, Commercial, Industrial

We Also Provide No Obligation Inspection For Commercial & Residential Clients

Written Guarantee & Discounted Rates - Call Now 647.339.3926

Info@aristopestcontrol.ca / www.aristopestcontrol.ca




யோகா சோதிடம்

கிரகப்பொருத்தம் பார்த்தல் | சுபமுகூர்த்தம் கணித்தல்
பலன் பார்த்தல் | சாதகக் குறிப்புக் கணித்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361





சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480

3011 Markham Road ,Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough


**கடினமான செயலின் சரியான பெயர்தான் சாதனை. சாதனையின் தவறான விளக்கம் தான் கடினம்.**



# மறக்கத்தான் முடியுமோ?

மறக்கத்தான் முடியுமா 'மே' பதினெட்டை
மறந்தாலது தமிழினமாமோ? என்றும்
துறக்கத்தான் முடியுமா தீரா துயர்தம்மை
துறந்தாலந்த துயர்தந்த வலிநீங்கிப் போகுமோ?
சிறக்கத்தான் முடியுமோ செந்தமிழர் வாழ்வும்?
சிறந்தால் மனமது எண்ணுமோ மறவர்தம்மை
பிறக்கத்தான் முடியுமா மாவீரர் தம்மால்?
பிறந்தால் தமிழர்தம் வாழ்வும் மலருமோ?

எத்தனை ஆண்டுகள் இணைந்தோமவருடன்?
எங்களுக்காக இன்னுயிர் ஈந்தார்
சத்தியம் தவறா உத்தமராக மண்ணில்
சமத்துவமாக ஆளுமை செய்தார்
நித்தமும் தமிழர் தாயக விடுதலைக்காக
நெருப்பிலே கருகும் விறகுகளானார்
வித்தகர் போற்றிடும் வீரமறவர்கள்
விந்தைகள் புரிந்தே வீரத்திலுயர்ந்தார்!



அடிமை வாழ்வுடன் தமிழரின் துயரம்கண்டே
அரசினை எதிர்த்துபோரிடத் துணிந்தார்
முடிவுறா கேள்விக்கு விடைகாண நாளும்
முப்படை கொண்டு முழுமையாய் எதிர்த்தார்
துடிப்புடன் நாளும் புதுமைத்திட்டங்கள் தீட்டி
துவளாமனதுடன் வெற்றியும் பெற்றார்
விடிவுநோக்கிய பெரும் பயணத்தில் 'மே' மாதம்
வீணர்கள் செய்தசதியினால் வீழ்ந்தார்!

அன்னையாய் அன்புத்தங்கையாய் அக்காளாய்
அண்ணியாய் அருமைத்தம்பியாய் எண்ணி
தன்னையே தமிழுக்கும் தமிழருக்குமாய் ஈந்ததலைவன்
தடையின்றி முப்படைநடத்திய பெருந்தலைவன்
பொன்னைநிகர்த்த எழிலோடு பூமனம் கொண்டவன்
பொல்லாக் குணமுடையோர்க்கும் 'போதிமாதவன்'
முன்னைய 'சாணாக்கியனுக்' கிணையானவன்
முத்தமிழின் காவலன் முடிசூடா மன்னன்!

இறுதிப்போரில் மனஉறுதியுடன் போரிட்டு
இனத்தைக் காக்க இன்னுயிரை ஈந்தமறவர்
பொறுதி கொண்டு போராடி எதிரிகளையழித்து
போர்முறை தவறாது மாண்டமாவீரர்
குருதியுள் தம்முடலை புதைத்தபோதும்
குண்டுமழையிலே அவர் குளித்தபோதும்
பருதியிலே ஒளிர்கின்ற செங்கதிர்கள் போல
பசுமைகாண இனத்திற்கு அரணாய் நின்றார்!

மறக்கத்தான் முடியுமோ 'மே' பதினெட்டை
மாண்டு அழிந்தவர் கணக்கிலடங்கார்
உறவுகளை இழந்துதம் உயிர்காக்கவென்று
ஊரைவிட் டோடியவர் அகதிளானார்.
பறந்துவந்து குண்டுபோடும் விமானம்கண்டு
பயத்தினால் உயிர்துறந்தோராயிரமாயிரம்
திறந்தவெளிச் சிறைச்சாலைக்குள் அடிமைகளாகி
தீராததுன்ப த்திற்காளானோரை மறக்கத்தான் முடியுமோ?



கவிஞர் புரட்சிபாலன்
வன்கூவர்

# பஞ்ச பூதங்களும் மனிதரும்




**காற்று**

காற்றும் நானே உயிரும் நானே
தூற்றும் உலகம் துணிவது நன்றே
தென்றலாய் வருவேன் யாவரையும்
தெம்மாங்கு பாட வைப்பேன் சீண்டினால்
தேடிய தேட்டம் எல்லாம் நொடியில்
தேய்திடுவேன் புயலாய் மாறி
புகையும் நச்சுவாயும் வந்தால்
சோகமி ழைப்பேன் சூறாவளியாய்
ஐம்பூதத்தின் அங்கம் நானே
கைமாறி ன்றிக் கடமை செய்வேன்
என்னை நீங்கள் மாசு படுத்தின்
தொன்மையாகத் தொலைந்திடு வீரே

**நீர்**

நான்தான் நீர் நானின்றி நீரில்லை
நதியாகி நன்மை பல செய்கின்றேன்
மதி கெட்ட மனித இனம்
மதியாமல் மிதிக்கிறது என்னை
மழையாக வந்து மனிதனுக்கு
வளங்கள் பலப்பல வழங்குகிறேன்
என்மேலே எறிகின்றார் கழிவுகளை
என்னாலே இனியும் தாங்காதே
நச்சுப்பொருள்
ஆறு குளம் கடலென்று அமைதியாய்
நானிருக்க
வீறு கொள்ள வைக்கிறார்
வீணர்கள் தம் செயலால் என்னை
வீணடிக்கும் மனித இனம் விரைவில்
மாண்டு விட நேரிடுமே காப்பீர் என்னை

**நெருப்பு**

நெருப்பின்றி வாழ்வில்லை நிச்சயமாய்
நம்புங்கள்
செருக்காலே என்னைச் செருப்பாகப்
பாவிப்பின்
வீடு வாசல் எல்லாம் வீணாகப்
போய்விடுமே
காடு களனி எல்லாம் கருகித்தான்
செத்துவிடும்
சமையல் குளிரெல்லாம் சளைக்காது
உழைக்கின்றேன்
சாமத்தில்கூட உறங்காது விழித்திருப்பேன்
சண்டை போரினில் சங்கடம் தருகிறார்
மண்டையால் யோசிக்கா மனிதர் சிலர்
வெம்மையின் வேந்தன் நான்
வேண்டியது தருவேன்
சும்மா இருக்க விட்டு சுகமாக வாழ்வீரே

**மண்**

நாடின்றி வாழ்வு இல்லை நானின்றி
நீரில்லை
நாயாய் அலைகின்றார் நம்மவர்
நாடு நாடாய் அனாதைகளாய்
வீடு மனை வாசலும் வேண்டுமென்றே
வேலை செய்கிறார் நாளும் பொழுதும்
தேடும் பொருளும் காசு நகையெல்லாம்
தேய்ந்து போகுமே நாளடைவில் அதனால்
மண்ணின் பெருமை உணர்ந்த எம் வீரர்
உண்மை நேர்மையாய் உயிரைக்
கொடுத்தார்
உணர்ந்தே நாமும் உதவிகள் செய்தோம்

**ஆகாயம்**

ஆண்டவன் உறையும் ஆகாயம் நான்
ஆரறிவார் எந்தன் அருமை தனை
நீண்ட புகழோடு வாழ்வதற்கு
பணிகள் பலவுண்டு செய்வதற்கு
பஞ்சபூதங்களைப் பாதுகாப்பீர்
பஞ்சம் பசியின்றி வாழ்ந்திடுவீர்
விஞ்ஞானத்தின் சில விளைவுகளால்
வேதனை கூடுது விளங்கிடுவீர்
இயற்கை அன்னையின் எழி லெல்லாம்
துலங்கச் செய்வீர் மென்மேலும்

யாவரும் கூடி

பஞ்சபூதங்கள் நாமே
பாரெல்லாம் சிறக்கத்தான் வந்தோமே
விஞ்சிய வேலைகளாலே எம்மை
வீணாகக் கொல்லுகின்றீரே
கொஞ்சும் குழந்தைகளெல்லாம் பல
கொடிய நோய்களால் வாடுகின்றாரே
கொஞ்சம் கூடக் கருணையின்றி
கெடுக்கின்றீரே சுற்றாடல் யாவும்
கெஞ்சிக் கேட்கிறோம் நாங்கள்
கெடுக்காதீர் எம் வாழ்வின் வளங்களை
பஞ்சபூதங்களைப் பேணிடுவீர்
பஞ்சம் பசி இன்றி வாழ்ந்திடுவீர்.

*இக்கவிதை 15 ஆண்டுகளுக்கு முன்பு எழுதியது. பத்மஸ்ரீ திருமதி காயத்ரி சங்கரன் அவர்கள் மெட்டமைத்து நாட்டியப் பாடலாகப் பாடியுள்ளார். நாட்டிய ஆசிரியை திருமதி சிவாஜினி ஸ்ரீஸ்கந்தராஜா இதனை ஒரு நாட்டிய நாடகமாக்கி மேடையேற்றினார். இப்பொழுது அதன் முக்கியத்துவத்தை நாம் உணரக்கூடியதாக இருக்கிறது.*




- துறையூரான் -

# ஆழியவளை

**தொடர் கட்டுரை**

**யாழ்ப்பாணத்துக் கடலோரக் கிராமம் ஒன்றின் மரபும் மாற்றமும்**



கந்தசாமி முத்துராஜா

## இயல் 01

## ஊரும் ஊர் அமைப்பும்

### 1. ஊர்ப்பெயரும் அமைவிடமும்

ஈழத்தின் யாழ்ப்பாணக் குடாநாட்டில், வடமராட்சிப் பிரதேசத்தின் கிழக்குக் கடலோரத்தில் அமைந்துள்ளது ஆழிய வளைக் கிராமம். இது வடக்கே வங்காள விரிகுடாவையும் இந்து சமுத்திரத்தையும், தெற்கே வீரக்கழி ஆற்றையும், வடமேற்கே உடுத்துறைக் கிராமத்தையும், தென்கிழக்கே வெற்றிலைக்கேணிக் கிராமத்தையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. கிழக்கு மேற்காக ஏறத்தாழ இரண்டுமைல் நீளமும், வடக்குத்தெற்காக ஏறத்தாழ ஒருமைல் அகலமும், அண்ணளவாக இரண்டு சதுரமைல் நிலப்பரப்பைக் கொண்டுள்ளது. பூகோள வரை படத்தில் அண்ணளவாக 80.05 பாகை நெடுங் கோடும், 09.03 பாகை வடஅகலக்கோடும் இக்கிராமத்தை ஊடறுத்துச் செல்கின்றன.

யாழ். குடாநாட்டைத் தலையாகவும் அதன் கீழ்வரும் பகுதியை உடலாகவும் வைத்து நோக்கின் 'ஆழியவளை' கழுத்தின் பின் பக்கம்போல் அமைந்துள்ளதை இலங்கை யின் வரைபடத்தில் காணலாம். இக் கிராமத்திற்கும் அண்டைநாடான இந்தியா வின், தென்னிந்தியக் கிழக்குக் கரைக்கும் இடைப்பட்டதூரம் ஏறத்தாழ முப்பது கடல்மைல்கள் ஆகும்.

ஆழியவளை என்பது புவியியல் அமைவு டன் தொடர்புடைய ஒரு காரணப் பெயராகத் தெரிகிறது. இது கப்பல் பாதையின் முக்கியத்துவத்தையும் சமுத்திரங்களுக்கு இடையிலான எல்லைப் பகுப்பையும் சுட்டுகின்ற இடமாகக் கொள்ளலாம் போலத் தெரிகிறது. இதன் பெயர்க்காரணத்தை விளங்கிக்கொள்வதற் குப் பின்புலமாகக் கீழ்க்காணும் தரவு களை ஒன்றிணைந்து நோக்கவேண்டுவது அவசியமாகிறது. இலங்கையின் கிழக்கே உள்ள பெரும் சமுத்திரத்தில் வரும் கப்பல்கள் தரை தட்டிவிடாமல், சரியாக ஆழியவளை வெற்றிலைக் கேணி இணை யும் இடத்திலுள்ள கலங்கரை விளக்கம் ஒன்றுக்கான விளக்கு ஒளி இல்லாது வெறும் கட்டுக்கோப்பாக (ஆனால் பார்வைக்கு ஒரு கலங்கரை விளக்கமாக) அமைந்துள்ள கோரி எனும் கட்டிடப் புள்ளியை நோக்கி வந்தாலேதான் பருத்தித்துறைக்குச் செல்வதற்கு முடியும். அதாவது பருத்தித்துறைக்குச் செல்ல இருக்கும் கப்பல்கள் அல்லது பருத்தித் துறையில் இருந்து வரும் கப்பல்கள் இந்தப் புள்ளியை மையமாகக் கொண்டே ஒன்றில் வங்காள விரிகுடா பாக்கு நீரிணைக்குள் வருகின்றன. அல்லது இலங்கையின் கிழக்குப் பகுதியிலுள்ள இந்து சமுத்திரத்திற்குத் திரும்புகின்றன. இவ்வாறு நோக்கும்பொழுது இந்தக் கிராமமானது ஆழிக்கான (சமுத்திரத்துக் கான) வளை புள்ளியாக உள்ளது. இதனாலேயே இது இப்பெயர் பெற்றிருக்கலாம் போலத் தெரிகிறது.



கடற்கரையில் அமைந்துள்ள 'கோரி' ஆழமானது இந்த வளைவைக் கப்பல் மாலுமிகளுக்குத் தெரியப்படுத்துகின்றது. கோரியின் உச்சியில் இப்பொழுது வெளிச்சம் இல்லை, ஆனால் உச்சியில் ஏறி வெளிச்சம் ஏற்றுவதற்கு வசதியாக ஏணிக்கட்டை பதித்துள்ளனர். கோரி யடியைச் சூழவுள்ள பகுதியில் கட்டிடச் சிதைவுகளும் ஓட்டுத் துண்டுகளுடம் காணப்படுவது மிக முக்கியமான ஒரு தரவாகும். அதாவது கலங்களுக்குக் கரையை விளக்கும் இந்தப் பயன்பாடு நீண்டகாலமாக நடந்து வந்துள்ளது போலத் தெரிகிறது.

"வங்காளவிரிகுடாவின் தெற்கெல்லை முடிவடைந்து இந்து சமுத்திரம் ஆரம்பிக் கின்ற வளைவான இடம் என்பதை ஆழியவளை சுட்டுகிறதுபோல் தெரிகிறது" (நேர்காணல்: சிவத்தம்பி, கா. ஐப்பசி 2003:). இலங்கைத்தீவைச் சூழந்து வங்காள விரிகுடா, பாக்குநீரிணை, இந்து சமுத்திரம் எனும் கடல்கள் உள்ளன. இவற்றுள் வங்காள விரிகுடாவையும் இந்து சமுத்திரத்தையும் எல்லைசுட்டிப் பிரித்துக்காட்டும் ஒரு கேந்திர நிலையமாக அமைந்துள்ள இடம்போலும் இந்த ஆழியின் வளைவு தெரிகிறது. இதன் காரணமாகவும் 'ஆழியவளை' என்னும் பெயர் அமைந்திருக்கலாம்.

கடலும் கடல்சார்ந்த இந்தக் கிராமத்தில், முல்லைக்குரிய காடும் மருதத்திற்குரிய வயலும் சிறுபான்மை அமைந்துள்ளன. ஊரின் வடக்கே கடற்கரையோரம் தென்னை யும் அதைத்தொடர்ந்து பனையும் வடலிக் கூடல்களும் நிறைந்துள்ளன. தெற்கே களித்தரை கொண்ட வயலும், பயிர்த் தோட்டங்கள், தென்னந்தோட்டங்கள், கிரவல்காடு என்பனவும் ஊரின் மத்தியில் இயற்கைத் தாவரங்களாலான சிறுகாடும் உள்ளன. அவற்றில் நாவல், வீரை, சுரவினை, பாவட்டை, செலுந்தில், கீளு, உயில் பாலை, முதிரை, காரை, ஈஞ்சு முதலிய மரங்களும் அங்கங்கே சில ஆல, வேப்ப மரங்களும் காணப்படுகின் றன. குரங்கு, முயல், பன்றி போன்ற மிருகங்களும் கிளி, புறா, மைனா, கானாங்கோழி, காகம் போன்ற பறவை களும் பெரும்பாலும் காணப்படுகின்றன. காட்டுப்பற்றையைப் படிப்படியாக அழித்து,

(தொடர்ச்சி 21ஆம் பக்கம்...)




ரொறன்ரோ நகரசபை உறுப்பினர்

**போல் ஐன்ஸ்லி**

வட்டாரம் 24, ஸ்காபரோ - கில்வூட்

TORONTO

**உதவி தயாராக உள்ளது**

தொகுதியில் வாழ்வோருக்கான ரொறன்ரோ நகரசபை சம்பந்தப்பட்ட அனைத்து பிரச்சனைகளுக்கும் தீர்வுகாண்பது எமது சேவை

- வசதிக்கேற்ற விலையில் வீடுகள்
- வளர்ப்பு பிராணிகள் மற்றும் விலங்குகளுக்கான சேவை
- அடுக்கு மாடிகளுக்கான தரநிலை • நூலகம்
- கட்டிட அனுமதிப்பத்திரம் • குப்பை அகற்றல்
- குழந்தை பராமரிப்புக்கான மானியம் • நகரசபைத் தேர்தல்
- அவசரகால வதிவிட வசதிகள் • தீயணைப்பு சேவை
- நகராட்சி உரிமம் மற்றும் தரநிலைகள்

எமது சமூக தொடர்பு சாதனங்களும், வலையத் தளமும் தினமும் பதிவேற்றம் செய்யப்படுவதால், தகவல்களை உடனுக்குடன் பெற்றுக்கொள்ள பின்வரும் தகவல் சாதனங்களைப் பாவிக்கவும்.

Twitter: @Ainslie_Ward24 Instagram: @cllrainslie
Facebook: @ward24scarboroughguildwood

- "ஒன்ராரியோ வேலைகள்" நிறுவனத்தின் சேவைகள்
- வாகனத்தரிப்பிடம்
- சோலைகள் • பொதுப் போக்குவரத்து
- நகர்காவலர் சேவை • மரங்கள்
- பொதுச் சுகாதார சேவை • குடிநீர்
- தெருக்கள் • ஆதன வரி
- மீள்சுழற்சி மற்றும் உணவுக்கழிவு பசுமைத் தொட்டி

பொது சுகாதார சேவை அலுவலகத்தின் தகவல் தொலைபேசி இலக்கமும் 311 என்ற இலக்கமும் அதி கூடிய அழைப்புக்களை ஏற்றுக்கொள்வதால், ரொறொன்ரோ மாநகரசபையின் www.toronto.ca/covid19 என்ற வலையத் தளத்தில் 52 மொழிகளில் உங்களுக்கு வேண்டிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**CONSTITUENCY OFFICE**
Scarborough Civic Centre
150 Borough Drive, 2nd Floor
Scarborough, ON M1P 4N7
Phone: 416-396-7222
Fax: 416-392-4006

**TORONTO CITY HALL OFFICE**
100 Queen Street West,
2nd Floor - Suite C52
Toronto, ON M5H 2N2
Phone: 416-392-4006
Fax: 416-392-4005

councillor_ainslie@toronto.ca
Ward 24 Scarborough-Guildwood
@cllrainslie
www.paulainslie.com
@Ainslie_Ward24
Paul Ainslie (City of Toronto)

**www.paulainslie.com 416-396-7222**

# Proud to be serving you through these two Funeral Homes!

**GTA EAST**

OGDEN FUNERAL HOMES
4164 Sheppard Ave E,
Scarborough, ON M1S 1T3.
www.ogdenfuneralhome.com

**GTA WEST**

LOTUS Funeral and Cremation Centre Inc.
121 City View Dr,
Etobicoke, ON M9W 5A8.
www.lotusfuneralandcremation.com

:: Family owned and operated for over 70 years
:: East Toronto location just off Hwy 401, between Kennedy Road and Midland Ave
:: Affordable funeral plans to meet your budget

:: On-Site Crematorium
:: West Toronto location just off Hwy 401,410, 427 & 407 North of Belfield Rd and East of Hwy 27
:: Beautiful Facility With Up To 500 Seating

State of the art technology
Financing plans available for both preplanned funerals and at-need funerals
Diverse staff to care for your needs, honour your traditions and speak your language
Travel Repatriation Insurance available (**$495.00 only**) for your lifetime coverage



## Patricia Peter BBM

*Licenced Funeral Preplanning Director*
*Licenced Insurance & Investment Advisor*

Direct: **416-834 5753**
Email: advisorpat10@gmail.com

*"Serving With Dignity, Compassion and Excellence"*

# Brand New House For Sale - In Scarborough




- 4 Bedrooms
- 1 Half + 3 Full washrooms
- Double Door Double Garage
- Double Door walkout Basement
- Lot size (50′ X 170′)
- Revine Lot
- Large Deck • Fireplace
- Size - 3,300 sq.ft.





Raja Mahendran**
416.315.9397

## HomeLife / GTA Realty Inc. Brokerage*

**416.321.6969**

HOMELIFE
HIGHER STANDARDS

5215 Finch Ave. E., #203, Toronto ON. M1S 0C2

*Independently Owned & Operated ** Broker

# வீழ்ச்சியில் இருந்து எழுந்து வர இந்தியாவுக்கு வெகுகாலம் ஆகும்!

**நேர்காணல் :** பேரா. ஜெ. ஜெயரஞ்சன் **சந்திப்பு: கண்ணன்**

தமிழகத்தின் புதிய பிரபலம் பேராசிரியர் ஜெ. ஜெயரஞ்சன். பொருளாதார நிபுணர் என்கிற அடையாளத்துடன், கடந்த இரண்டு ஆண்டுகளில் செய்தித் தொலைக் காட்சி விவாதங்களின் வாயிலாக பரவலாக அறியப்பட்டவர். விவாதங்களில் இவர் எடுத்துரைக்கும் வாதங்களின் எளிமையும் ஆழமும் அவற்றின் பின்னால் இருக்கும் தார்மீகக் கோபமும் சமூக வலை தளங்களில் தமிழரிடையே இவரை ஏக பிரபலம் ஆக்கியுள்ளது. யார் இந்த ஜெயரஞ்சன்? பின்னணி என்ன? அவரை சந்தித்தோம்.

**முதலில் உங்களைப் பற்றி, உங்கள் பின்னணி பற்றி சுருக்கமாக சொல்ல முடியுமா?**

நான் பிறந்தது தஞ்சை மாவட்டத்தில். என் தந்தை அரசுப் பணியிலிருந்ததால், பணி மாறுதலாகிக்கொண்டே இருப்பார். அதனால், எந்த ஊரிலும் நிலையாக இருந்ததில்லை. பள்ளிக்கூடங்கள் மாறிக் கொண்டே இருப்பேன். இளங்கலைப் படிப்பை மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தில் பயின்றேன். கணிதவியல் பொருளாதாரத்தில் முதுகலை முடித்து விட்டு, சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனத்தில் (எம்.ஐ.டி.எஸ்.) முனைவர் பட்டம் பெற்றேன். அதன்பின் புதுச்சேரியில் உதவிப் பேராசிரியராக சிலகாலம் பணிபுரிந்துவிட்டு, சென்னையில் மாற்று வளர்ச்சி மையம் என்கிற ஆராய்ச்சி நிறுவனத்தை தொடங்கினேன். தற்போது வரை அதன் இயக்குநராக இருந்து வருகிறேன்.

**தொலைக்காட்சி விவாதங்களில் நீங்கள் வைக்கும் வாதங்களில் திராவிடம் மற்றும் இடதுசாரி சார்பு தெரிகிறது. ஒன்றிய அரசுக்கும் தமிழ்நாடு மாநில அரசுக்கும் எதிராகக் காத்திரமான வாதங்களை முன்வைப்பதால் பாஜக எதிர்ப்பாளர் என்றும் உங்களை கூறு கின்றனர். உங்கள் அரசியல் சார்பு என்ன?**


நான் திராவிடம், இடதுசாரி, வலதுசாரி உள்பட எந்த சிந்தனையாளரும் கிடை யாது. நான் பொருளாதாரம் பயின்றவன். பொருளாதாரத் துறையில் ஆய்வு செய்தவன் அதனடிப்படையில் அணுகி என் பார்வையில் வாதங்களை முன் வைக்கிறேன். எது சரி, எது தவறு என்பதை மக்களே முடிவு செய்து கொள்வர். அவ்வளவுதான். என்னுடைய பொருளாதாரம் தொடர்பான எழுத்துக்கள் மற்றும் கருத்துக்களில் வரலாறு, சமூக வியல், மானுடவியல் கலந்திருக்கும். அதனால், பார்ப்பதற்கு திராவிடம் அல்லது இடதுசாரி சார்பு தெரியும். நான் பல ஆண்டுகளாகவே விவாத நிகழ்ச்சிகளில் பங்கேற்றுப் பேசி வருகிறேன். சமீப காலமாகத்தான் இவை யூடியூப் போன்ற தளங்களில் பகிரப்படுவதால், என்னை பாஜக எதிர்ப்பாளராக பலரும் பார்க் கின்றனர். காங்கிரஸ் ஆட்சியின்போதும் அப்போதைய பொருளாதார நடவடிக்கை களை கடுமையாக விமர்சித்திருக்கிறேன்.

**கடந்த ஐம்பது ஆண்டுகளில், குறிப்பாக திராவிட கட்சிகளின் ஆட்சியில் தமிழகம் மிகவும் பின்தங்கிவிட்டது என்ற பாஜக வினரின் பிரச்சாரத்தை புள்ளி விவரங் களுடன் மறுத்து, இந்தியாவின் மற்ற மாநிலங்களைவிட தமிழ்நாடு வளர்ச்சி அடைந்துள்ளது எனச் சொல்கிறீர்கள். தமிழகத்தின் இந்த வளர்ச்சிக்கு காரணம் என்ன என நினைக்கிறீர்கள்?**

இந்தியாவின் மற்ற மாநிலங்களோடு ஒப்பிடும்போது தமிழ்நாடு இவ்வளவு வளர்ந்த மாநிலமாக மாறியிருப்பதற்கு முக்கியக் காரணம் சமூக நீதிதான். அது இல்லை என்றால் கேரளம், தமிழ்நாடு தவிர்த்து ஏனைய மாநிலங்களில் இருப்பதுபோல் வெகுசிலருக்கான வளர்ச்சி யாக மட்டுமே இருந்திருக்கும். அதுதான் மக்களை அடுத்த அடுத்த கட்டத்துக்கு நகர்த்தியபடி போய்க்கொண்டே இருக்கி றது. அப்படி நகர்த்தும்போது அவர்கள் பல பிரச்சினைகளிலிருந்து விடுபடுகின்றனர். அதனால், அவர்களுடைய பணமும் சக்தியும் நேரமும் அவர்கள் அடுத்த கட்டங்களை நாடிச் செல்வதற்கு ஏதுவாக இருக்கிறது. அதைவிடப் பெரிய விஷயம் சாப்பாட்டுக்காக யாரும் யாரிடமும் போய் நிற்கத் தேவையில்லை என்ற நிலை தமிழகத்தில் உள்ளது. பசி, பட்டினியைத் தமிழகம் விரட்டியடித்த வரலாறு முக்கியமானது.

**பொருளாதாரத்தைப் பற்றி எல்லோருக் கும் புரியும்வகையில் பேசுவதுடன் எழுதி யும் வருகிறீர்கள். இந்தியாவில் பண மதிப்பு நீக்கத்தின்போது நீங்கள் எழுதிய 'கறுப்புப் பணமும் செல்லாத நோட்டும்' நூல் பரவலான வரவேற்பைப் பெற்றது. நீங்கள் எழுத ஆரம்பித்தது எப்படி?**

மக்களுக்கு ஏற்படும் இன்னல்கள்தான் என்னை எழுத வைத்தது. 1980களில் சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனத் தில் மாணவனாக இருந்தேன். என்னைச் சந்திக்க வரும் ஊடக நண்பர்கள் பொருளாதாரத்தைப் பற்றிக் கட்டுரை கேட்பர் அப்படித்தான் எழுத ஆரம்பித்தேன். குறிப்பாக, வேளாண் துறையையும் அதன் பொருளாதாரத்தையும் பற்றி அதிகம் எழுதினேன். நான் மாணவனாக இருந்தபோது காவிரிப் பிரச்சினை உச்ச கட்டத்தில் இருந்தது. அப்போது காவிரியைப்பற்றி எழுதினேன். இதெல்லாம் தான் தொடக்கப் புள்ளி. அதற்குப் பிறகு, முப்பதாண்டு காலம் தேசிய, சர்வதேச அளவிலான ஆய்வு நிறுவனங்களில் முழுநேர ஆய்வுப் பணியில் இருந்து விட்டேன். ஆனால், வெகுஜன மக்களுக்குப் பொருளாதார சிந்தனையைக் கொண்டு செல்லாமல் மேல்மட்ட நிலையிலேயே பேசிக் கொண்டிருப்பதில் அர்த்தம் இல்லை என்று நினைத்தேன். அந்தச் சூழலில், தொலைக்காட்சி ஊடகங்கள் என்னை இழுத்துக்கொண்டுபோய் விவாதங்களில் உட்கார வைத்தன. அதன் தொடர்ச்சியாக, பணமதிப்பு நீக்கத்தின்போது 60 நாட்களில் 100



கட்டுரைகள் எழுதினேன். பின்னால், அது புத்தகமாகவும் வந்தது. நான் எழுதிய பிற பொருளாதாரக் கட்டுரைகளையும் தொகுத்து 'இந்தியப் பொருளாதார மாற்றங்கள்' என்றொரு புத்தகத்தையும் வெளியிட்டோம்.

**தமிழகத்தில் தமிழில் வெளியாகும் பொருளாதாரம் பற்றிய புத்தகங்களுக்கு வரவேற்பு எப்படி இருக்கிறது?**

மிகவும் குறைவுதான். நான் படிக்கும்போது தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் தமிழ் வழிக்கல்விக்கு நிறைய முக்கியத்துவம் கொடுத்தது. முக்கியமான பொருளாதாரப் புத்தகங்களை ஒரு சில நல்ல மொழி பெயர்ப்பாளர்கள் மொழிபெயர்த்திருந்தனர். அதற்குப் பிறகு படிக்கவே முடியாத அளவுக்கு மோசமான மொழிபெயர்ப்புகள் வர ஆரம்பித்தன. அதற்குப் பிறகு பொருளாதாரம் சார்ந்த எழுத்துகள் இரண்டு வகையாக இருந்தன. முதல் வகை நிதி ஆலோசகர்களின் எழுத்து. பங்குச் சந்தையில் எப்படிப் பணம் போடுவது, தங்கத்தில் முதலீடு செய்ய லாமா என்பது போன்று எழுதுவோர் அதிகம். அதைவிட்டால் இரண்டாவதாக, இடதுசாரி சிந்தனையாளர்களின் எழுத்து. இதைத் தாண்டி, பொருளாதாரத்தைத் தமிழில் விரிவாக விளக்கி எழுதியதுபோல் எனக்கு யாரும் நினைவில் இல்லை. இதுவும் ஒரு காரணம்.

**இந்தியப் பொருளாதாரம் இப்போது எந்த நிலையில் இருக்கிறது?**

கொரோனா உருவாகுவதற்கு முன்னரே இந்தியப் பொருளாதாரம் மோசமான நிலையில்தான் இருந்தது. இப்போது அதைவிட படுமோசமான நிலையில் இருக்கிறது. இந்தியா பொருளாதார ரீதி யில் மிக வலுவான இடத்தில் இருப்பதாக சொல்லிவந்தோம். அதாவது, உலகிலேயே ஐந்தாவது மிகப் பெரிய பொருளாதாரம் என்று கூறிவந்தோம். அதை கொரோனா வும் மாநிலம் விட்டு மாநிலம் நடந்தே செல்லும் புலம்பெயர் தொழிலாளர்களும் கேள்விக்கு உட்படுத்தியுள்ளனர்.

இந்தியாவில் மிகப் பெரிய ஏற்றத்தாழ்வு இருக்கிறது. பெரும்பாலானோர், அதாவது 90 சதவீதத்திற்கும் மேலான பணியாளர் கள், வேளாண்துறையையும் அமைப்புசாரா தொழில்களையும்தான் நம்பி இருக்கின்றனர். இவர்களுக்கு எந்தவிதமான சமூகப் பாதுகாப்பும் கிடையாது. இதனால்தான் ஊரடங்கு அமல்படுத்தப்பட்டவுடன் பல லட்சம் பேர் தங்கள் ஊரை நோக்கி நடக்க ஆரம்பித்தனர். இம்மாதிரி சூழலில் அவர்களுடைய வாழ்வாதாரத்தைக் காப்பாற்ற எந்த ஏற்பாடும் நகரங்களில் இல்லை. ஆகவே, அவர்கள் தங்கள் கிராமங்களை நோக்கித் திரும்பிச் செல்கின்றனர். ஐரோப்பிய நாடுகளில் இம்மாதிரியான தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு அளிக்கின்றனர். அமெரிக்கா வில் டிரம்ப் கூட பல்வேறு நிதிச் சலுகை களை அறிவித்திருக்கிறார். "அவர்களிடம் நிதி இருக்கிறது செய்கிறார்கள். நம்மிடம் பணம் இல்லை" என்கின்றனர் இவர்கள். ஆனால், ஏன் இந்தியாவிடம் பணம் இல்லாமல் போனது.

இந்திய ரிசர்வ் வங்கியின் நிதியை அவசர காலங்களில் எடுத்து பயன்படுத்துவதுதான் சரியான முறை. ஆனால், ஒன்றிய அரசானது சென்ற ஆண்டே ரிசர்வ் வங்கியின் கையிருப்பிலிருந்து ரூ.1.76 லட்சம் கோடி உபரி நிதியை எடுத்து செலவழித்து விட்டது. இப்போது கொரோனாவை எதிர்கொள்வதற்கு மாநில அரசாங்கங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யாமல், விழிப்புணர்வு பிரச்சாரம் மட்டும் செய்து கொண்டிருக்கின்றனர்.

**இந்தியா பொருளாதாரத்தில் கொரோனா மற்றும் ஊரடங்கு என்ன விளைவுகளை ஏற்படுத்தும்?**


மிகக் கடுமையாக இருக்கும். சில ஆண்டுகளுக்கு முன்பாகப் பண மதிப்பிழப்பு நடவடிக்கை, ஜிஎஸ்டி அறிமுகம் எல்லாம் சேர்த்து மிகப் பெரிய மந்தம் ஏற்பட்டது. அந்த மந்தத்திற்கு முக்கியமான காரணம், தேவை குறைந்தது தான். அன்றாடம் உபயோகிக்கும் பொருளிலிருந்து, வீடு, கார் போன்ற வாழ்வில் ஒருமுறை-இரு முறை வாங்கும் பொருட்கள் வரை தேவை குறைந்தது. அதற்குக் காரணம், மக்களிடம் பணம் இல்லாமல் வாங்கும் சக்தி குறைந்தது.

இப்போது, ஊரடங்கால் இரு விதமான விளைவுகள் ஏற்பட்டுள்ளது. ஒரு புறம் மக்களிடம் பொருட்களை வாங்கப் பணம் இல்லை. மற்றொரு பக்கம் உற்பத்திக் கான தேவையும் இல்லை. இதனால் வேலைக்கு ஆட்கள் தேவைப்பட மாட்டார் கள். அதனால், மக்களிடம் பணம் இருக்காது. இது ஒரு சுழல். இதிலிருந்து பொருளாதாரத்தை மீட்டெடுத்து இந்தியா விட்ட இடத்தைப் பிடிக்கவே வெகுகாலம் பிடிக்கும்.

இதனால், மிகவும் கீழ்மட்டத்தில் இருப்போர்தான் அதிகம் பாதிக்கப்படுவர். இந்திய மக்களில் 45 சதவீதம் பேர் அன்றாடம் சம்பாதித்து, வாழ்வோர்.

(தொடர்ச்சி 17ஆம் பக்கம்...)

# புகையை ஏன் பகைக்கவில்லை - நாடும் நடப்பும்



சி. நற்குணலிங்கம்
நெல்லியடி - இலங்கை

புகை அபிமானிகள் வாயினுள் உறுஞ்சி நெஞ்சார புகையை அனுபவிக்கின்றனர். மற்றைய நேரங்களைவிட புகைக்கும் நேரங்களில் கூடிய விடயங்களில் கவனம் செலுத்தக்கூடிய ஒரு நிலையில் தாங்கள் இருப்பதாக எண்ணுவதால், பகையைக் கூட புகையாய் ஊதித் தள்ளிவிடும் மனிதன் இந்தப் புகை எனும் பகையை பகைக்க முடியாமல் திணறுகிறான். யாழ்ப்பாணத்தில் இன்று புகை பிடித்தல் பாவனை அதிகரித்துச் செல்கின்றது. குறிப்பாகப் பதின்ம வயதினர் இதில் அதிகம் ஆர்வம் காட்டுவதாக அண்மைய ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இந்தப் பழக்கமானது இப்போது மட்டுமல்ல எதிர்காலத்திலும் இவர்களது கல்வியிலும், சமூக முன்னேற்றத்திலும், கலாசார பண்பாட்டிலும் கணிசமான பின்னடைவை ஏற்படுத்தப்போவது உறுதி. எனவே புகைத்தலை நிறுத்துவது அவசியமானது. எவ்வாறாயினும், பாவனையாளர் தாமாகவே உணர்ந்து செயல்படுவதே புகையை பகைக்க வழிவகுக்கும் என்பது மாத்திரமே உண்மை.

தார் எனும் பழுப்பு நிற பசை சிகரட் புகையில் அதிகம் உண்டு. சிகரட்புகையை மூச்சுடன் உள்ளிழுத்து நுரையீரலுக்குள் புகைபிடிப்பவர் செலுத்துகிறார். நுரையீரலில் குளிர்ச்சியைப் பெற்ற சிகரட்புகை அங்கேயே படிந்துவிடுகிறது. ஒரு சிகரட்டில் சுமார் 4,000 வகையான வேதிப் பொருள்கள் உள்ளன. அவற்றில் 'அசெட்டோன்' எனப்படும் ஒன்று, நாம் நகப்பூச்சைக் கழுவி எடுக்கப் பயன்படுத்தும் கொடூரத்தன்மை கொண்ட வேதிப்பொருள். 'சயனைட்' எனப்படும் விசம், 'பூடேன்' எனப்படும் எரிபொருள், ரொக்கட்டுகளை வானத்துக்குள் உந்தித் தள்ள வெடிபொருளாகப் பயன்படுத்தப்படும் 'மெதனோல்' ஆகியவற்றுடன் 'நேஃப்தனால்', 'ரேடோன்' எனப்படும் கதிர் இயக்க வாயுக்களும் சிகரட் புகையிலையில் உண்டு.

புகைபிடிக்காத அருகில் நிற்போர் வடிகட்டியின்றி நேரடியாகப் புகையை சுவாசிப்பதால் அதிக பாதிப்பை அடைகின்றனர். இதைத் தடுப்பதற்காக உணவகங்கள், கோயில்கள், பாடசாலைகள், வைத்தியசாலைகள், போக்குவரத்துச் சாதனங்கள், பொது இடங்கள் போன்ற ஆள் நடமாட்டம் கூடிய இடங்களில் புகைபிடிப்பது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளதுடன் இது தண்டனைக்குரிய ஒரு குற்றமாகும். இருப்பினும், நிக்கோடின் எனும் இரசாயனப் பதார்த்தத்துக்கு உடல் பழக்கப்பட்டு இருப்பதால் புகைக்க வேண்டும் என்ற ஆவல், அடங்காத ஆசை, பதற்றம், பரபரப்பு, அமைதியின்மை என்பன ஏற்படுவதால் புகைத்தலைப் பகைக்க முடியாதுள்ளனர்.

புகைத்தலால் நுரையீரல் கூடுதலாகப் பாதிகப்படும். புகைபிடிப்போருக்குக் கொலஸ்ரோல், நீரிழிவு நோய்கள் இருப்பின் இருதய நோய் விரவில் வரும்.

சிகரட் தூள் உயிரோடையே அஸ்தியை கரைக்கிறது. சிகரட்பெட்டி ஒரு கையடக்க சவப்பெட்டியாகும். எனவேதான் 2016ஆம் ஆண்டு சிகரட்டுக்கான வரி அதிகரிக்கப்பட்டது. இதன்படி இம்முறை சிகரட் ஒன்றுக்கான விலை 5ரூபா தொடக்கம் 10ரூபா வரை அதிகரிப்புச் செய்யப்பட்டுள்ளது. விலைவிவரத்தின் பிரகாரம் சிகரட்டொன்றின் விலை 55ரூபா வரை அதிகரிப்புச் செய்யப்பட்டுள்ளது. புகைத்தலுக்கு கடிவாளம் இடுவதற்கு அரசு சிகரட் பெட்டிகளின் வெளிப்புறம் 80%மான பகுதிகளை உள்ளடக்கி அதன் பாதிப்பை எச்சரிக்கையாகச் சித்திரிக்கும் ஒளிப் படங்கள் அச்சிடப்பட்டுள்ளன. புகைத்தல் தொடர்பான வெறுப்பான மனநிலையை புகை பருகுவோரிடம் ஏற்படுத்துவதில் சுகாதார அமைச்சு பிடிவாதமாக இருக்கின்றது.



World No Tobacco Day – 31 May 2020

புகைக்கும்போது அவர்கள் தமது வாழ்நாளில் 12 நிமிடங்களைக் குறைக்கின்றனர் என்ற உண்மையை தெரிந்து கொள்வதில்லை. 15 வயதுக்கும் 24 வயதுக்கும் இடைப்பட்டவர்களில் 26.6% புகை பிடிக்கும் பழக்கம் உள்ளோர். ஒவ்வொரு விடயத்திலும் ஆரோக்கிய நிலை குறித்த எண்ணங்கள் அனாவசிய மற்றதாகவே காணப்படுகின்றன. நம்மீது நமக்குள் அக்கறை இன்மையால் நோய்களுக்கும், அனாவசிய இறப்புக்களுக்கும் நாமே காரணங்களாகி விடுகிறோம். 2016ஆம் ஆண்டு ஹெல்திலங்கா நிறுவன தகவலின்படி, ஒவ்வொரு 10 ஆண்டுகளுள் 2 பேருக்குக் குறையாது சிகரட் புகைப்பதற்குப் பழக்கப்படுத்திக் கொள்கின்றனர். சிகரட் உற்பத்தி செய்து, விற்பனை செய்யும் நிறுவனங்கள் இயன்றளவில் நாளொன்றுக்குப் புதிதாக சிகரட்டை புகைக்கச் செய்வது தொடர்பாக 60 பேரை ஊக்கப்படுத்துகின்றன. அரசின் தவறான வரிக்கொள்கையால் 2017, 2018 ஆம் ஆண்டுகளில் புகை பிடிப்போரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்றும், 2016இல் 26%மான ஆண்கள் புகை பிடிக்கும் பழக்கத்துக்கு உள்ளாகியுள்ளனர். 2017இல் 7.7%மான ஆண்கள் புகைபிடிக்கும் பழக்கத்துக்கு ஆளாகியுள்ளனர் என 'அடிக்' நிறுவனத்தின் நிகழ்ச்சி அதிகாரி அசிததர்சன் தெரிவித்துள்ளார். இலங்கையில் 15 இலட்சம் பேர் சிகரட் பாவனையாளர்கள் எனவும், தற்போது சிகரட் பாவனை மேலும் அதிகரித்து வருவதாகவும் தேசிய புகையிலை மற்றும் மதுபான அதிகார சபை தெரிவித்துள்ளது. ஒருவர் ஒரு நாளைக்கு 5 சிகரட் என்ற வீதத்தில் பயன்படுத்துவதாகவும், 17%மான மக்கள் சிகரட் பழக்கம் கொண்டுள்ளனர் எனவும், இளவயதினர், சிறுவர்களின் மத்தியில் சிகரட் பாவனை அதிகரித்து வருவதுடன் அதிகளவிலான நோயாளர்களையும் அடையாளம் கண்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. சிகரட் பாவனையாளர்களை விடவும் அவரது அருகில் உள்ள நபருக்கே சிகரட் புகையின் தாக்கம் அதிகமாக இருப்பதுடன் சிறுவர்கள், குழந்தைகள் மற்றும் கர்ப்பிணித் தாய் மார்களுக்கு இதன் தாக்கம் அதிகமாகக் காணப்படும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

2016இல் புகைத்தல் காரணமாக நாளாந்தம் 60 இலங்கையர் சாவடைவதாகவும், வருடமொன்றுக்கு இத்தொகை 21,000 எனவும் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. 1.89 மில்லியன் இலங்கையர் நாளாந்தம் புகைத்தலில் ஈடுபடுகின்றனர். 3%மான பாடசாலை மாணவர்கள் புகைக்கின்றனர். புகைப்பொருள்களின் பாவனையால் ஏற்படும் புற்று நோய்க்கு சிகிச்சையாகப் பல மில்லியன்களை இறைக்க வேண்டிய நிலையும் காணப்படுகின்றது. வருடாந்தம் 68.4 பில்லியன் ரூபா புகைத்தல் சார்ந்த நோய்களால் பாதிக்கப்பட்டோருக்காகச் செலவிடப்படுகிறது. செய்தித் தரவொன்றின் அடிப்படையில் 2004ஆம் ஆண்டில் இலங்கைச் சனத்தொகையில் ஆண்களில் 21%மானோரும், பெண்களில் 0.8%மானோரும் புகைத்தலுக்கு அடிமையானோராகக் காணப்பட்டனர்.

2015இல் 30 வயது இளைஞர்களுக்கு நுரையீரலில் புற்று நோயும், இருதயத்தில் அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டிய அவசியமும் புகை பிடித்தலால் உண்டாகியது. இருதய நோயால் பாதிக்கப்படுவோரில் 4 பேரில் ஒருவர் புகைபிடிக்கும் பழக்கம் உள்ளவரே. இக்காலத்தில் 15 வயதுக்கு மேற்பட்டோரில் 33% பேர், 15 வயதுக்கும் 24 வயதுக்கும் இடைப்பட்டோரில் 26.6% பேரும், 25 வயதுக்கும் 39 வயதுக்கும் இடைப்பட்டோரில் 36.9% மானோரும், 40 வயதுக்கு மேற்பட்ட 38.9%பேரும் புகை பிடிக்கும் பழக்கத்துக்கு ஆளாகியிருந்தனர். 600 பேர்வரை சிகிச்சைக்காக வைத்தியசாலை விடுதிகளில் சேர்க்கப்படுவதாக இலங்கை சுகாதர அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

அதிகமானோர் ஒவ்வாத விடயங்களிலேயே தமது புலனை செலுத்துகின்றனர். தனிமனிதன் உறுதியான மனசக்தியுடன் தான் இதுபோன்ற ஒரு உயிர்க்கொல்லி பழக்கத்துக்கு ஆழாகாமல் இருக்க முடியும். அல்லது அதன் பிடியிலிருந்து விலக முடியும். புகை நமக்குப் பகை, புத்தியுடன் சிந்தியுங்கள். புகை பிடித்தால் உன் மனைவி விரைவில் விதவையாகி விடுவாள். புகைப்பவர் தனக்குத் தானே



கொள்ளி. சிகரட் விரல் பிடித்து சீக்கிரமே அழியாதே. புகை உங்களை புகைத்தே கொன்றுவிடும். எனவே புகைத்தலை இனியாவது பகைத்துக்கொள்.

---

## வீழ்ச்சியில்...

16ஆம் பக்கத்தொடர்ச்சி

இவர்கள், தினச் சம்பளம் வாங்கலாம், மாதச் சம்பளம் வாங்கலாம். ஆனால், இவர்களிடம் சேமிப்பு என்று ஏதும் இராது. முதல் 25 நாட்கள் ஊரடங்கிலேயே 20 சதவீதம் பேரிடம் எந்தப் பணமும் இல்லாமல் போய்விட்டது. ஊரடங்கை மேலும் சில நாட்கள் நீடித்தால், மீதமுள்ள 80 சதவீதம் பேரிடமும் ஏதும் இல்லாமல் போய்விடும்.

எனவே, பொருளாதார வளர்ச்சிநிலை எப்படியிருக்கிறது என்று ஒப்பிட்டுப் பேசுவதற்கு தகுந்த நேரம் இதுவல்ல. இது மக்களின் உயிர்போகும் காலம். இப்போதைக்கு ஆட்சியாளர்கள் கவனம் செலுத்த வேண்டியது, கொரோனாவை கட்டுக்குள் கொண்டுவருவது எப்படி, மக்களை காப்பாற்றுவது எப்படி என்பதை பற்றியதாகவே இருக்க வேண்டும்.

**கொரோனா பரவலுக்கு எதிராக கேரளா அரசு எடுத்துவரும் நடவடிக்கைகள் உலகம் முழுவதும் பாராட்டைப் பெற்றுள்ளது. அதை இந்தியா முழுவதும் விரிவுபடுத்த முடியுமா?**

கேரளா பெரிய அளவில் நிதி நெருக்கடியில் இருக்கக்கூடிய மாநிலம். ஒன்றிய



அரசிடமிருந்து வரவேண்டிய நிதியே அவர்களுக்கு வரவில்லை. இந்த நிதி நெருக்கடியிலும் இவ்வளவு வேலைகளை பார்த்துள்ளனர் என்பது பாராட்ட வேண்டிய விஷயம்தான். கேரளா போலவே தமிழகம் உட்பட இந்தியா முழுவதும் மாநில அரசுகள்தான் தங்களிடம் இருப்பதை வைத்து மக்களுக்கு ஏதோ செய்கின்றன.

## BASEMENT FOR RENT

**MARKHAM & STEELES**
2 bedroom with 2 washroom walkout bsmt for rent. No Car parking. Rent $1100. Close to 24 hours bus & other all facilities.
தொடர்புகளுக்கு: **647-761-8270**

**14TH AVENUE & MCCOWAN**
2 bedroom bsmt for rent (Look New). Sep. Entrance. Parking, Laundry. Close to all facilities. Avail. immediately.
**416.318.7103/ 905.471.9941**

**MORNINGSIDE & OLD FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.885.1033**

**MIDLAND & LAWRENCE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance. No Parking, laundry. Avail. Immediately.
தொடர்புகளுக்கு: **416.835.2003**

**MORNINGSIDE & MCNICOLL**
1 bedroom bsmt for rent. Sep. entrance. Parking, laundry. Close to all facilities. Avail. June, 2020.
Call **416.430.0999 / 647.287.0731**

**FINCH & TAPSCOTT**
1 Bedroom & 2 Bedroom Bsmt for rent. Family or Females preferred. Close to all facilities. Internet, laundry & utilities included.
தொடர்புகளுக்கு: **416.726.4186**

**BRIMLEY & STEELES**
1 bedroom & 1 washroom bsmt for rent. Sep. entrance. Close to TTC, School. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.296.7932**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & LAWRENCE**
3 bedroom , 2 washroom walkout basement For rent along with parking and laundry. Close to school & shopping centers. No smoking & no pets. Avail. June 01, 2020.
தொடர்புகளுக்கு: **647.981.1997**

## HOUSE/BASEMENT FOR RENT

**BELLAMY & BRIMORTON**
3 bedroom **house**( main floor)for rent. All amenities in walking distance.
1 bedroom **basement** apartment also for rent. Sep. entrance. 1 parking, laundry. Rent+utilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.505.9465**

## வீடு வாடகைக்குபெற்றிட/கொடுத்திட

வாடகைக்கு வீடுகள், Condo., Bsmts போன்றவற்றை Scarborough, Markham, Mississauga, Brampton, Ajax பகுதிகளில் பெற்றிட
அழையுங்கள்: **647.402.2937**

மேலும் பக்கங்கள் 19, 20

## ROOM FOR RENT

**PHARMACY & FINCH**
1 Room for rent. Unlimited Internet, Sep. Washroom. Close to all facilities. Avail.. Immediately.
**416.201.1222 / 647.261.0216**

**MARKHAM & ELESMERE**
Room for rent in bangalo house main floor. Close to all facilities. All included wifi and parking. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.996.6977**

**ORTON PARK & LAWRENCE**
1 Bedroom for rent. Parking, laundry. Male preferred. No smoking & No drinking. Avail. immediately.
**647.707.0457 / 647.857.9536**

## HOUSE FOR SALE/RENT

**SCARBOROUGH**
3 Bedroom & 2 washroom House for Rent / sale. Convenient location
**Please contact for further details:**
**416.648.7283**

## HOUSE FOR SALE/RENT

**SCARBOROUGH**
**SHEPPARD & McCOWAN**
2 Bedroom condo apartment with one parking for sale $299,900.00

**AJAX**
**HARWOOD & KINGSTON**
3 bedroom brick detached bungalows with finished basement apartment with 3 bedrooms. for sale
**$600,000.00**

**416.917.0557**
**Rajah Masillamany**
**(HomeLife / Future Realty Inc.)**

## வாடகைக்கு

**4 BR, 3 BR, 2 BR, 1 BR**
**House, Condo, Basement**
**வாடகைக்கு உள்ளது**
**அழையுங்கள்.**
**647.861.8240**

## SALE / RENT

**MARKHAM & SHEPPARD**
4 bedroom & 3 washroom house for **Sale.**

**NEILSON & SHEPPARD**
2 bedroom & 2wasroom Houses for **Rent.**
Kannan Kankesu: **416.834.4200**

## உடனடி வாடகைக்கு விற்பனைக்கு

**வீடுகள், கொண்டோக்கள் விற்க, வாங்க வாடகைக்கு விட வாடகைக்கு பெற்றுக்கொள்ள** அழையுங்கள்
**Jey - 416.816.9011**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & LAWRENCE**
2 Bedroom basement
Available for family or as a single room (male preferred). Parking, laundry. Close to all the facilities. Mins to Lawrence road & TTC bus stop
தொடர்புகளுக்கு: **365 338 3406**

## BASEMENT FOR RENT

**MIDLAND & EGLITON**
basement 2 bed room for rent. Near Elementary school close to Ttc, subway, Tamil supermarket and supermarket. Separate entrance and parking lot.
Contact: **416 755 8397/ 647 909 3765**

## HOUSE FOR RENT

**SCARB. GOLF CLUB & BRIMORTON**
3 Bedroom & 1 washroom bungalow house for rent. Close to all facilities. Avail. July 01, 2020.
தொடர்புகளுக்கு: **416.836.5482**

**MIDLAND & MCNICOLL**
3 Bedroom & $2^{1}/_{2}$ washroom house for rent. Close to school, Bus, Shops & all facilities. Available Immediately.
**Call : 416-949-5697**

**Markham & Painted Post Dr.**
3 Bedroom + 1 Bedroom (Basement) Avail. Immediately
**416 . 439 - 8460 / 647 . 204 - 0680**

**TAPSCOTT & FINCH**
3 Bedroom & 2 washroom house for rent. Rent $2400+50% utilities. No smoke, Alcohol or pets. Avail. immediately.
**647.855.2148/647.985.6101**

## BASEMENT FOR RENT

**NEILSON & MCLEVIN AVE .**
3 Bedroom, 2 washrooms bsmt for rent. Sep. Entrance, Sep. laundry, with 2 parking lot spot. Close to TTC, School & shopping Mall. No smoking & No pets
Contact:
**647.622.5706/ 416.388.2794**

## மணமகன் தேவை

91இல் பிறந்த (5'5") (IT manager) ஆக Mississaugaவில் பணிபுரியும், கனடாவில் பட்டம் பெற்ற Registration முறிவடைந்த (R.C) மணமகளுக்குக் கனடாவில் மணமகன் தேவை.
**Contact : 647-456-1943** (after 6 p.m)

## OFFICE SPACE FOR RENT

**MIDDLEFIELD & FINCH**
Avail. immediately.
தொடர்புகளுக்கு:
**647.296.7932**

## MOVING & DELIVERY

புதிய, பாவித்த Fridge, Stove விற்பனைக்கு உண்டு.
பழைய இரும்பு பொருட்கள், Electonic பொருட்கள் இலவசமாக எடுக்கப்படும்.
Junk Removal
Call Rajan: **647.524.1320**

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## BASEMENT FOR RENT

**MARKHAM & SHEPPARD**
1 Bedroom, kitchen, living room, 1 full washroom BSMT Rent available from immediately.
**call @ 416.953.0370**

## ROOM FOR RENT

**MCCOWAN & DENNISON**
Room For Rent in Markham. Close to Bus stop. Utilities included. Avail. Immediately.
**Contact : Baskaren +1 (437) 344-1589**
**Baby : 416.522.3314**

## ஸ்ரீசாயி திருமண சேவை

உங்கள் பிள்ளைகளுக்கு பொருத்தமான வாழ்க்கைத் துணையை தேடிக்கொள்ள எங்கள் சேவையை நாடுங்கள். பல துறைகளில் தகுதி பெற்ற மணமகன், மணமகள் உள்ளனர்.
**416.890.6497**
**srisai2912@hotmail.com**

## திருமணசேவை

திருமண சேவைக்கு
தொடர்பு கொள்ளவும்
**905.607.3896**

## வாகன போக்குவரத்து

விமானநிலையம், நயகரா நீர்வீழ்ச்சி மற்றும் நீண்ட தூர, குறுகிய தூரப் பயணங்களுக்கு

அழையுங்கள்: **416.880.5952**

## JUNK REMOVAL

பழைய இரும்பு பொருட்கள், **Electronics** பொருட்கள் வீசுவதற்காக வைத்திருந்தால் இலவசமாக எடுக்கப்படும்.

**MOVING / DELIVERY AVAILABLE.**

தொடர்புகளுக்கு: **பிறேம்-647.835.5244**

## TAILORING

**SCARBOROUGHஇல்**

Saree Blouses $25க்கு தைத்துக் கொடுக்கப்படும்.

**V G Tailors:**

**647.621.3694**

## AZ DRIVERS WANTED

Amero Logistics Inc. is currently hiring experienced AZ drivers for Toronto to Montreal run. Also AZ city drivers for local work in GTA.

Need 1-year experience and clean CVOR and abstract. Weekly Pay .

For more info call : **647.274.0300**

## MATH & PHYSICS TUTORING

By a well-qualified and experienced teacher

For all grades from Grade 4 to 1st year of university

*Special classes*

- Advanced function
- Calculus & vectors
- Data management

***All Classes available in Scarborough & Stouffville***



Mr.S.F.Xavier (Teacher)

**Contact: 647.340.9490 / 416.732.2228**

விடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

மேலும் பக்கங்கள் 18, 20

## SC Dream House Ltd

COLOR YOUR HOME
MAKE LIFE COLORFUL
www.scdreamhouse.com

**For your free Consultation and free Estimate**



- Bathroom Renovation
- Basement Finish
- Kitchen Renovation
- Drywall Works
- Carpentry
- Electrical
- Plumbing

**VINCENT 416-456-0811**

## PTR DOORS & WINDOWS

OVER 14 YEARS EXPERIENCE

RESIDENTIAL & COMMERCIAL




- Custom Doors & Windows
- Front & Patio Door
- Replacement (Doors & Windows)
- California Shutters & Blinds
- Separate Entrance Door for Basement
- Replace Caulking
- Painting
- Pot Lights Installation

FREE ESTIMATE! Call Today

24 hours Emergency Service

We Fix Broken Glass Windows & Doors

**RAVI : 416-825-9482 KANNA : 647-297-7815**

email : ptrrenovation@gmail.com

## USED VEHICLES WANTED

LEXUS HONDA ACURA TOYOTA



- Any Km
- Any condition

We pay upto **$1000**

Please call:

**437.688.6305**

# FOR RENT - CONDO/HOUSE / BASEMENT
# WATSON PROPERTY MANAGEMENT - 416-284-9999

* *Scarborough* - Ellesmere / Military trail – Basement
Room for Students Near U Of T Scarborough. Furnished Room Available. Everything Included. 5 Minutes Walk To U Of T / Centennial College. **[Asking $520/m]**

* *Scarborough* – Ellesmere Rd / Morningside Ave – Basement
Room Available for Students Or Professional. Near U Of T Scarborough / Centennial College. Close to TTC & Hwy 401. **[Asking $560/m]**

* *Scarborough* – Ellesmere Rd / Brimley Rd – Bungalow – Main Floor
(3 B/Rooms +2 Bath) Near U Of T Scarborough / Centennial College. Close to Ttc & Hwy 401. **[Call -647-913-9241]**

* *Bowmanville* – *Hwy 401* / Hwy 2 – Detached – House
Furnished large home with 4 or 6 Bedroom Available For Short & Long Term Rent.**[ Call 647-913-9241]**

* *Scarborough* – Morningside / *Mcnicoll* – Detached – Main Fl
(4 Brm + 3 Full Bath) Looking for a Family. 60 % Utility+1 Parking **[Asking 2600/m]**

* *Scarborough* - *Morningside* / Sheppard – Detached – Rooms
Rooms available for Female Students or Couples. Close To Scarborough U Of T, Centennial College, Pan Am Ctr, Hwy 401, Hospital.**[ Call 647-913-9241]**

* *Toronto* – Bay / Carlton – Condo Apt
(1 Brm + 1 Bath) Fully Furnished Condo. **[Asking $2400/m + Hydro]**

* *Newcastle* – Shipway Ave / Lake breeze dr – Condo Apt
(1Brm +1Bath) Brand new Condo, Lake view. **[Asking $1700/m+Utility]**

* *Brock* – Innisfill Beach rd / Essa Rd – Detached House
(3 Brm + 4 Bath) 3000 Sf Spacious house available June 1. **[Asking $1950/m + Utility]**

* *Pickering* – Taunton Rd / Brock Rd – Condo Town House
(2 Brm + 3 Bath) 1 Parking available. 1100 Sf **[Asking 2000/m]**

## வீட்டு முதலீட்டாளர்களுக்கான கருத்தரங்கு

- வாடகைக்கு விட சரியான வீட்டை எப்படி தெரிந்தெடுப்பது.
- அந்த வீட்டுக்கான கடனை எப்படிப்பெறுவது.
- சரியான வாடகையாளர்களை எப்படி கண்டுபிடிப்பது.
- அந்த வீட்டை சரியாக எப்படி நிர்வகித்து கூடிய லாபம் பெறுவது.

இதற்கான கருத்தரங்கில் கலந்துகொள்ள விரும்புவர்கள்

தொடர்பு கொள்ளவும்: கரு கந்தையா: 416-284-5555
watsonpm1989@gmail.com

## SEMINAR FOR INVESTORS

- How to select the right property to buy as an investment?
- How to qualify for mortgage for those properties?
- How to find the right tenant?
- How to manage the property to get high net income?

If you are interested contact us for more details! Limited Seats!

Contact: Karu Kandiah: 416-616-7278
watsonpm1989@gmail.com

# MANAGING RESIDENTIAL PROPERTIES
watsonpm1989@gmail.com

# முதலீட்டாளர்களே! நீங்கள் ஓய்வெடுங்கள்!!
## உங்கள் வீட்டை வாடகைக்கு கொடுத்து பராமரிக்கும் வேலையை நாங்கள் செய்து தருவோம்!!

**எமது சேவைகள்:**

- வீட்டின் சரியான வாடகையைத் தீர்மானிப்பது.
- வீட்டைச் சந்தைப்படுத்தி அதை விசாரிப்பவர்களுக்கு மேலும் தகவல் தருவது.
- தகுதியான வாடகையாளர்களை கூட்டிச் சென்று வீட்டைக் காட்டுவது.
- வாடகைக்குப் பெற விரும்புவோரின் வேலை வருமானம், நம்பகத்தன்மை என்பவற்றை உறுதி செய்து கொள்ளுதல்.
- தகுதியான வாடகையாளருடன் வாடகை ஒப்பந்தத்தை செய்து கொள்ளுதல்.
- வாடகையாளர் குடியேற முன்னரும் பின்னரும் வீட்டின் நிலையை கவனித்துக்கொள்ளுதல்.
- சரியான திகதியில் வாடகைப்பணத்தை அறவிட்டு வீட்டுரிமையாளரின் வங்கிக்கணக்கில் வைப்பிலிடுதல்.
- பிரச்சனை தரும் வாடகையாளர்களை வெளியேற்றும் முயற்சியில் ஈடுபடல்.
- வீட்டில் திருத்த வேலைகள் தேவைப்படும் போது அதில் அனுபவம் வாய்ந்தவர்களை அனுப்பித் திருத்தும் முயற்சியில் ஈடுபடல்.
- வருட முடிவில் அந்த வீட்டின் வரவு செலவுக் கணக்கை உரிமையாளர்களுக்கு ஒப்புவித்தல்.
- வாடகை ஒப்பந்தத்தை புதுப்பித்தல்.
- வருடாந்த வாடகை அதிகரிப்பை அறிவித்தல்.
- வீட்டின் பெறுமதியில் ஏற்ற இறக்கத்தை அறிவித்தல்.
- திரும்பவும் வீடு உங்களுக்குத் தேவைப்படும் போதுசரியான வழிமுறை களைக் கையாண்டு பெற்றுத்தரல்.
- வாடகைக்கு விடக்கூடிய குறைந்த விலையிலுள்ள வீடுகளை கண்டுபிடித்து வாங்க உதவி செய்தல்.
- வாடகைக்கு விடுவதற்கு வீட்டில் என்ன திருத்த வேலைகள் அவசியம் என்று அறிவுரை வழங்குதல்.

## You can relax while we take care of your investment property!

**WATSON** PROPERTY MANAGEMENT LTD

Direct: 416-284-9999
WatsonPM1989@gmail.com
80 Corporate Drive, Unit 207
Scarborough, ON, M1H 3G5



Karu Kandiah Director
30+ Years in Real Estate

# ஆழியவளை...

13ஆம் பக்கத்தொடர்ச்சி

ஆண்டு தோறும், மக்கள் பெருக்கத்திற் கேற்ப குடியேற்றம் கடற்கரையிலிருந்து உள்நோக்கி நடைபெறுகின்றது.

இவ்வூரில், மக்களின் வதிவிடத்தை 'வளவு' என்று அழைப்பர். நான்கு பக்கமும் வேலி அடைத்த, அரை ஏக்கர் அல்லது ஒரு ஏக்கர் நிலத்தில் வளவுகள் அமைந்திருக் கும். வளவுக்குள் கிழக்கே அடுக்களை யும், தெற்கே கொட்டிலும், மேற்கே பூசைவீடும், வடக்கே சார்வீடு அல்லது வடக்குவீடு எனப் பெரும்பாலும் நான்கு அமைப்புக்கள் இருக்கும். நான்கு வீடு களின் மத்தியில் 'முற்றம்' உண்டு. சனப் பெருக்கம் ஏற்படுவதற்கு முன்னர் வீடுகள் பெரும்பாலும் கடற்கரைக்கு அருகே உள்ள உயர்ந்த நிலப்பகுதியிலேயே இருந்தன. இந்த உயர்ந்த பகுதி கடற் கரைப்பிட்டி எனப்படும். இந்தக் கடற் கரைப்பிட்டியில் ஆரம்பித்துக் கிராமப் பகுதியை நோக்கியே தென்னை பச்சிலைக் கொடிகள் போன்ற தாவரங்கள் வளரும்.

2002-இன் மீள்குடியேற்றத்தின் பின்னர் பெரும்பாலான வளவுகள் நான்கு பரப்பு, இரண்டு பரப்பு என்று சுருங்கியுள்ளதைக் காணமுடிகின்றது.

உள்ளூராட்சி அமைப்பில், இக்கிராமம் செம்பியன்பற்றும் கிராமசபையின் பதினோராம் வட்டாரமாகக் கொள்ளப்படுகின்றது. மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குள் வரும் இக்கிராமம் கிராம சேவகர் மட்டத்தில் யாழ். 431ஆவது அலகுக்கு உரியது. நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பருத்தித்துறைத் தொகுதி யினுள் வருகின்றது. ஊரின் தெற்கே கிழக்குமேற்காகத் 'தார்' போடப்பட்ட 'பருத்தித்துறைவீதி' என்னும் பிரதானவீதி ஒன்று அமைந்துள்ளது. வடக்கே கடற் கரையை அண்மித்துப் பல கிராமங்களை ஊடறுத்து, கிழக்கு மேற்காகத் தாழையடி-கட்டைக்காடு வீதி செல்கின்றது.

கிராமத்தின் மத்தியில், வடக்குத் தெற்காகக் கடற்கரையிலிருந்து வீரக்கழி ஆற்றின் வடக்குக் கதையோரம்வரை 'ஆழியவளை வீதி' எனப்படும் ஒரு வீதி (கல்றோட்) அமைந்துள்ளது. தற்போது கடற்கரையில் தொடங்கி, அரைமைல் தூரம் அளவில் உள்நோக்கி, வீதிகளின் இருமருங்கிலும் ஊரின் மத்தியிலும் தொடர்தொடராக வளவுகள் அமைந்துள்ளன. மக்களின் நடமாட்ட வசதிகருதிச் சிறப்பாகத் திட்டமிடப்பட்ட முறையில், ஊருக்குள் ஒழுங்கைகள் விடப்பட்டுள்ளன. வளவுகளில் பெரும்பாலும் ஓடுகளால் வேயப்பட்ட அல்லது பனைஓலை, கிடுகால் வேயப்பட்ட வீடுகள் காணப்படு கின்றன. ஒவ்வொரு வளவிலும் கற் கிணறோ கொட்டுக்கிணறோ இருப்பதால் எக்காலத்திலும் ஊரில் குடிநீர்ப்பஞ்சம் ஏற்படுவதில்லை. பெண்கள் காட்டிலும், ஆண்கள் கடற்கரையிலும் இயற்கைக் கடன் கழிப்பர். போதிய வருமானமும் வாய்ப்புமுள்ள சிலரின் வீடுகளிலேதான் மலசலகூட வசதியுள்ளது.

## 2. சமூக அமைப்பு

ஓர் ஊரைப்பற்றி அறிந்துகொள்வதற்கு சமூக அமைப்புமுறையைத் தெரிந்து கொள்வது இன்றியமையாதது. தமிழரின் வரலாறு எழுதும்போது சாதிப்பெயர்கள் குறிப்பிடவேண்டிய தேவையுள்ளது. வாய் மொழியில் வழங்கும் சாதிப்பெயர்களை இலக்கியங்களிலும் வரலாறுகளிலும் கொண்டுவர வேண்டியதைத் தவிர்க்க இயலாதுள்ளது. தமிழர் சமூக அமைப்பானது சாதி அதிகாரப்படி நிலையில் தங்கியுள்ளதுதான் அதற்கான உண்மைக்காரணம். "யாழ்ப்பாணச்சமூகம் ஒரு சமூக அதிகாரப் படிநிலை முறைமை யினை உடைய ஒன்றாகும். அதாவது, மேலேயுள்ளது உயர்ந்தது, படிப்படியாகக் கீழே வரும்பொழுது கீழேயுள்ளது தாழ்ந்தது என்ற ஓர் எடுகோள் இங்கு உண்டு. இந்தப் படிநிலை, சாதியமைப்பை அடிப்படையாகக் கொண்டதாகும்" (சிவத்தம்பி கா. 2000: 28). இதுபற்றி மேலும் பின்வருமாறு கூறப்படுவதாவது:

"யாழ்ப்பாணத்தின் சமூக அமைப்பைப்பற்றி ஆராயவேண்டும் என்னும் பரவலான அக்கறை எம்மவரிடையே பல்லாண்டு களாகக் காணப்பட்ட போதும் அதன் சாதியமைப்பைப் பற்றிய ஆய்வுகள் தமிழில் எழுதப்படவில்லை. எழுதுவது பற்றிய அக்கறையும் காட்டப்படவில்லை. இதன் பிரதான காரணம் யாழ்ப்பாணச் சமூகத்தில் சாதி 'பேசாப்பொருள்' ஆக இருப்பதே. இந்தப் பேசாப்பொருளைப் பேசுவதற்குத் துணிவு வேண்டும்" (சண்முகலிங்கம், க. விமர்சனக் கட்டுரை 1994: 18) (மேற்கோள்: ஆய்வுக்கட்டுரை, பாங்ஸ். எம். 1957).

ஆழியவளை, சைவசமய வழிபாடுகள் 'பதியெழுஅறியாப்' பழங்குடி மக்களாகிய 'கரையார்' சமூகத்தினர் வாழும் கிராமமாகும். இவர்களது குடிமக்களாகக் கொள்ளப்படும் அம்பட்டர் எனப்படும் சவரத் தொழிலாளர்களும் வண்ணார் எனப்படும் சலவைத் தொழிலாளர்களும் கிராமத்தில் உள்ளனர். ஊரின் தேவை களுக்குப் 'பறை' அடித்து, வருசத்துக்குத் 'தட்டி' (பறை அடித்து) வருசக்கூலி 'தண்டும்' பாரம்பரிய வழக்கமுள்ள பறையரை 'ஊர்ப்பறையர்' என்று அழைப்பர். இவர்கள், பருத்தித்துறைக்கு அண்மையிலுள்ள 'கற்கோவளம்' கிராமத்திலேயே வாழ்கின்றனர். தேவைகள் ஏற்படும்பொழுது இவர்கள் வந்து கடமை புரிந்து செல்வர். இவர்களுடன் சேர்ந்து இவ்வூரில் கரையார், அம்பட்டர், வண்ணார், பறையர் எனும் நான்கு சாதி மக்களே உள்ளனர்.

1960களில் பருத்தித்துறைக்கு அண்மை யிலுள்ள 'வல்லிபுரம்' கிராமத்திலிருந்து வந்து, ஊரின் தென்மேற்குப் பகுதியில் குடியேறிச் 'சீவல்' தொழில் செய்யும் நளவ சமூகத்தைச் சார்ந்தவர்களும் தற்போது ஊரில் நிரந்தரமாக வாழ்கின்றனர். எனவே, அவர்களையும் சேர்த்து ஐந்து சாதிக் குழுமத்தினர் தற்போது இக் கிராமத்தின் சமூக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். இக்கிராமத்தில் பிராமண, வெள்ளாளச் சாதிக் குழுமத்தினர் இல்லை. ஊரில், அந்தந்தச் சாதிக்காரர் தத்தமது உரிமைக் கோயில்களில், மந்திரம் இன்றிப் பூசை செய்கின்றனர்.

இவ்வூரில் அம்பட்டர், வண்ணார், நளவருக்குத் தொழிற்கட்டுப்பாடுகள் இருப்பதில்லை. அவர்கள் தமது சொந்தத் தொழில்களைச் செய்துகொண்டு விவசாயம், மீன்பிடி போன்ற தொழில் களையும் செய்யலாம். சீவல் தொழிலாளி யின் மகன் ஒருவர், தான் சீவல்தொழில் பழகமாட்டேனென்று சிறிய வயதிலிருந்து சம்மாட்டி ஒருவருடன் சேர்ந்து மீன்பிடித் தொழிலில் தேர்ச்சிபெற்று வாழ்ந்த வரலாறு உண்டு. ஊர் அம்பட்டரின் மகளைக் கரையாரப்பெடியன் காதலித்துக் 'கல்யாணம்' முடித்துச் சமூக அனுமதியுடன் வாழ்ந்த வரலாறும் உண்டு.

கிராமத்தின் பெரும்பான்மை மக்களாகிய கரையாருக்குள்ளே சில 'கோத்திரப்' பிரிவுகள் தொன்றுதொட்டுக் காணப்படு கின்றன. கோத்திரங்களுக்குள் கலந்து மாறித் திருமணங்கள் நடைபெறும்போதும், கோத்திரங்களின் ஆணிவேர் இன்னும் அறுந்து போகாமல் விளங்குகின்றன. இத்தகைய கோத்திரப் பகுப்பை 'சேர்வைக் காரர்' என்று இவ்வூரில் பேசிக்கொள்வர். இவ்வூரில் கோணங்கியார் சேர்வை, சின்னவியார் சேர்வை, பண்டியாமுனைச் சேர்வை, சங்கசரியார் சேர்வை என்பனவே பிரதான சேர்வைகளாகும். சேர்வைக்காரர் என்பது தமிழ் நாட்டில் ஒரு சாதியாக இருந்திருக்கிறது. இக்கிராமத்தில் வாழும் சேர்வைகளுக்குள் உறவுக் கலப்பும் நடைபெறும், சிலவேளைகளில் அடிதடி சண்டையும் ஏற்படுதலுண்டு.

குடும்ப அலகைப் பொறுத்தவரை மிகவும் ஊன்றிச் சொல்ல வேண்டியுள்ளது. இவ்வூரில் 'கூட்டுக்குடித்தனம்' முற்றாக இல்லையென்றே சொல்லலாம். எல்லோரின் குடும்ப வாழ்க்கையும் தனிக்குடித்தனம் தான். இவ்வமைப்பானது, ஆண்தலைமை ஆதிக்கம் என்னும் 'ஆளுமையை' இங்கு சிறப்பாக வளர்த்துள்ளது. இவ்வூரிற் சராசரித் திருமண வயது, பெண்கள் பதினான்கும் ஆண்கள் பதினாறுமாக 1950களிலேயே இருந்தது. ஆண் பிள்ளைகளுக்குப் பதினான்கு வயதுகளில் திருமணம் செய்துகொடுத்துத் தனிவளவு அடைத்துத் தனிக்குடித்தனம் ஆக்கிவிடும் பெற்றோரும் அன்று வாழ்ந்தனர். ஆண்கள் தாங்களே காட்டை வெட்டி அழித்து, வேலி அடைத்துக் கிணறு வெட்டிக்கட்டி, நான்கு வீடுகள் அமைத்துத் தென்னை, வாழை, பூமரம், மாமரம் வளர்த்து ஏறத்தாழ எட்டுப்பத்துப் பிள்ளை களைப் பெற்றுவளர்த்துக் கலியாணம் முடித்துக் கொடுத்து வாழ்ந்து வந்தனர். இதேபோல் இன்றைய இளைஞர்களும் வாழ்கின்றனர். ஆனால் எழுத்தறிவு காரணமாகப் பெறும் குழந்தைகளின் தொகை படிப்படியாகக் குறைந்து வந்துள்ளது. இப்பொழுது ஒரு குடும்பத்துக்குச் சராசரி இரண்டிலிருந்து நான்கு குழந்தைகள் காணப்படுகின்றன.

பன்னிரண்டு, பதினாறு முழ நீளமுள்ள 'வீச்சுவலைளை'த் தூக்கி எறிந்து வீசுவதைப் பார்த்துவிட்டு, அவ்வாலிபனுக் குக் கலியாணம் பேசிவிடுவர். தாய், தந்தைக்குமுன் இறப்பின், தந்தையை அவர் இறக்கும்வரை பிள்ளைகள் கவனிப்பர். தந்தை, தாயார்க்குமுன் இறப்பின், தாயார் எந்தப் பிள்ளைகளுட னும் சேர்ந்து வாழமாட்டார். அவருடைய வளவு வேலி வீடுகளைப் பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் சரிபிழை பார்த்துக் கொடுக்க, அம்மூதாட்டி அவ்வீட்டிலேயே வாழ்ந்து இறப்பார். 'சாவீடும்' அங்கேதான் பெரும்பாலும் நடைபெறும். இப்பாரம்பரிய வழக்கமானது, தாய்வழிச் சொத்துரிமை யைக் காட்டுகிறது போல் தெரிகிறது. தாய் இறந்தபின் 'கடைக்குட்டிப்' பிள்ளைக்குத் தாயாரின் காணிபூமி சேரும். இச்சிறிய ஊரில், ஆழியவளை யா:431 கிராம அலுவலரின், மார்கழி 2002இன் புள்ளி விபரப்படி, (391) முன்னூற்றித் தொண்ணூற்றொரு குடும்பங்களைக் கொண்ட ஆயிரத்தி ஐநூற்றிமூன்று (1503) மக்கள் வாழ்கின்றனர். இவர்களுடன் 709 ஆண்களும் 794 பெண்களும் உள்ளனர். இதனுள் 61 குடும்பங்களைக் கொண்ட 169 கணவனை இழந்த பெண்களும், 35 குடும்பங்களைக் கொண்ட 143 ஊன முற்றோரும், 02 குடும்பங்களைக் கொண்ட 05 அனாதைகளும் உட்படுவர். இவர்கள் மீன்பிடி, வணிகம், அரசபணி, சீவல் தொழில், சலவைத் தொழில், சவரத் தொழில், கூலித்தொழில் முதலியனவற்றின் வருமானத்தில் தனித்தனிக் குடும்பமாகச் சீவிக்கின்றனர்.

இப்புள்ளி விபரம் எனது மைத்துனன் டாக்டர் வேலுப்பிள்ளை சிவநேசன்

(தொடர்ச்சி 23ஆம் பக்கம்...)

## எல்லையில்லா மகிழ்ச்சியுடன் எங்குமே திரிகிறது!




முதலாளி அழுகின்றார் முதல்முடங்கிப் போச்சென்று
தொழிலாளி அழுகின்றார் தொலைந்தது தம்வாழ்வென்றும்
அழுகின்றார் தொடர்ந்தே அழுதபடி இருங்களென்று
சீனாவின் சொத்து சிரித்தபடி திரிகிறது!

பள்ளிக்கல்வி குலைந்ததென்று படிக்கின்றார் அழுகின்றார்
துள்ளியாடும் கலைஞரெல்லாம் துயருடனே உழலுகிறார்
அள்ளியள்ளி மனிதவுயிர் அபகரிக்கும் கொரோனாவோ
அதிகார தோரணையில் அரசாட்சி செய்கிறது!

விவசாயம் போச்சென்று விவசாயி வெதும்புகிறான்
வியாபாரம் தொலைந்ததென்று வியாபாரி கலங்குகிறான்
நலமழிப்ப தொன்றேதான் தன்விருப்பு எனக்கொண்டு
நாடுகளைக் கொரோனாவும் நலிவடையச் செய்கிறது!

வல்லரசு எனச்சொன்னார் வகையறியா திகைக்கின்றார்
வெல்லுவோம் என்றுரைக்க முடியாமல் தவிக்கின்றார்
கொல்லுதலைக் குறிக்கோளாய் கொண்டிருக்கும் கொரோனாவோ
எல்லையில்லா மகிழ்ச்சியுடன் எங்குமே திரிகிறது!



எம்.ஜெயராமசர்மா
மெல்பேண்
அவுஸ்திரேலியா

# ஒன்ராரியோவில் குழந்தைகளைப் பராமரித்தல்

## Child day-care in Ontario

### குழந்தை பராமரிப்பு வகைகள்:

**1.** உரிமம் பெற்ற வீட்டு குழந்தை பராமரிப்பு - Licensed home child care
**2.** உரிமம் பெற்ற குழந்தை பராமரிப்பு மையம் - Licensed child care centre
**3.** பாடசாலை செல்லும் குழந்தைகளுக்கு பாடசாலை செல்வற்கு முன்னும் பின்னும் பராமரிப்பு-Before and after school care
**4.** உரிமம் பெறாத வீட்டு குழந்தை பராமரிப்பு - Unlicensed home child care

**1. உரிமம் பெற்ற வீட்டு குழந்தை பராமரிப்பு** -Licensed home child care

இவர்கள் கல்வி அமைச்சினால் (Ministry of Education) உரிமம் பெறாத, ஆனால் அமைச்சினால் உரிமம் பெற்ற வீட்டு குழந்தை பராமரிப்பு முகவர்களுடன் (Licensed home child care agencies) ஒப்பந்தம் செய்துகொண்ட தனிப்பட்ட வீட்டு பராமரிப்பாளர்கள். இந்தப் பராமரிப்பாளர்கள் கைக்குழந்தைகள் (infants), குழந்தைகள் (toddlers) மற்றும் முன்பள்ளி வயதுக் குழந்தைகளைப் (pre-school aged children) பராமரிக்கலாம். பாடசாலைக்குச் செல்லும் குழந்தைகளாயின் அவர்கள் பாடசாலைக்கு செல்வதற்கு முன்னரும் பாடசாலைக்குச் சென்றுவந்த பின்னரும் பராமரிக்கலாம்.



இவ்வாறான வீட்டு குழந்தை பராமரிப்பிலுள்ள சில நன்மைகள்:

1. இவை அரசாங்கத்தால் வரையறுக்கப்பட்ட குறிப்பிட்ட தரங்களை பூர்த்தி செய்த மற்றும் பரிசோதிக்கப்பட்ட வீடுகளாக இருக்கும்.
2. இங்கு உடன்பிறப்புகள் ஒன்றாக பராமரிக்கப்படுவர்.
3. இங்கு பராமரிக்கப்படும் குழந்தைகளின் எண்ணிக்கை குறைவாகவிருக்ககும்.
4. இங்கே வேலை செய்யும் பராமரிப்பாளர்களுக்குத் தொழில்முறை மேம்பாட்டு வாய்ப்புகள், ஆதரவு மற்றும் கண்காணிப்பு ஆகியவற்றை இவர்களை ஒப்பந்தம் செய்த பராமரிப்பு முகவர்களால் வழங்கப்படும்.
5. பெற்றோருக்குக் குழந்தை பராமரிப்பு கட்டண மானியங்கள் (Child care fee subsidies) கிடைக்கக்கூடும்.
6. பராமரிப்பாளர்களால் பூர்த்தி செய்யப்பட வேண்டிய அரசினால் அறிவிக்கப்பட்ட தரநிலைகள் அனைத்தும் இந்த வீடுகளில் பேணப்படும்.
7. இவை கல்வி அமைச்சின் கண்காணிப்புகளுக்கு உட்பட்டவையாகும்: குறைந்தபட்சம் வருடத்திற்கு ஒருமுறை, முகவர்களிடம் உரிமம் பெற்ற வீட்டில் குழந்தை பராமரிப்பு முகவர்களையும், குழந்தை பராமரிப்பு இடங்களையும் கல்வி அமைச்சின் கண்காணிபாளர்கள் Ministry of Education Inspections பரிசோதனை செய்வர்.
8. இவற்றிற்கு உரிமம் பெற்ற வீட்டு குழந்தை பராமரிப்பு ஆலோசகர்களின் (Licensed child care Home visitors) சேவை கிடைக்கும்:

இவர்கள் உரிமம் பெற்ற குழந்தை பராமரிப்பு வீடுகளுக்குச் சென்று குழந்தைகளை பராமரிப்பவர்களையும், வீட்டையும் கண்காணிப்பதற்கு உரிமம் பெற்ற வீட்டு குழந்தை பராமரிப்பு முகவர்களினால் சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். இவர்கள் ஆரம்பகால குழந்தை பருவ கல்வியாளர்கள் கல்லூரியின் (College of Early Childhood Educators) உறுப்பினரா

(தொடர்ச்சி 25ஆம் பக்கம்...)

# கிழக்கு ஆபிரிக்காவில் வெட்டுக்கிளியின் பாதிப்பு (Locust)



சூர்யா நடித்து வெளிவந்த 'காப்பான்' என்ற தமிழ்த் திரைப்படத்தை பார்த்தோர் நான் சொல்லவரும் ஒருவகை பூச்சியை பற்றி அறிந்திருப்பீர்கள். இந்தப் பூச்சி விவசாயிகளின் எதிரி. கிழக்கு ஆபிரிக்காவில் இதன் தாக்கம் பெரிதாகக் காணப்படுவதாகக் கூறப்படுகிறது. ஏற்கனவே இதன் தாக்கம் ஒரு தடவை பெரிய பாதிப்பை கிழக்கு ஆபிரிக்காவில் ஏற்படுத்தியுள்ளது. இதன் தொடர்ச்சியாக ஜூன்/ஜூலை 2020இன் அறுவடை காலத்தில் மீண்டும் தலையெடுக்கும் என்ற அச்சத்துடன் விவசாயிகள் வாழ்கின்றனர். ஏற்கனவே கோவிட் 19இன் பாதிப்பால் உணவுப் பற்றாக்குறையில் இருக்கும் இம்மக்களுக்கு மீண்டும் ஒரு தாக்கம், பெரியதொரு நெருக்கடி இருக்கும்.

ஏற்கனவே 2019இன் இறுதியில் செயற்பாட்டிலிருந்த வெட்டுக்கிளியின் புதியதொரு பரம்பரை ஜூன்/ஜூலை 2020இல் பெரியளவில் உருவெடுக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் ஏறக்குறைய 5 மில்லியன் சதுர கிலோ மீற்றர் பகுதியை அழிக்கலாம் எனக் கவலையுடன் எதிர்பார்க்கப்படுகிறது. இந்தப் பூச்சி ஒரு நாளைக்கு 150 கிலோ மீற்றர் வரை பறக்கக்கூடியது. பொதுவாக சோளம் மற்றும் ஏனைய உணவுப் பயிர்களுக்கு சேதத்தை ஏற்படுத்தும் பெரிய தொகுதியிலான பல பில்லியன் வெட்டுக்கிளிகள் கென்யா நாட்டின் 90 மில்லியன் மக்களுக்கான உணவுப் பயிர்களுக்கு சேதத்தை ஏற்படுத்தும். இதைப்பற்றி ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (Food and Agriculture Organization-FAO) ஏற்கனவே கூறியுள்ளது.




70 வருடங்களாக இந்த நிலைமை காணப்படவில்லை என இருந்தாலும், எதிர்பாராதவாறு கடந்த வருடம் இதன் பாதிப்பு மறு உருவம் எடுத்துள்ளது. இதிலிருந்து தப்புவதற்கு US$200 மில்லியன் வரை தேவைப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. உலக நாடுகள் அதற்குரிய பண உதவியை கொடுக்குமா?
இதன் பாதிப்பு பாகிஸ்தான் மற்றும் இந்தியா வரை சென்றாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

ஏற்கனவே கோவிட்19இன் பாதிப்பிலிருந்து தப்பிப் பிழைத்திருக்கும் சில நாடுகளுக்கு இதன் பாதிப்பு மேலும் நெருக்கடியைக் கொடுக்கலாம்.

ஆபிரிக்காவின் கிழக்குப் பக்கத்தில் இந்து சமுத்திரத்தில் இருக்கும் மடகஸ்கார் (மக்கள் தொகை 27 மில்லியன்) நாட்டின் தலைவர் தங்களிடம் இருக்கும் ஒருவகை கசாயம் (திரவம்) கோவிட்19இலிருந்து பாதுகாப்பதாகக் கூறியுள்ளார். அத்துடன் இந்த வகை கசாயத்தை சில குறிப்பிட்ட கிழக்கு ஆபிரிக்க நாடுகள் பாவிப்பதாகவும் கூறப்படுகின்றது. இந்த சிகிச்சை முறை தகுதியானதாக இருக்குமென்று கூற முடியாது எனவும் சிறுவர்களுக்கு பக்க விளைவுகளை கொடுக்கலாம் எனவும் உலக சுகாதார அமைப்பு (World Health Organization-WHO) கூறியுள்ளது. மடகஸ்கார் அதிபர் இந்தக் கசாயம் மூலிகைகளிலிருந்து தயாரிக்கப்படுவதால் இதைப் பாவிப்போருக்கு எதுவித பக்கவிளைவுகளும் கிடையாது என கூறியுள்ளார்.

'காப்பான்' திரைப்படத்தில் வெட்டுக்கிளி அழிக்கப்பட்டதாகக் காட்டப்பட்டாலும் இதன் பாதிப்பை அல்லது இனப்பெருக்கத்தை முற்றாக எவ்வாறு தடுக்கலாம் என்பதனை ஆரம்பத்திலேயே தகுந்த நடவடிக்கைகளை எடுக்காமல் போனால் பாதிப்பு பல மடங்காகலாம். - ஆக்கம்: சத்தியன்

# முள்ளிவாய்க்கால் அவலங்கள்

## தமிழர் உள்ளங்களில் குமுறி எழும் உரிமைக் குரல்

முள்ளிவாய்க்கால் என்று சொன்னால் தமிழரின் உதிரம் சிந்தும்
தமிழனத்தின் ஆன்மாவைச் சுட்டெரித்துச் சாம்பலாக்கி
நந்திக் கடலில் கரைத்த தினம் மே மாதம் பதினெட்டு
தமிழரின் இதயங்களை குமுறி வெடித்த தினம்



பார்த்தவிடமெல்லாம் பதற வைக்கும் சடலங்கள்
குருத்துக்கள் காய்பிஞ்சு பழங்கள் சிதைந்த தினம்
குண்டுகளால் சிதறுண்ட அங்கங்கள் மரங்களிலே
மூச்சற்றுக் குருதியிலே தோய்ந்துறைந்த உறவுகளின்
கோலங்கள், தமிழனத்தைக் குற்றுயிராய்ச் சாய்த்த தினம்

பலியான தாயகத்து உறவுகளின் குருதியினால்
சேறாகிச் சிவந்த முள்ளி வாய்க்காலின் முற்றத்திலே
பறிகொடுத்த இரத்தங்கள் துடிதுடித்துக் கதறியழும்
பாசத்தின் இறுக்கத்தின் பேரொலியால் நிலமதிரும்

போரோய்ந்து பதினோராண்டு நிறைவுற்ற போதிலும்
பொங்கியெழும் உள்ளத்துக் குமுறல்கள் வெடிக்கும் தினம்
உரிமைக்குப் போராடி இனம் காத்த
மறவர்களை ஒன்றாகப் பலிகொடுத்து தவித்த தினம்

தமிழீழக் கொள்கையை கைக்கெடுத்த தலைவனுடன்
இணைந்து நின்று பணியினிலே சீர்சிறப்பாய்ச் சேவையாற்றி
சரணடைந்தோர் வாகனத்தி லேற்றப்பட்டுக் காணாமல் போனோர்
அவ் உறவுகளின் உள்ளக்குமுறல்
முள்ளிவாய்க்கால் முற்றத்தை அதிர வைக்கும் கொடூரதினம்

முள்ளிவாய்க்கால் கொலைக்களத்தில் உறவுகளைப் பலிகொடுத்து
கையறுந்த நிலையினிலே கதறியழும் அபலைகளைக்
கைகொடுத்து நிமிர்த்தி வைக்கத் துணிந்தெழுவோர் எவருமில்லை
புலம்பெயர்ந்த உறவுகளும் தாங்கிநின்று தேற்றுகின்றனர்.

வன்னியிலே வாழ்ந்த எங்கள் நாலரை இலட்சம் உறவுகளும்
மந்தைகளாய் ஒதுக்கித்தள்ளிப் பாதுகாப்புப் பட்டியிலே
குண்டுகளால் கொன்றொழித்த ஆட்சியாளர் இணைந்தெழுந்து
வெற்றிவிழாக் கொண்டாடுகையில் தமிழனமே பொங்கியெழேன்
தன்னாட்சி உரிமைக்காய் கரமிணைத்துப் போராடேன்.

மிஞ்சியவர் மூன்று இலட்சம் முட்கம்பி வேலிக்குள்
அனுபவித்த துன்பங்கள் துயரங்கள் கொஞ்சமல்ல
வெய்யிலிலே காய்ந்துலர்ந்து மழையினிலே தோய்ந்துறைந்து
பகலிரவாய் விழித்திருந்து காலுளைய நீள்நிரையில்
நீரெடுக்கப்பட்ட துன்பம் எழுத்தினிலே வடிக்கலாமோ

தமிழரெம்மைச் சுதந்திரமாய் வாழ வைக்கப் போராடி
உயிரீந்த தியாகிகளின் யாகத்தின் கனவுகளை
நெஞ்சத்திற் சுமந்துகொண்டு துடிப்புடனே எழுந்திடுவோம்
சாத்வீகப் போராட்டம் முன்னெடுக்கத் திரண்டிடுவோம்
தன்னாட்சி உரிமையினை மீட்டெடுக்கத் துணைந்தெழுவோம்.

- மாரீசன் -

# ஆழியவளை...

21ஆம் பக்கத்தொடர்ச்சி

அவர்களால் மர்கழி 2002-இல் தரப்பட்டது.

### 3. நிறுவனங்கள்

இவ்வூரில் சைவக் கோயில்களாக: அத்தியடிப் பிள்ளையார், தோட்டத்துப் பிள்ளையார், ஆலடி வைரவர், சக்தி அம்மன், வீரபத்திரர், வீரபத்திரருக்கு முன்னாலுள்ள அண்ணமார், காட்டின் மத்தியிலுள்ள அண்ணமார், வெட்டு முருகன், பாலையடிப் பிள்ளையார் என்பன அமைந்துள்ளன. கல்விக்கூடங்களாக: ஆழியவளை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, பாலர் பாடசாலை மேற்கு, பாலர் பாடசாலை கிழக்கு என்பன உள்ளன. சனசமூக நிலையங்களாக: மகாத்மா சனசமூக நிலையம் கொக்குளாய் வீதி, கலைவாணி சனசமூக நிலையம் ஆழியவளை வீதி என்பன செயற்படுகின்றன. விளையாட்டுக்கழகங்களாக, சக்திவேல் விளையாட்டுக் கழகம்-கொடுக்குளாய் வீதி, அருணோதயா விளையாட்டுக்கழகம் ஆழியவளைவீதி என்பன உள்ளன. இவற்றுடன் ஆழியவளைக் கடல் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், ஆழியவளைக் கிராம அபிவிருத்திச்சங்கம், ஆழியவளைச் கூட்டுறவுச் சங்கம், பிள்ளையினார் ஏ. டி. (Authorised distributor), பலதானியக் கடை, ஆழியவளைப் புனரமைப்பு நல்லிணக்கக்குழு என்பனவும் ஆழியவளையில் அமைந்துள்ளன நிறுவனங்களாகும்.

இவ்வூர் மக்கள் மருத்துவ சேவையை, நான்கு மைல் தூரத்திலுள்ள 'மருதங் கேணியிலும்' மூன்றுமைல் தூரத்திலுள்ள 'நித்திய வெட்டையிலும்' அமைந்துள்ள மருத்துவ நிலையங்களில் பெற்றனர். மருந்தை, குறிப்பிட்ட நாட்களில் நடைபெறும் நடமாடும் மருத்துவக் கொட்டிலிலும் உடனடி மருந்தைப் பக்கத்து ஊர்களிலுள்ள ஆயுர்வேத 'ஊர்ப்பரியார்'களிடமும் பெற்றனர். இத்தகைய வளர்ச்சிகள் பெரும்பாலும் அண்மைக்காலங்களில் தான் நடந்தேறின. 1950களுக்கு முன்பு ஒருசில கோயில்கள், ஒரு பாடசாலை, ஒரு ஏ.டி. பதிவுப் பலதானியக்கடை, நடமாடும் மருத்துவம், ஊர்ப்பரியாரிகளின் ஆயுர்வேத மருந்து போன்ற வாய்ப்புக்கள் மட்டும்தான் கிடைத்தன. ஒருசிலர்தான் செல்வச் சந்நிதி, கதிர்காமக்கந்தன், மாவிட்டபுரம், கீரிமலை போன்ற பெருங்கோயில்களுக்குத் தலயாத்திரை செல்வர். மிகவும் இன்றியமையாத, ஆனால் ஊர்க்கடையில் கடைக்காத பொருட்களுக்குச் சம்மாட்டிமார் போன்ற சிலர் தான் பட்டினம் (யாழ்ப்பாணம்) செல்வர்.

போதிய வாய்ப்புள்ள ஒருசில மாணவர் தான் பட்டினத்தில் கல்வி கற்றனர். ஏனையோரின் சராசரிக்கல்வி மூன்றாம் வகுப்புடன் நிறைவு பெற்றுவிடும். எவ்வித நோயாகிலும் மருதங்கேணி நித்திய வெட்டை (ஆஸ்ப்பத்திரிகள்) மருத்துவ நிலையங்கள்தான் இவ்வூர் மக்களுக்கு யாழ்ப்பாணம் பெரியாஸ்ப்பத்திரி மாதிரிச் செயற்பட்டன. நோய் நீத்தல் அல்லது இறத்தல் எதுவெனினும் பெரும்பாலும் இங்கேயே நடைபெற்று விடுவது அக்கால வழமை. பட்டினம் நோக்கிய போக்குவரத்து வசதிகள் மிகக் கடினமானவை. பெரும்பாலும் கால் நடையும் மாட்டு வண்டிலும்தான் நடைமுறையில் இருந்தன. அத்துடன் மக்களின் வறிய வாழ்க்கைக் சூழல் காரணமாகப் பட்டினத்தின் மருத்துவ நுகர்வு என்பதை, அவர்கள் நினைத்துக்கூடப் பார்க்க முடியாத பாமரமக்களாக வாழ்ந்தனர். ஒருவித 'கொள்ளைக் காய்ச்சல்' 1930களில் இவ்வூரில் பரவியபோது, தினமும் இறப்புகள் நேர்ந்தன என முதியோர் இன்றும் பேசிக்கொள்வர்.

இவ்வூரில் நூல் நிலையம், சங்கம், விளையாட்டுக் கழகம், கலைமன்றம் என்பன 1950களுக்குமுன் இருக்கவில்லை. ஆண்கள்: கிட்டிபுள், கிளித்தட்டு, வார் ஓட்டம், வட்டப்படி போன்ற விளையாட்டுக்களையும் பெண்கள்: கும்மி, கோலாட்டம், கொக்கான், ஊஞ்சல் என்பனவற்றையும் பொழுதுபோக்காக விளையாடினர். கோயில் கொண்டாட்டங்களும் ஊர்க் கலைஞர்களின் கூத்துக்களும்தான் மக்களது களியாட்டமாக இருந்தன. இத்தகைய அடிமட்ட வசதி வாய்ப்புக்கள் அமைந்த இக்கிராமத்தின் தொழில் வளங்கள் பற்றி அடுத்த இயலில் ஆராயப்படுகிறது.



## எல்லோரும் விரும்பும் மனிதராக வேண்டுமா?

நன்றாகப் பேசத் தெரிந்தோர் எல்லோரையுமே நண்பர்களாக்கி விடுவர். எந்தக் காரியத்தையும் தனது பேச்சுச் சாதுரியத்தால் உயர் அதிகாரிகள், உறவினர்கள், நண்பர்கள்.. யார் உதவியையாவது நாடி முடித்துவிடும் ஆற்றல் இருக்கும். அந்த ஆற்றலைப் பெற இந்த வழிமுறைகள் உதவியாக இருக்கும்.

- கேட்பவருக்கு தேவையான தகவல்களை மட்டும் சொல்வது.
- கேட்பவருக்குத் தேவையான எல்லாவற்றையும் சொல்வது.
- சரியான வார்த்தைகளைப் பயன்படுத்துவது.
- கேட்பவருக்குப் புரியும் விதத்தில் உதாரணங்கள் சொல்வது.
- தெரிவிப்பதற்கு ஏற்ற உடல்மொழியைப் பயன்படுத்துவது.
- உதவிகரமான உபகரணங்களைப் பயன்படுத்துவது.
- சரியான நேரச் சூழ்நிலைகளைத் தேர்வு செய்து பேசுவது.
- நிறைகளைப் பற்றி நிறைவாகவும், குறைகளைப் பற்றிக் குறைவாகவும் பேசவும்.
- சுற்றம் பார்த்துப் பேசுவது.
- பேசுபவர்களை முழுவதும் கேட்பது.
- நிறையக் கவனிப்பது.
- சரியான தொனியில் பேசுவது.
- வெறும் காதால் இல்லாமல், பேசுபவரின் உணர்வு நிலையைப் புரிந்துகொண்டு மனதால் கேட்பது.
- தேவையில்லாத சமயங்களில் பேசாமல் மௌனம் காப்பது.
- கருத்துப் பரிமாற்ற தடைகள் பற்றி உணர்வுபெறுவது.
- வரும் தகவல்கள் சரியானதுதானா என்று நிதானமாக கணித்து முடிவுகள் எடுப்பது.

மேற்கொண்ட நுணுக்கங்களை தனது அன்றாடப் பணிகளில் செயல்படுத்தினால் எல்லோரும் விரும்பும் மனிதராக, வெற்றியாளராகக் கொண்டாடப்படுவது நிச்சயம்.



## Math Tutorial 409

### Answers to tutorial 408

1)For the 1st nine pages a total of 9 digits were used.For pages 10 to 99 a total of 2x90 = 180 digits were used. Thus up to page 99 , a total of 189 digits were used , leaving 216-189 =27 digits to be used .

These 27 digits were sufficient to number 9 more pages with 3 digits numbers.HENCE THE NUMBER OF PAGES =9+90++9=108

2) The hundred digit must be 3 Sum of tens digit and unit digit is 12 . Since the unit digit must be odd , the tens digit and the unit digit mst be 5 or 7 ,it cant be 7 . So the number is 357

3)There are 5 sets of 4 questions ;from each of which we are to select two. of four questians

with answer A can be chosen in $\binom{4}{2}$ =6 ways .The total number of sets ,without ordering the sets ,is $6^5=7776$

4)$y = 1/(x^3-4x)$

$Dy/dx = (x^3-4x)\,0 - 1\,(3x^2-4)/(x^3-4x)^2$

$= -(3x^2-4)/(x^3-4x)^2$

b)$y = (x^3+6x)^{1/3}$

$dy/dx = 1/3(x^3+6x)^{-2/3}(3x^2+6)$

$= 1/3(3x^2+6)/(x^3+6x)^{-2/3}$

$= (x^2+2)/\sqrt[3]{(x^3+6x)^2}$

c)$y = (x^4-2x^3)^2$

$dy/dx = 2(x^4-2x^3)(4x^3-6x^2)$

$= 4x^5(x-2)(2x-3)$

### Tutorial409

### Questions

1)If the vectors $\vec{a}$ =(2 ,3 ,4 ) and $\vec{b}$ =(10 ,y ,z ) are perpendicular, how must y and z be related ?

2)Find the area of the triangle with the given vertices (7,3,4 ) (1 ,0,6) and (4 ,5 ,-2)

By Mr S.F.Xavier(Teacher)6473409490/4167322228

# உங்கள் வலிமையை அறிந்துகொள்ளுங்கள்

**Words of Peace**
பிறேம் ராவத் பற்றி மேலும் அறிந்து கொள்ள:
1.877.707 3221 Toll free
416 431 5000 தமிழ்
www.wopg.org www.tprf.org

## Know your strength

நீங்கள் யார் என்பது உங்களுக்குள்ள பிரச்சனைகளின் கூட்டுத்தொகையை விடப் பெரியதாகும்.

முதன் முறையாக யானைகளைப் பார்க்கப் பிரயாணம் செய்து இறுதியில் அதிகளவில் கற்றுக்கொண்ட ஒரு மனிதனைப் பற்றிய கதை. ஒருபோதும் யானையைக் காணாத ஒரு மனிதன் இருந்தான்: அவன் ஒரு போதுமே யானையைக் கண்டதில்லை. அதனால் அவன் ஒரு யானையைப் போய்ப் பார்ப்பதற்குத் தீர்மானித்து அது பற்றி விசாரணை செய்தான். அப்போது அவனுக்கு ஆபிரிக்காவில் உள்ள கிராமமொன்றில் பெரிய யானைகள் இருப்பதாகக் கூறப்பட்டது. அதைக்கேட்ட அந்த மனிதன் ஆபிரிக்காவிற்குப் போனான். அவன் போய் மிகப் பெரிய யானை ஒன்றைப் பார்த்தான்.

யானையை முன்பு கண்டிருக்காத படியால் அவன் மிகவும் ஆச்சரியம் அடைந்தான். அவன் யானையைப் பார்த்தபோது அந்த யானையானது மிகவும் மெல்லிய கயிற்றினால் அதன் காலில் கட்டப் பட்டிருந்ததைக் கண்டான். அவ்வளவுதான் அந்தப் பெரிய யானையானது மெல்லிய கயிற்றினால் கட்டப்பட்டு ஓர் இடத்தில் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறதா? என அதையிட்டு அவன் மிகவும் அதிசயப்பட்டான். அதனால் அவன் அதன் உரிமையாளனிடம் சென்று கேட்டான். ஐயா! இந்த யானைகள் பலம்வாய்ந்தன அல்லவா எனக் கேட்டான்.

அதற்குத் அதன் தலைவன், ஆம். எனக் கூறினான். அவை மிகமிகச் சக்தி வாய்ந்தவை எனக் கூறினார். "தலைவரே! என்னிடம் கேள்வி ஒன்று உள்ளது. எவ்விதம் அவ்வளவு பெரிய சக்திவாய்ந்த, திடமான மிருகத்தை மிகவும் மெல்லிய கயிற்றினால் கட்டிவைக்கக் கூடியதாக உள்ளது? அதற்கு அந்த தலைவன் சரி சரி நான் உங்களுக்குத் தெளிவுபடுத்து கிறேன். அவை குட்டிகளாக இருந்தபோது நாம் கயிற்றினால் கட்டிவைப்பதை பழக்கப்படுத்தியிருந்தோம். அப்போது அவை அசைய முற்பட்டபோது அவற்றினால் அசைய முடியவில்லை. அத்துடன் நாம் அவற்றை அப்படியே வைத்திருக்கிறோம்.

இப்போது அவை வளர்ந்துவிட்டன. மிகவும் வலிமையானவையாகி விட்டன. ஆனால் அவை முயற்சி செய்வதை கைவிட்டுவிட்டன. அத்துடன் அவை இந்தச் சிறிய கயிறுகள் தம்மை அவற்றின் இடத்திலேயே வைத்திருக்கும் என எண்ணுகின்றன. உண்மையிலேயே அவை முயற்சி செய்தால் இச்சிறு கயிற்றினால் அவற்றைத் தடுக்க முடியாது. அந்தளவு பலமான மிருகம். ஆனால் இந்த யானைகள் முயற்சி செய்வதைக் கைவிட்டுவிட்டன."

இக்கதையை நான் எதற்காகக் கூறுகிறேன்? ஏனெனில் ஒரு வழியில் இதுதான் நடைபெற்றுக் கொண்டிருக் கிறது. நாம் யார்? நீங்கள் யாரோ அது உங்கள் பிரச்சினைகளின் கூட்டுத் தொகையை விட எவ்வளவோ பெரியது. ஆனால் இப்பிரச்சினைகள் வந்து உங்களை இழுத்துப் பிடிக்கின்றன. அத்துடன் உங்கள் சக்தியை நீங்கள் உணர்வதில்லை. உங்கள் சொந்த வலிமையை நீங்கள் உணர்வதில்லை. மனிதர் என்ற ரீதியில் இந்தத் தடைகளை எல்லாம் கடந்து செல்லக்கூடிய அளவு வலிமை உங்களிடம் உள்ளது.

## நோயை வாங்காதே! நோயை கொடுக்காதே!

### Don't get. Don't give

#### எடுங்கள் அல்லது விடுங்கள்

தன்னை அறிந்து இன்பமுற அரிய வாய்ப்பு. ஞானிகள், வேதங்கள், எல்லா மதபோதனைகள், நூற்றாண்டுகளாக கூறுவது ஒன்றைத்தான். தனிமைப்படுத்து, தன்னைத்தான் அறிந்துகொள். வந்து போய் கொண்டிருக்கும் ஒவ்வொரு மூச்சும் எமக்கு தரப்பட்ட வரம். இது பலருக்கு புரிந்தும், புரியாமல் இருந்தனர். நேரமில்லை என்பர்.

இன்று முழு உலகமும் சட்டபூர்வமாக இதைத்தான் செய்யும்படி கட்டளை இடுகிறது. அரிய வாய்ப்பு தன்னுள்ளே சென்று, தன்னை அறிந்தால், மனிதன் மறந்துபோன மனிதப் பண்புகளை மீட்கலாம்.

அறிவு என்ற பேரில் தேவையற்ற வைக்கு முக்கியத்துவம் கொடுத்து, உணர்வுக்கு இடம்கொடாமல், இருந்தோம். அறிவுக்கும் உணர்வுக்கும் இடையே இருக்க வேண்டிய சமநிலையை மீட்கலாம். Isolation. Be with yourself. Enjoy the Peace within. Reach in, not reach out. தனிமைபடுத்தி, எம்முள்ளிருக்கும் புதையலை உணர்ந்து மகிழ்வோம். மனிதத் தன்மை நிறைந்த மானிடரைக் கொண்ட ஒரு புது யுகம் தோன்ற ஒரு வாய்ப்பு.


# EDUCATION

## Review Questions20-9

➤ CALCULUS & VECTORS

(i) A truck travels at 108 km/h over an east-west overpass highway 10m high. If a car passed under the over pass 2 seconds before towards south (north-south road) how close do car and truck come to each other in their travelling.

(ii) A car travelling up at a steady speed of 50km/h an inclined road as shown below.




Total mass of the car is 1400kg. If the car experiences the average resistive force 530N during the travel, determine the following

(i) Work done against the gravitational force in a 4 km drive.

(i) The required minimum power output of the engine to move the car for 4 km.


➤ BIOLOGY 12

Chemical analogues that mimic the structure of nucleotides incorporated into DNA and prevent DNA polymerase from building a complementary strand during DNA replication.

Explain why this is an effective method in treating the growth of cancer cells? Explain side effects of this method.

## Answer Key : 20-9

➤ CALCULUS & VECTORS 12




Assume that the shortest distance occurs "t" seconds after passing the overpass.
Truck speed = 30m/s
Car speed = 15 m/s
From the point P, The truck travelled 30 t m.
The car travelled ( 15 × 2 + 15t ) m

$d^2 = d_1^2 + (30t)^2$

$d_1^2 = (10)^2 + (30 + 15t)^2$

$d = \sqrt{1125t^2 + 900t + 1000}$

$\frac{d_{(d)}}{d_{(t)}} = 2250t + 900$

$2250t + 900 = 0\ ;\ t = -\frac{900}{2250}\ s$

Shortest distance occurs before truck comes to point P

By substituting the t value,
Distance = 28.6m

➤ PHYSICS 12 & IB

(i) Work done against gravitational force
$= mgh = 1400 \times 9.8 \times (0.2/7) \times 4000$ N

(ii) Work done against friction
$= 530$ N/m $\times 4000$m $= 2.12 \times 10^6$ N

Total work done = (i) + (ii)

Time taken to reach 4km, in seconds

$t = \frac{4km}{50km/h} \times \frac{3600s}{h}$

$power = \frac{work}{time}$

$power = \frac{3.688 \times 10^6}{288} = 1.23 \times 10^4\ w$

☎ 647 341 3975
Dr. K.A. Srikrishnaraj
KEEN TUTORING CENTRE

## ஒன்றாறியோவில்...

22ஆம் பக்கத்தொடர்ச்சி

கவும், 13 வயதுக்குட்பட்ட குழந்தைகளு டன் குறைந்தபட்சம் 2 ஆண்டுகள் அனுப வம் பெற்றவராகவும் மற்றும் இயக்குன ரால் அங்கீகரிக்கப்படவராகவும் இருக்க வேண்டும். குழந்தைகள் சேருவதற்கு முன்பு ஒரு வீடு பாதுகாப்பானது என்பதை அவர்கள் சரிபார்த்து, பராமரிப்பாளர்கள் மாகாண விதிகளையும், பராமரிப்பு நிறுவனங்களின் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளையும் பின்பற்றுவதை உறுதி செய்வதற்காக வழக்கமான ஆய்வு களை மேற்கொள்கின்றனர். இவர்கள் பராமரிப்பாளர்களுக்குப் பின்வரும் உதவிகளைச் செய்வர்.

- குழந்தைகளுக்கான வளர்ச்சியின் வெவ்வேறு கட்டங்களில் திட்டங்களை உருவாக்குதல்.
- சத்தான உணவுத் திட்டமிடல் பற்றி ஆலோசனை வழங்குதல்.
- பாதுகாப்பான மற்றும் பொருத்தமான பொம்மைகள் மற்றும் உபகரணங்களைத் தேர்வுசெய்யதல்.

**2. உரிமம் பெற்ற குழந்தை பராமரிப்பு மையம் - Licensed child care centre**

உரிமம் பெற்ற குழந்தை பராமரிப்பு மையங்கள் கைக்குழந்தைகள் மற்றும் குழந்தைகளையும், முன்பள்ளி மற்றும் பள்ளி வயது குழந்தைகளையும் பராமரிக் கின்றன. இவற்றில்

- முன்பள்ளிகள் (Nursery schools)
- முழு நாள் குழந்தை பராமரிப்பு (Full day Child Care)
- நீட்டிக்கப்பட்ட நேரப் பராமரிப்பு (Extended hours Child Care care)
- பாடசாலை செல்லும் குழந்தைகளுக்கு பாடசாலை நேரத்திற்கு முன்னரும் பாட சாலை நேரத்திற்குப் பின்னரும் வழங்கப் படும் பராமரிப்புச் சேவை (Before and-after school programs) ஆகியவை அடங்கும்.

இவ்வாறான குழந்தை பராமரிப்பு மையங் கள் பணியிடங்கள் (Workplaces), சமூக மையங்கள் (Community centres), பாட சாலைகள் (Schools) மற்றும் வழிபாட்டுத் தலங்கள் (Places of worship) உள்ளிட்ட பல்வேறு இடங்களில் இயங்குகின்றன.

மார்ச் 31, 2018 கணக்கெடுப்பின்படி, ஒன்ராரியோவில் 5,437 உரிமம் பெற்ற குழந்தை பராமரிப்பு மையங்கள் 427,032 குழந்தைகளுக்கான பராமரிப்பு இடங் களைக் கொண்டுள்ளன.

**இவ்வாறான உரிமம் பெற்ற குழந்தை பராமரிப்பு மையங்களிலுள்ள நன்மைகள்:**

1. இவை அரசினால் வரையறுக்கப்பட்டு கண்காணிக்கப்படுபவை.(Government-regulated and inspected)
2. உங்கள் குழந்தைகள் ஒரே வயதுக் குழந்தைகளுடன் பராமரிக்கப்படுவார்கள்.
3. ஆரம்பகால குழந்தை பருவ கல்வியில் பயிற்சி பெற்ற நிபுணர்களின் சேவை இங்கே இருக்கும். (Professionals with training in early childhood education)
4. இந்த மையங்கள் அரசினால் வரையறுக்கப்பட்ட தரங்களை (Standards) பூர்த்தி செய்ய வேண்டும்.
5. இங்கே குழந்தையின் வளர்ச்சிக்கேற்ப வெவ்வேறு கட்டங்களில் குழந்தைகளுக் காக செயல்பாடுகள் வடிவமைக்கப்படும்.
6. குழந்தைகளின் பெற்றோருக்கு பரா மரிப்புக் கட்டண மானியம் கிடைக்கக் கூடும்
7. கண்காணிப்புகள் -Inspections

வருடத்திற்கு ஒரு முறையாவது, கல்வி அமைச்சு குழந்தை பராமரிப்பு மையங் களை குறிப்பிட்ட மாகாண சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டுத் தரங்களைப் பூர்த்தி செய்வதை உறுதி செய்யும்.

**3. பாடசாலை நேரத்திற்கு முன்னும் பின்னும் பராமரிப்பு - Before and after school care:**

இச்சேவை தேவையாகவுள்ள பாடசாலை கள், முழு நாள் மழலையர் பள்ளி (full-day kindergarten) முதல் ஆறாம் வகுப்பு வரை உள்ள குழந்தைகளுக்குப் பாட சாலை நேரத்திற்கு முன்பும் பின்பும் திட்டங்களை வழங்குகின்றன. கல்வி வாரி யங்கள் பாடசாலை நேரத்திற்கு முன்பும் பின்பும் திட்டங்களை நேரடியாகவோ அல்லது கல்வி அமைப்பில் திட்டங்களை வழங்கும் மூன்றாம் தரப்பு வழங்குநர்கள் மூலமாகவோ வழங்கப்படலாம். இந்தத் திட்டங்களில் பெரும்பாலானவை உரிமம் பெற்றவை, சில திட்டங்கள் கல்விச் சபைகளினால் நடத்தப்படுகின்றன.

**4. உரிமம் பெறாத வீட்டு குழந்தை பராமரிப்பு-Unlicensed home child care:**

உரிமம் பெறாத வீட்டு குழந்தை பராமரிப் பாளர்கள் கல்வி அமைச்சினால் பரி சோதிக்கப்படுவதில்லை, மேலும் பெரும் பாலான மாகாண தரங்களை பூர்த்தி செய்ய தேவையில்லை. எவ்வாறாயினும், சட்டவிரோதமாகச் செயல்படும் குழந்தை பராமரிப்பு வழங்குநர்கள் குறித்து பொது மக்களிடமிருந்து வரும் அனைத்துப் புகார் களையும் கல்வி அமைச்சு விசாரணை செய்யும்.

அதிகபட்ச குழந்தைகள் எண்ணிக்கை (வீட்டில் எத்தனை பெரியவர்கள் இருந்தா லும்) உரிமம் பெறாத குழந்தை பராமரிப்பு வழங்குனர்கள் நான்கு வயதுக்குக் குறைந்த (தங்கள் சொந்தக் குழந்தைகள் உட்பட) 5க்கும் மேற்பட்ட குழந்தைகளைப் பராமரிக்க அனுமதிக்கப் படுவதில்லை.

உரிமம் பெற்ற வீட்டு குழந்தை பராமரிப்பு வழங்குநர்கள் 4 வயதிற்குட்பட்ட சொந்தக் குழந்தைகள் உட்பட 6க்கும் மேற்பட்ட குழந்தைகளைப் பராமரிக்க அனுமதிக்கப் படுவதில்லை.

உரிமம் பெறாத அல்லது உரிமம் பெற்ற வீட்டு குழந்தை பராமரிப்பு வழங்குனர் கள் ஒன்றிற்கு மேற்பட்ட வீடுகளில் பராமரிப்புச் சேவையை வழங்கமுடியது.

*இத்தகவல்கல் ஒன்ராரியோ அரசினால் ஜூலை 02, 2019இல் வெளியிடப்பட்டது.*




BEST DEAL FROM ROGERS

ROGERS™

Unbeatable Cell Phone Deals

- Home Phone
- Tamil Chanels
- High Speed -150mbps Unlimited Internet (Free advanced WiFi Modem)
- Home phone /Internet /Digital Basic TV

Call For Best Deal

- $35/M 2Gb
- $45/M 4GB
- $50 /M 6Gb
- $55/M 8GB
- $65/M 10GB
- No Contract
- Canada wide free call
- Unlimited world wide text message

Free unlimited calls for
- INDIA
- PAKISTAN
- CHINA
- SINGAPORE
- Japan
- Korea
- Malaysia and Indonesia



ROGERS Smart Home Monitoring

SAVE UP TO $1350

• Free camera • Free thermostat • Free door lock

Best Internet Offer for Students

Ignite 1gb unlimited internet with free advance wifi modem

தமிழில் தொடர்புகளுக்கு: SANJAY : 416.315.2917

# ஒருத்தி - திரைவிமர்சனம்



ஞா. ஆரணி

இலங்கையிலும் கனடாவிலும் எடுக்கப்பட்ட ஒரு கனேடியத் தமிழ்த் திரைப்படம் இதுவாகும். 2019இல் வெளிவந்த இப்படம் அண்மையில் YouTubeஇல் வெளியிடப்பட்டுள்ளது.

இப்படம் அரசி என்ற பெண்ணின் வாழ்க்கையைப் பற்றியது. இலங்கையில் வாழும் இவரது குடும்பம் அங்கு போரினால் உருவாகும் பிரச்சினைகளில் இருந்து பிள்ளைகளைக் காக்கக் கனடாவுக்கு 2000ஆம் ஆண்டில் வருகின்றனர். இப்படம் இவர்களது குடும்பம், குறிப்பாக மகள் அரசி படும் கஷ்டங்களை விபரிக்கிறது.

தரத்தைப் பார்க்கும்போது இப்படம் இந்திய வணிகத் தயாரிப்புப் படங்களின் தரத்தில் எடுக்கப்பட்டிருக்கிறது. காட்சிகளும் ஒலியமைப்பும் நன்றாக இருந்தன. இலங்கைக்குச் சென்று அங்கு நடைபெறும் காட்சிகளும் இயற்கையாக எடுக்கப்பட்டுள்ளன. கதாபாத்திரங்களான தாய், தந்தை மற்றும் அரசியின் நடிப்பு நன்றாக இருந்தன. சோனியா சிவா (அரசி), மதி வாசன் (தந்தை), கோதை அமுதன் (தாய்) ஆகியோர் தமது பாத்திரமாகவே மாறி நடித்திருந்தனர்.

ஒரு பெண் கனடாவுக்குத் தனது குடும்பத்துடன் புலம்பெயர்ந்து தன் குடும்பத்தை முன்னேற்ற எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் அதை எவ்வாறு உள்வாங்கி அவர் முன்னேறுகிறார் என்று இப்படம் பார்வையாளர்களுக்கு விளக்க முற்படுகிறது. இது ஒரு நல்ல முயற்சி.
அரசியின் கதாபாத்திரம் மன உறுதி



கொண்டவராகக் காட்டப்படுகிறது. ஆனால் கதை மிகவும் சாதாரணமாகச் செல்வதால், அரசியின் உறுதியைவிட வாழ்க்கையில் என்ன நடக்கிறதோ அதைப்பின்பற்றி அவர் செல்வதுபோல் வெளிக்காட்டப்பட்டுள்ளது.

பொதுவாகத் திரைப்படங்கள் முற்பகுதியில் ஒருவர் எதிர்கொள்ளும் சவால்களைப் பற்றியும் பிற்பகுதியில் அவர் அதை எவ்வாறு எதிர்கொண்டு வெல்கிறார் எனவும் காட்டப்படுவதால் பார்வையாளர்களுக்குக் கதையில் ஆர்வமும் கதாபாத்திரங்கள் மீது ஊக்குவிப்பும் இருக்கும். இங்கு கதை நீண்ட நேரமாகச் சோகமாகத் தொடர்ந்து இறுதியில் திடீரென உறுதியுடன் அரசி நடந்து ஒரு நல்ல முடிவு வந்ததுபோல் இருக்கிறது. அரசியின் திறமையை வெளிக்கொணர சந்தர்ப்பம் கொடுக்கப்படவில்லை.

காதலன் கதாநாயகியுடன் உறவை முறிக்கத் தயங்கும் காட்சியில், அரசி உறுதியுடன் தனக்குப் படிப்பும் தனது குடும்பமும் தான் முக்கியம் என்றும், அதனால் காதலன் வீணாக அவளுக்காகக் காத்திருக்கத் தேவையில்லை என்றும், அவன் விரும்பியதைச் செய்யலாம், அவளால் அவளது குடும்பத்தைக் காப்பாற்ற முடியும் என்று துணிவுடன் திடமாக அரசி கூறிய காட்சி மிகவும் சிறப்பாக அமைந்துள்ளது. பின்னர் அவ்வாறே நடந்து, தகுதியானவரையும், விரும்பிய ஒருவரையும் அரசி கல்யாணம் செய்து இருந்தால் படம் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும்.

ஒருவேளை படத்தின் ஆரம்பத்திலேயே அரசி படித்து முடித்துப் பெரிய பெண்ணாக இருந்து, நடுப்பகுதியிலேயே அவருக்கு இலங்கையில் நடைபெற்ற துயரம் நடந்து, பின்பகுதியில் அவர் அதைச் சவாலாக எடுத்து முன்னேறுவதைக் காட்டியிருந்தால், படத்தில் அரசியின் திறமைகளைப் பார்வையாளர்களுக்கு வெளிக்காட்டச் சந்தர்ப்பம் கிடைத்திருக்கும். படமும் சுவாரசியமாகவும் பெண்களுக்கு முன்னுதாரணமாகவும் இருந்திருக்கும். இங்கு படத்தில் பெண்களின் கஷ்டங்கள் தான் கூடுதலாகக் காட்டப்படுகின்றன.

இதுவரை இலங்கைத் தமிழரின் தயாரிப்பில் வெளிவந்து நான் பார்த்த படங்களில் இது சிறப்பாக எடுக்கப்பட்டிருந்தது. ஒலிப்பதிவும் தரகர் வரும்



நகைச்சுவைக் காட்சிகளைத் தவிர ஏனைய நேரம் முழுவதும் மிகவும் நன்றாக இருந்தது குறிப்பிடத்தக்க விடயமாகும். இதுபோன்ற எம்மவரது படங்கள் பல வரவேண்டும்.

# MORTGAGE SOLUTIONS

## SAVE UPTO 75% REFINANCE

## MONTHLY SAVING $2,409

| | | Before | After |
|---|---|---|---|
| Mortgage Payment | $320,000 @ 2.90% | $1,498.02 | - |
| Auto Loan | $21,000 @ 7.50% | $764.25 | $0.00 |
| Line of Credit - 1 | $16,000 @ 6.50% | $566.67 | $0.00 |
| Line of Credit -2 | $12,500 @ 7.00% | $447.92 | $0.00 |
| Credit Card -1 | $ 8,800 @12.00% | $352.00 | $0.00 |
| Credit Card - 2 | $ 5,200 @ 19.00% | $238.34 | $0.00 |
| Store Card | $ 3,000 @ 24.00% | $150.00 | $0.00 |
| New Mortgage | $386,500 @ 2.9% | | $1,605.00 |
| Total Debt | | $ 386,500.00 | $ 386,500.00 |
| Total Payment | | $4,014.20 | $1,524.55 |



**KIRUBA THANABALASINGHAM**

Mortgage Agent Lic# M12002440

info@mortgagesolutions.ca

www.MortgageSolutions.ca

Ultimate Mortgage and Finance Solutions Inc. Lic#11995

## Prime + 1% Lower Rate

## $50,000 EQUITY LOAN

## GET APPROVED WITHIN 24 HOURS


## $375 Mo.

## 416.298.2777

# MARKHAM & STEELES - BLUE BUILDING

B105 - 3341 Markham Road, Toronto, ON M1X 0A5



BUYING OR SELLING
Indra Michael Xavier
Sales Representative
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
905-201-9977


we always care at . . .
Bridletowne Dental
Dr. Jeyapalan. BDS., DDS.
Dentist
416 492 3775
Bridletowne Dental
2555 Warden Avenue. Scarborough M1W 2H5
( close to Warden and Finch , in the TD BANK PLAZA)


வீடு வாங்க,விற்க,வாடகைக்கு பெற்றிட...
வைத்திய பரிசோதனையற்ற காப்புறுதிக்கும்...
Vany Jeganmohan
Realtor/Financial Advisor
416.670.7436
www.vanyhomes.ca
www.vjsfinancial.ca
✓ Buy/Sell/ Lease
✓ Life Insurance
✓ Super Visa
✓ Non Medical
✓ RESP
VJS Financial Services
We ease your cost of living
5215 Finch Ave East, Unit 222 Toronto ON M1S 0C2



PLUS YOU
DRIVING SCHOOL
CERTIFIED ROAD SAFETY INSTRUCTOR
NOW HIRING
DRIVING INSTRUCTORS
Training will be provided
For more Info:
Balan 416.999.7727


வீடு வாடகைக்கு...
வாங்க...
விற்க...
Vasanta Raviendren
Cell: 416-716-1540
Life Insurance
Non Medical
Super Visa
RESP
Mega Financial Group
HomeLife/GTA Realty Inc. Brokerage*
5215 Finch Ave East. Unit 203 Toronto ON M1S 0C2


IT'S YOUR MOVE...
Let me help you make the right one.
Century 21
Titans Realty Inc.,
Brokerage.
Sudharshan
Muthucumaraswamy
Broker
Direct: 416.567.6209
TEAM TITANS
Residential / Commercial / Purchase / Sale / Investment / Leasing


வீடு வாங்க, விற்க நட்பான சேவை
Ponnambalam Mahalingam
Sales Representative
Dir: 416.729.0955
arunponmahal@gmail.com
HomeLife/ Future Realty Inc. Brokerage*
7 Eastvale Dr., Suite 205 Markham ON L3S 4N8 Bus: 905.201.9977
வருமான வரி சேவை Income Tax e-File
416.288.1548 / 416.729.0955


Coaching • Yoga • Meditation • Healing • Astro Guidance
S&S EVOLVE
Varany Sivathasan
Life Coach • Healer
Yoga & Meditation Instructor
416.875.0553
info@ssevolve.com
Unit 8, 151 Nashdene Court, Scarborough,ON M1V 2T3


ATSEY
FINANCIAL GROUP LTD
MORTGAGE STRESS?
WORK WITH ALL MAJOR LENDERS
2nd and private financing available.
Call 416.333.9393
MORTGAGE ALLIANCE
PURCHASE • REFINANCE • INVESTMENT PROPERTIES


ROYAL MEDICAL AND
PROFESSIONAL CENTRE
2225 Markham Road, Scarborough
UNITS AVAILABLE FOR SALE
Amalraj Joseph
Sales Representative
416.300.8294
amalraj.joseph@gmail.com
HomeLife/GTA Realty Inc.


B.J ரெய்லரிங் அன் ஜுவலரி
TAILORING & JEWELLERY CLASSES
We provide training in
Jewellery making and Tailoring
தையல் பயிற்சி மற்றும் ஜுவலரி செய்யும் முறைகள்
கற்றுக் கொடுக்கப்படும்
தொடர்புகளுக்கு: 416-720-4472
email: jegathees2007@gmail.com


HOMES & CONDOS FOR SALE
Brock/Rossland - Whitby
For sale
Gas Station
York St/Bremner St - Toronto
$699,900
Condo Apt - 2BR/1WR
Cambray Rd/North St - Kawartha
$369,900
Bungalow -2BR/1WR
1st & 2nd mortgage availabe upto 1Million
Specialized in New Condos & Cottages
A.ANTON JEEVA, FRI
Broker
Dir: 416.575.5055
anton.jeeva@gmail.com
www.getanton.com
RE/MAX
ROYAL PROPERTIES INC
Phone: (416) 321-0110


www.tamilvanakkam.com
Tamil
VANAKKAM
தமிழ் வணக்கம்
உலகத் தமிழர்களின் இணைப்புப் பாலம்